பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி 27 சனிக்கிழமை (10-04-1999) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 46

# யுத்தத்தை நிறுத்தி பேச்சு நடத்த கொழும்பில் பெற்றோர் மறியல்!

## கோட்டை ரயில் நிலையம் முன் நேற்று உண்ணாவிரதப் போர்

கொழும்பு, ஏப்ரல்10

விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா அரசாங்கமும் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்று கோரி கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று முழுநாளும் உண்ணாவிரதம் மற்றும் மறியல் போராட்டங்கள் இடம் பெற்றன.

காணாமற்போன படையினரின் பெற்றோர்கள் அமைப்பு, சமாதானத்துக்கான பெற்றோர் அமைப்பு, யாழ்.மாவட்டத்தில் காணாமற் போனோரின் பெற்றோர் அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம் பெற்றது.

(8ஆம் புக்கம் பார்க்க)

## மேலும் 7 எலும்புக்கூடுகள், ரவைகள் ஸ்ரேடியப் புதைகுழியில் நேற்று மீட்பு!

### இதுவரை 19 சடலங்களின் என்புகள் கிடைத்தன

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.துரையப்பா விளையாட்டரங் கப் பகுதியில் மூன்றாவது நாளாக நேற்று இடம்பெற்ற அகழ்வுப் பணிக ளின் போது மேலும் ஏழு சடலங்களுக் குரிய மண்டையோடுகளும், எலும்புக் கூடுகளும் மற்றும் எச்சங்களும் மீட்கப் பட்டுள்ளன.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு ஆரம்பமான பணி பிற்பகல் 1.30 மணி வரை இடம் பெற்றது.

நேற்றைய அகழ்வின்போது ரி-56 ரக இயந்திரத் துப்பாக்கிக்குரிய நான்கு ரவைகள், 7.62 ரக கலிபர் துப்பாக்கிகளுக்குரிய ஐந்து ரவைகள் மற்றும் இரு அலுமினியத் தகடுகள் மீட்கப்பட்டன.

பச்சைநிற பெயின்ற் பூசப்பட்ட அந்தத் தகட்டின் ஒரு பக்கத்தில் 'ஜொனி' என்றும், மறுபக்கத்தில் 'பூல்' (Fool) என்றும் ஆங்கில எழுத்துக்க ளில் எழுதப்பட்டிருந்தன.

நிலமட்டத்தில் இருந்து 2அடிவரை தோண்டப்பட்ட சமயம் இந்தப்பொருள் கள் அகப்பட்டன.

நேற்று மீட்கப்பட்ட 7 எலும்புக் கூடுகளில் இடுப்புப் பகுதிக்குக் கீழே முழுமையான எலும்புக்கூடு ஒன்றும் மண்டையோட்டுடனான எலும்புக்கூட் டுத் தொகுதி ஒன்றும் அடங்கும்.

கடந்த மூன்று தினங்களில் 16 சடலங்களுக்குரிய எலும்புக்கூடுகள், மண்டை ஓடுகள் மீட்கப்பட்டுள்ளன.

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் ஜீப்வண்டி குண்டினால் தகர்ப்பு!

### மட்டுநகரில் சம்பவம்

மட்டக்களப்பு,ஏப்.10

மடடக்களப்பு நகரப்பகுதியில் ஈ. பி.டி.பி. அமைப்பின் ஜீப் வண்டி ஒன்று நேற்று மாலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

அரசடி வீதியில் உள்ள கராஜ் ஒன்றில் திருத்த வேலைகளுக்காக நிறுத்தப்பட்டிருந்த இந்த ஜீப் வண்டி, இனந்தெரியாதவர்கள் பொருத்திய குண்டினால் வெடித்துச் சிதறி முற் றாகச் சேதமடைந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மட்டக்களப்புப் பொலீஸார் விசாரணைகளை ஆரம் பித்துள்ளனர்.

(ஐ-3-21)

## சா.த.பரீட்சை முடிவுகள் 25 ஆம் திகதிக்கு முன்!

கொழும்பு,ஏப்.10

கடந்த டிசெம்பர் மாதம் நடை பெற்ற ஜீ.சி.ஈ. (சாதரண) தரப் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 25ஆம் திகதி யளவில் வெளிவரும் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

புத்தாண்டுக்கு முன்னர் பரீட்சை முடிவுகளை வெளியிட பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந் தது என்றும் -

பரீட்சைத் திணைக்கள அதிகாரி களில் பெரும்பாலானவர்கள் தேர்தல் கடமைக்கு சென்றதால் பரீட்சை முடி வுகளை திட்டமிட்டபடி வெளியிட முடியாது போயிற்று என்றும் - அவர் தெரிவித்தார்.

(உ-3)

## அமைச்சரவையில் மாற்றம் புத்தாண்டோடு வரும்!

கொழும்பு,ஏப்.10

புத்தாண்டுடன் அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள் செய்யப்படவிருப் பதாக கொழும்புச் செய்தி வட்டாரங் கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மாகாணசபைகளின் முதலமைச் சர்கள் பதவிக்குத் தெரிவாகியுள்ள சமூக சேவைகள் அமைச்சர் பேர்ட்டி பிரேமலால், வனவள அமைச்சர் நந்த மித்ர எக்கநாயக்க, போக்குவரத்து பிரதி அமைச்சர் அத்தாவுட செனிவி ரத்தின, மற்றுமொரு பிரதி அமைச்ச ரான வீரவன்னி சமரவீர ஆகியோர் தமது முதலமைச்சர் பதவிகளை ஏற்பதற்காக அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்யவிருக்கின்றனர்.

இவர்களது இடத்துக்குப் புதியவர் கள் நியமிக்கப்படுவர்.

அத்துடன் மாகாணசபைத் தேர்த லில் ஆளும்கட்சி தோல்வியடைந்த தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத் தும் அமைச்சர்களை மாற்ற வேண்டும் என்று ஒரு யோசனை முன்வைக்கப் பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

அமைச்சரவையில இருந்து வெளி யேற்றப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) தலைவி சிறிமானி அத்துலத்முத லிக்கு மீண்டும் அமைச்சர் பதவி வழங்குவது தொடர்பாக ஆராயப்படு வதாகவும் கூறப்படுகின்றது.

(உ-3)

### படையினர் தேடுதல்

வலிவடக்கு,ஏப்.10

திருநெல்வேலி, கொக்குவில் கிழக்கு, நந்தாவில் பகுதிகள் நேற்றுப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம் பெற்றது.

இதேவேளை -

நல்லூர் வடக்கு, கல்வியங்காடு பகுதிகளிலும் நேற்றுக் காலை படை யினர் வீடுகளில் சோதனை நடத்தினர்.

### படைத்தரப்பு விளக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

'பாலியல் வல்லுறவு குறித்து முறைப்பாடு' என்ற தலைப்பில் கடந்த 6ஆம் திகதி உதயனின் முன்பக்கத் தில் வெளியான செய்தி குறித்து பலாலி இராணுவத் தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கி றது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

சுமார் 28 வயதுடைய ஆசிரியை ஒருவர் பாதுகாப்பு படை வீரர் ஒரு வரால் பாலியல் வல்லுறவிற்கு உட் படுத்தப்பட்டு கர்ப்பமடைந்துள்ளார் எனக் கடந்த 5ஆம் திகதி உதயன் பத்திரிகையில் செய்தி வெளியாகி யிருந்தது. ஆனால் இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போது இது முற்றிலும் பொய்யான செய்தி எனத் தெரியவந்துள்ளது.

(7ஆம் பக்கம் பார்க்க)

## மடு தேவாலயத்தில் நேற்று பிரார்த்தனைப் போராட்டம்

மன்னார்,ஏப்.10

புனித மடுத் தேவாலயப் பகுதி யில் இருந்து படைகள் விலக்கப்பட்டு அதன் புனிதத் தன்மை பேணப்பட வேண்டும் எனக்கோரி மடுத்தேவா லயத்தில் நேற்று வழிபாடும் பிரார்த் தனைகளும் இடம்பெற்றன.

மன்னார் ஆயர் வண. ராயப்பு யோசேவ் தலைமையில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த 52 மத குருமார்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கத்தோலிக்க ஆயர் மன்றத் செய லாளரும் இரத்தினபுரி மறை மாவட்ட ஆயருமான வண. மல்கம் ரஞ்சித்தும் இந்தப் பிரார்த்தனையில் பங்குபற்றி னார்.

அங்குள்ள அகதி முகாமில் தங்கி யுள்ள சுமார் 2 ஆயிரம் பொது மக் களும் இந்தப் பிரார்த்தனையில் பங்கு பற்றினர்.

நாட்டில் சமாதானச் சூழ்நிலை ஏற் படவும் -

மடுவின் புனிதத்தன்மை பாதுகாக் கப்படவும் -

இந்தப் பிரார்த்தனை நடத்தப்பட் டதாகத் தேவாலய நிர்வாகம் தெரிவித் தது.

(ஐ-3)

### மடு தேவாலய விவகாரம்

## ஆயர்கள் இந்த வாரம் ஜனாதிபதியை சந்திப்பர்

மன்னார்,ஏப்.10

மடுமாதா தேவாலயப் பிரதேசத் தில் நிலைகொண்டுள்ள படையி னரை வாபஸ் பெறுமாறு கத்தோலிக்க ஆயர் பேரவை இவ்வாரம் நேரடியாகக் கோரவுள்ளது.

ஆயர் பேரவை ஜனாதிபதியை இவ்வாரம் சந்திக்கும் என்றும் -

அச்சமயம் மடுப்பகுதியில் உள்ள படையினரை வாபஸ் பெறுமாறு அவர் கள் கோருவர் என்றும் -

மன்னார் ஆயர் வண.ராயப்பு யோசெப் தெரிவித்தார்.

மடுமாதா தேவாலயப் பிரதேசத் தில் படையினர் நிலைகொண்டிருப்ப தால் "அந்தப் பகுதியில் மோதல் வெடிக்கும் அபாயம் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-3)

### படையினர் கைப்பற்றிய

## இரணைஇலுப்பைக்குளத்தில் பயிர் செய்ய அனுமதி மறுப்பு

வவுனியா,ஏப்.10

புதிதாக விடுவிக்கப்பட்ட இரணை இலுப்பைக்குளம் பகுதியில் விவசா யம் செய்வதற்குப் படையினர் அனு மதி மறுத்துள்ளதால் தமக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று அப் பகுதி விவசாயிகள் கோரி உள்ளனர்.

நேற்று அந்தப் பகுதிக்கு விஜயம் செய்த வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தலைமையிலான குழுவினரி டமே இந்தக் கோரிக்கையை அவர் கள் விடுத்தனர்.

தாம் முன்னர் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட நிலங்களில் தொடர்ந் தும் விவசாயம் செய்யப் படையினர் தற்போது அனுமதி மறுத்துள்ளனர் என்றும் -

அதன் காரணமாக பாதிக்கப்பட் டுள்ள தமக்கு நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டும் என்றும் -

அவர்கள் தெரிவித்தனர்.

இது விடயத்தை உயர் அதிகாரி களிடம் தெரிவித்து நஷ்டஈடு பெற றுத்தர முயற்சிப்பதாக அரச அதிபர் உறுதி அளித்தார்.

(ஐ-3)

### செங்கலடியில் குண்டு மீட்பு

மட்டக்களப்பு,ஏப்.10

மட்டக்களப்பு - பொலன்னறுவ வீதியில் செங்கலடியில் நேற்றுப் பிற் பகல் 12.45 மணியளவில் 5 கிலோ நிறையுடைய குண்டு ஒன்று படை யினரால் கைப்பற்றப்பட்டுச் செயலி ழக்கச் செய்யப்பட்டது.

படையினரின் வாகன அணியை இலக்கு வைத்து இந்தக்குண்டு வைக் கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படு கிறது.

கிழக்கில் புலிகளின் தாக்குதல்கள் அண்மைக்காலத்தில் அதிகரித்திருப் பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-3-21)

உள்ளே சஞ்சிகையில்.......

செங்கை ஆழியானின்
போரே நீ போ....!
(சமகாலத் தொடர் நவீனம்)

அத்துடன

மகாதேவா ஜோதிடரின்
உங்கள் இராசிக்குரிய
புதுவருடப் பலன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

செல்வன்

## கணேசையா அமலன்

(தண்ணீரூற்று, முள்ளியவளை)

முள்ளியவளை ஓய்வு பெற்ற அதிபர், அம்பலவாணர் கணேசையா- ஜெயரஞ்சிதமலர் (தங்கன்) தம்பதிகளின் மூத்த புதல்வனும், சங்கானை அரசடி வைரவ கோயிலடியைச் சேர்ந்த அப்பாத்துரை இரத்தினசாமிக் குருக்களின் பேரனுமாகிய கணேசையா அமலன் 01-04-99 இல் முள்ளியவளையில் காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் 05-04-99இல் முள்ளியவளையில் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. இரத்தினசாமிக் குருக்கள்
(பேரனார்)

அரசடி வீதி,
சங்கானை.

(64658)

## சண்முகம் இராசலிங்கம்

(ஓய்வுபெற்ற தபால் சேவகர், கொக்குவில்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராசலிங்கம் அவர்கள் 8-4-99 வியாழக்கிழமை இரவு 11.00 மணிக்கு இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சண்முகம் பூரணத்தின் மூத்த புத்திரனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மாதேவி பிரேமாதேவி, பரமேஸ்வரலிங்கம் (சுவிஸ்), பத்மலிங்கம் (சுவிஸ்), பாலதேவி (கனடா), பற்குணலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாலிங்கம் (சுவிஸ்), தங்கவடிவேலு (சிற்றி பேக்கரி, தும்பளை பருத்தித்துறை), தவறஜினி (சுவிஸ்), பிரேமா (இணுவில்), சுகுணகுமார் (கனடா), ஞானம்பாள் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும் துளசிதாசன், கஜன், சுஜன், ஜெகசொரூபி, ரூபினி, அரவிந், பகிதரன், சஜன், அஜித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-4-99) சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
சி. தங்கவடிவேலு
(மருமகன்)
(சிற்றி பேக்கரி, தும்பளை)
பரமேஸ்வரி
(மனைவி)

"பத்மகிரி"
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(64662)

## திருமதி குமாரசாமி சொர்னேஸ்வரி

திருமதி குமாரசாமி சொர்னேஸ்வரி 8-4-99 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும் மற்றும் முத்துக்குமாரு குமாரசாமி (ஓய்வுபெற்ற கலால் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் தர்மலிங்கம், சுந்தரலிங்கம், புவனேஸ்வரி, சண்முகலிங்கம், சௌவுந்தரராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஏகாம்பரதாசன், திருமதி சிவதாஸ் இந்திரா, திருமதி இராஜேஸ்வரன் சறோஜா, சுதாகரன், செல்வி சித்திரா, திருமதி சிறிகரன் றஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி நடராஜா புவனேஸ்வரியின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (11-4-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு 106/2, வெற்றியர் ஒழுங்கை, ஆனந்தம் வடலி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்து இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ம. கதிர்காமநாதன்
(மருமகன்)
கச்சேரி,
யாழ்ப்பாணம்.

106/2, வெற்றியர் ஒழுங்கை,
ஆனந்தம் வடலி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(64638)

திருமதி

## பாலசிங்கம் இராசம்மா

காரைநகர் களபூமி வழுக்கோடையைச் சேர்ந்த திருமதி பாலசிங்கம் இராசம்மா அவர்கள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. சண்முகம் திருமதி சின்னக்குட்டி அவர்களின் அன்பு மகளும் திரு. முருகேசு திருமதி காசிபதிபிள்ளை அவர்களின் அன்பு மருமகளும் முன்னாள் அரசாங்க ஒப்பந்தக்காரரான காலஞ்சென்ற திரு. பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-4-99) சனிக்கிழமை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. வசந்தகுலநாயகி

வழுக்கோடை,
களபூமி,
காரைநகர்.

(64670)

# சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாணர் வீரகத்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

ஏப்ரல் 29 ஆம் திகதி தேர் உற்சவமும் 30 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ-117)

★ ★ ★

சாவகச்சேரி கல்வயல் ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய அலங்கார உற்சவத்தை ஒட்டிய சங்காபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ஐ-117)

# வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

விளையாட்டு அமைச்சினால் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் வலைப்பந்தாட்டப் போட்டியில் அரையிறுதி ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இப் போட்டி தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

CASIO
கல்வியங்காடு.
O/L - A/L
Day Classes
சகல பாடங்களும்
15-04-99 இல் ஆரம்பம்
வழமையான
ஆசிரியர்களுடன்
ஆர்த்தீகன், சிவராசா
- இயக்குநர்
A. இராகவன்
(சி/7152)

ராஜா
யாழ்ப்பாணம்.
சூரியா - முரளி - ஜீவிதா
ரசிகா - மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த
காதலே
நிம்மதி
இன்று காட்சிகள்
10-30, 2-30, 5-00
(சி/7009)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
வெள்ளி, சனி
கே. பாலச்சந்தரின்
கையளவு
மனசு
[ Part VII ]
காட்சிகள் 10.30, 2.30
(பழைய நேரம்)
FAX No. 070 - 212223
FOREIGN T.P. No.
0094 - 70-212223
(64651)

நாகம்ஸ்
சுன்னாகம்.
இன்று
கார்த்திக், தேவயானி
மணிவண்ணன் நடித்த
உதவிக்கு
வரலாமா
காட்சிகள்
11-00, 2-30
(64664)

# மரண அறிவித்தல்கள்

## க. சி. செல்லப்பா

இணுவில் மேற்கைச் சேர்ந்த க. சி. செல்லப்பா (தாமோதரம் ஸ்ரோர்ஸ், மன்னார்) அவர்கள் 9-4-99 அன்று காலமாகிவிட்டார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

இணுவில் மேற்கு,
இணுவில்.

[64671]

## கந்தையா இராசரத்தினம்

[ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்]

இணுவில் மேற்கைச் சேர்ந்த கந்தையா இராசரத்தினம் 08-04-1999 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் குமரேசு, விசுவலிங்கம் [விநாயகர் உரக் களஞ்சியம், இணுவில்], கைலாயபிள்ளை [ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்], குமாரசாமி [நிர்வாகி, சிவசக்தி றேடர்ஸ்] ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற விதானை சிவசம்புவின் அன்பு மருமகனும் நித்தியானந்தன் [ஆசிரியர், வவுனியா], புஸ்பகுமாரி, வசந்தகுமாரி, காலஞ்சென்ற கமலானந்தன், பவானந்தன், மணிவண்ணன் [ஜேர்மனி], தாரணி [கனடா], வான்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்நாதன் [இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்], காலஞ்சென்ற தேவநேரு [முன்னாள் கிராம உத்தியோகத்தர்], தனலட்சுமி, கருணாநிதி [கனடா], மரிஸ்ரெலா [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [10-04-99] சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10-00 மணியளவில் காரைக்கால் மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. அருள்நாதன்
[மருமகன்]

இணுவில் மேற்கு,
இணுவில்.

[64659]

## சின்னர் அரியகுட்டி

முடமாவடியைப் பிறப்பிடமாகவும் 205/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் அரியகுட்டி 09-04-99 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னர், காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து மரியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவரான பூமணி, சிவமணி (கொழும்பு), கழுகாசலம், கங்காதரம் (கங்கா போட்டோ) மனோன்மணி, இந்திராணி, சிறிதரன் (பிரான்ஸ்), தணிகாசலம், சந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (காட்டிலாகா), காலஞ்சென்ற ஜேம்ஸ் (C.W.E.), காலஞ்சென்ற மகேந்திரன் (ரக்ரர் உரிமையாளர்), இந்திராதேவி, சிறிசக்தி, இந்திரசேகர, புனிதவதி, சித்திரா, பவானி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 205/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று (10-04-99) சனிக்கிழமை பி. ப. 2.30 மணியளவில் இறுதிக் கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. கழுகாசலம்
(மகன்)

205/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(64663)

## சாமிநாதர் அந்தோனிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், ஆயுர்வேதவைத்தியர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் 128, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சாமிநாதர் அந்தோனிப்பிள்ளை 09-04-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான சிசிலியா அந்தோனிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நெடுந்தீவு சாமிநாதர் மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோசப்புவின் அன்புச் சகோதரரும் அருட்சகோதரி எத்தல் வீவா (AC) (அதிபர்- சென். திரேசாள் கல்லூரி, அச்சுவேலி), ஜெயநாதன் (ஆசிரியர், சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம்), சாமிநாதன் (பிரசித்த நொத்தாரிசு, மட்டக்களப்பு), அருட்பிரகாசம் (வைத்தியர், கொழும்பு), மேரிறெஜீனா, மேரிதிரேஷ்றூபி ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், மகிழ்வதி, சோதிமலர், E. R. மேன் (வைத்தியர்), M. ஜென்றிக் (பெற்றோலியம் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ஜெயநாதன்
(மகன்)

128, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.

(64660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

யாழ்ப்பாணம் யுத்தத்தினால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது, இழப்புக்கள் — மறைவுகள், படுகொலைகள் என்பன எவ்வளவு சர்வசாதாரணமாகி விட்டன என்பதற்கு இது ஒரு 'சாம்பிள்' :—

செம்மணிக்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் பெரும் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது குறித்து சர்வதேச செய்தி நிறுவனங்கள் பரபரப்பாக செய்தி வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன. கொழும்பில் தனியார் தொலைக் காட்சி நிறுவனங்கள் மற்றும் செய்தி ஊடகங்களிலும் இந்த விவகாரத்துக்குத்தான் முக்கியத்துவம்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்த விடயம் — தோண்டத் தோண்ட எலும்புக் கூடுகள் வெளிவருவது பற்றிய திடுக்கிடும் தகவல் — அவ்வளவு பரபரப்பை ஏற்படுத்தவில்லை — ஏற்கனவே இழப்புகள், மறைவுகள், காணாமற்போதல், படுகொலைகள் ஆகியன அன்றாட நிகழ்வாகிவிட்டதாலோ என்னவோ மக்கள் இந்த விடயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

பாதுகாப்புக் காரணம் கருதியோ அல்லது வேறு காரணங்களாலோ புதைகுழி தோண்டும் துரையப்பா விளையாட்டரங்குக்கு மக்கள் அதிகம் வரவில்லை. சுமார் பத்துப் பதினைந்து வெளியாள்களின் தலைகள் தான் அவ்வப்போது அங்கு தென்படுகின்றன.

அதுமட்டுமல்ல. கடந்த புதனன்று புதைகுழி வெட்டப்பட்டு மூன்று எலும்புக் கூடுகள் முழுதாக மீட்கப்பட்டன. குழிக்குள் இருந்த மண் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கப்பட்டு எலும்புக் கூடுகள் முற்றாக வானத்தைப் பார்த்தபடி குழிக்குள் கிடந்தன.

அந்நேரம் — பிற்பகலில் — ஸ்டேடியத்தில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டி நடக்கின்றது.

புதைகுழியில் இருந்து சுமார் இருபது யார் தூரத்தில் வலைப்பந்தாட்ட ஆடுகளம். ஒரு புறம் புதைகுழி தோண்டப்பட பக்கத்தில் வலு மும்முரமாக வலைப்பந்தாட்டப் போட்டி. — விளையாடிய வீராங்கனைகளோ, நூற்றுக்கும் அதிகமாகக் கூடிய ரசிகர்களோ விளையாட்டில் காட்டிய ஆர்வத்தை புதைகுழி தோண்டுவதில் காட்டவில்லை. புதைகுழி தோண்டும் விடயத்தில் அவர்களுக்கு ஈடுபாடு அவ்வளவு தான்!

★ ★ ★ ★ ★

பாடசாலைகளில் முதலாம் தவணை நேற்றுடன் முடிவடைந்துவிட்டது.

புதிய கல்விச் சீர்திருத்தம் தரம் 1, தரம் 6, தரம் 9 ஆகியவற்றில் அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு தவணை முடிந்துவிட்டது. ஆனால் குடாநாட்டு மாணவர்களுக்கு இந்த வகுப்புக்களுக்குரிய பாடநூல்களில்— ஒரு சில பாடங்களுக்கு மட்டும்— பத்து சத வீதமான நூல்கள் மட்டுமே வந்து சேர்ந்துள்ளன. சில பாடங்களுக்கு நூல்களே வரவில்லை.

புதிய சீர்திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்படும் பாடத்திட்டங்கள் குறித்து தாம் கேள்விப்பட்டதை— அறிந்ததை— வைத்துக் கொண்டு முதலாம் தவணையை ஓட்டிவிட்டார்கள் ஆசிரியர்கள். பல இடங்களில் பழைய பாடத்திட்டத்தின் கீழேயே இதுவரை போதனைகள் நடைபெற்றன.

கல்வி அமைச்சினால் அச்சிடப்பட்ட பாடநூல்கள் வடக்கு — கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுவதற்காக திருகோணமலையில் உள்ள மாகாணக்கல்வி அமைச்சுக்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

அவற்றில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குரிய புத்தகங்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காகமீண்டும்கொழும்புக்குக்கொண்டு செல்லப்பட்டன.

இவ்வாறு திருகோணமலைக்கும் கொழும்புக்கும் இடையில்— அஞ்சலோட்டக் கோல் போல— அங்கும் இங்கும் அனுப்பி வைக்கப்பட்ட இந்த இலவச பாடநூல்கள் இப்போது யாழ்ப்பாணத்துக்குக் கப்பலில் செல்வதற்காகக் கொழும்பில் தவம் கிடப்பதாகத் தகவல்!

இந்தப் பாடப்புத்தகங்கள் எப்போது யாழ்ப்பாணம் வந்து, எப்போது மாணவர்களுக்கு விநியோகித்து, எபபோது அவர்கள் அதனைப் பயன்படுத்துவது என்று தெரியாமல் முழுசுகின்றனர் அந்த மாணவர்களின் பெற்றோர்கள்.

★ ★ ★ ★ ★

யாழ். ஆஸ்பத்திரியில் கர்ப்பத்துக்கான குணங்குறியுடன் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் தாம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அச்சுவேலிப் பகுதியில் வைத்து படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தெரிவித்ததும் —

அது குறித்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் பொலீஸார் விசாரணை செய்து வருவதும் —

சில தினங்களுக்கு முன்னர் செய்தியாக உதயனில் வெளியாகியிருந்ததும் தெரிந்ததே.

இந்தச் செய்தி உதயனில் வெளியாவதற்கு முதல் நாளே — 'இன்ரநெற்' மூலம் செய்தி வெளியிடும் 'தமிழ் நெற்' செய்திச் சேவை வரை பல சர்வதேச செய்தி நிறுவனங்களினால் பரபரப்பாக வெளியிடப்பட்டு விட்டது.

மிகுந்த முக்கியத்துவத்துக்கும் சர்ச்சைக்கும் உரிய இத்தகைய செய்திகளை வெளியிடுவதற்காக வேறு திசைகளில் இருந்து உதயனுக்கு வரக்கூடிய அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் யாவரும் புரியக் கூடியது தான்.

ஆனால் இம்முறை உதயன் செய்தி வெளியிட்டதற்காக வேறு ஒருவருடைய உத்தியோகத்தைப் பறிக்க இலக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் செய்தியை 'உதயன்' வெளியிட்டமைக்காக அப்பாவி ஆஸ்பத்திரி ஊழியர் மீது பாய்ந்திருக்கின்றது ஆஸ்பத்திரி நிர்வாகம்.

மேற்படி இளம் பெண்ணுடன் அந்த ஊழியர் முதல் நாள் கதைத்துக் கொண்டிருந்தார் என்றும்—

அதையடுத்து அடுத்த நாள் அந்தத் தகவலை உதயன் பிரசுரித்ததால் அந்த ஊழியரே அத்தகவலை உதயனுக்குக் கொடுத்தார் என்றும்—

குற்றம் சுமத்தி விளக்கம் கோரியிருக்கின்றது ஆஸ்பத்திரி நிர்வாகம். பாவம் அந்த அப்பாவி ஊழியர்! 'பழி ஓரிடம் பாவம் ஓரிடம்' என்பது போன்ற நிலை அவருக்கு.

அந்த வேதனையில் நேற்று ஆஸ்பத்திரியில் தான் கண்ட உதயன் செய்தியாளர் மீது பாய்ந்து விழுந்திருக்கின்றார் அவர். விசாரித்தபோதுதான் அநாக் குறையாக தேவையில்லாமல் தமது பெயர் இந்த விடயத்தில் இழுபடுவதை அவர் புட்டு வைத்தார்.

ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் ஏனோ தானோப் போக்குக் குறித்து ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

தங்கள் உள்வீட்டுக் குளறுபடிகள் அம்பலமாவது குறித்து கலங்கிப் போயிருக்கும் நிர்வாகத்தினர். இப்போது உதயனுக்குத் தகவல் கொடுப்போரைத் தேடி வேட்டை ஆரம்பித்திருக்கின்றார்கள்

ஆனால் பாவம். நிழலை நிஜம் என்று நினைத்து இதில் தொடர்பற்ற ஒருவருடன் போர் தொடுக்க முனைகின்றார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஒரு தகவல் உங்கள் அலுவலக அறைச் சுவருக்குக் கூட காது உண்டு கவனம்! அதை விடுத்து வேறு எங்கோ காதுகளைத் தேடாதீர்!

அன்று —

உதயன் வெளியிட்ட மேற்படி செய்தி வெறும் மருத்துவத்துறையோடு சம்பந்தப்பட்டது மட்டுமல்ல: அந்த விடயம் உண்மையானால் பல அரசியல், சமூக, சமகாலப் பிரச்சினைகளின் யதார்த்தத்தை உலகுக்கு அம்பலப்படுத்தும் உதாரணமாகவும் அது அமைந்து விடலாம்,

இத்தகைய ஆழம்மிக்க செய்திகள் பிரசுரமாவதைத் தடுப்பதற்கு முனைவது தமது மருத்துவப் பொறுப்புக்கு அப்பால் இன்றைய எமது இனத்தின் சமூகப் பொறுப்பிலிருந்து விலகுவதோடு சமூக அழிவுக்குத் துணை போவதாகவும் அமையும் என்பதைக் கலலையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

— மின்னல்

## மணிமண்டப ஓராண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தின் முதலாவது ஆண்டுப் பூர்த்தி விழா இன்று மு.ப. 10 மணிக்கு மேற்படி மண்டபத்தில் நடைபெறுகிறது.

மணி மண்டபத்தினால் கிடைக்கும் வருமானம் மகளிர் இல்லப்பிள்ளைகளின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்யவே பயன்படுத்தப்படுகிறது.

மணி மண்டபம் திறக்கப்பட்ட கடந்த ஒரு வருட காலத்தில் பல விழாக்களும், திருமண வைபவங்களும் சிறப்பாக நடந்தேறியமை நிறைவுடையதாகும் நல்லூர் திருவிழாக் காலத்தில் நாளாந்தம் இங்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இன்றைய பூர்த்தி விழாவில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பண்ணிசை, நாடகம் என்பனவும் இடம் பெறும். விழா இறுதியில் அன்னதானம் நடைபெறும். (அ-30)

## நகர சபைக்கு உழவு இயந்திரம்

வடமராட்சி, ஏப்ரல் 10

பருத்தித்துறை நகர சபைக்கு மேலும் புதிய உழவு இயந்திரம் ஒன்று கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளது.

11 இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த உழவு இயந்திரம் பருத்தித்துறை நகரசபையின் வேலைப்பகுதி வேலைகளுக்கும், ஏனைய வேலைகளுக்கும் பயன்படுத்தப்படும் என பருத்தித்துறை நகர சபைத் தலைவர் வி. விஜயரட்ணம் தெரிவித்தார்.

ஏற்கனவே உள்ள உழவு இயந்திரம் தொடர்ந்தும் நகரில் உள்ள குப்பை கூளங்களை அப்புறப்படுத்தப் பயன்படுத்தப்படும் என மேலும் தெரிவித்தார். (ஐ-173)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

யாழ். ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியத்தின் வாராந்தக் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு ப. குகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'சமூக தொடர்பியலின் பரிமாணங்கள்' என்னும் பொருளில் கலாநிதி என். சண்முகலிங்கன் கருத்துரை வழங்குவார். (ஐ-5)

## சீருடை அணியாத கிராம அலுவலர் மீது நடவடிக்கை

வலி. வடக்கு ஏப்ரல் 10

சீருடை அணியாத கிராம அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க பிரதேச செயலர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது,

யாழ், மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களை சீருடை அணிய வேண்டுமெனகடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ். செயலகத்தினால் பணிக்கப்பட்டு இருந்தது.

பல கிராம அலுவலர்கள் அதன் பின்னரும் சீருடை அணியாமையினால் அலுவலக நாள்களில் சீருடை அணியாதவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும்படி யாழ். செயலகத்தினால் பிரதேச செயலர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## வெங்காயச் செய்கைக்கு 65 விவசாயிகளுக்கு கடன்

அச்செழு கிராமத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபாடுள்ள 65 விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனாக தலா 10 ஆயிரம் ரூபாவைத் தமிழர் புனர்வாழ்வு நிறுவனம் அண்மையில் வழங்கியுள்ளது.

அச்செழு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவோடு இவர்களுக்கான உதவிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் வெங்காயச் செய்கையில் கூடிய ஆர்வம் உடைய விவசாயிகளுக்கே முன்னுரிமைப்படி கடன் வழங்கப்பட்டுள்ளது. [ஐ-180]

## நியமனம்

பருத்தித்துறை நகரசபைஒப்பந்த அடிப்படையில் 15 தொழிலாளர்களை நியமித்துள்ளது.

இவர்களில் 5 சுகாதார தொழிலாளர்களும், 8 வீதி சுத்திகரிப்புத் தொழிலாளர்களும், அலுவலகத் தொழிலாளி ஒருவரும், சாரதி ஒருவரும் அடங்குவார்கள். (ஐ-173)

## இராமாயணப் படிப்பு

வடமராட்சி, ஏப்ரல் 10

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இராமாயணப்படிப்பு கடந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமானது.

எதிர் வரும் ஜூலை மாதம் 20 ஆம் திகதி இராமாயணப் படிப்பு நிறைவுறும்.

நிறைவு தினத்தன்று விசேட பூசைகள், ஆராதனைகள் இடம்பெறும். (ஐ-173)

## பன்ன வேலைப் பயிற்சி

வடமராட்சி, ஏப்ரல் 10

கரணவாய் மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவினரால் பன்ன வேலைப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் இப் பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

பயிற்சி நெறியை மேற்கொள்ள விரும்புவோர் வித்தியாலய அதிபருக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-173)

## பொதுசன உதவிப் பணம்

கொழும்புத்துறை, ஏப்ரல் 10

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் பொதுசனமாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான மார்ச் மாதக் கொடுப்பனவு உரிய தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று யாழ். பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் கே. வி. சிவனேசன் தெரிவித்துள்ளார்.

உதவிப் பணம் பெறுவோர் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது (க-31)

வாடிக்கையாளர்களுக்கு நற்செய்தி!

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகளை உங்கள் வீடுகளிலிருந்தேகண்டுகளிக்க வேண்டாமா?

21'' கறுப்புத்திரை கொண்ட Sony TV எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அலுவலகத்தில்பணிபுரியும் பெண்கள் இலகு சவாரிக்கு

TVS SUPER CHAMP

மோட்டார் சைக்கிள்கள், றேடியோ, TV உதிரிப்பாகங்கள்

பெற்றுக்கொள்ள நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

V.K. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

[64649]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பால் எடுக்கும் சணலாடும் 2குட்டிகளும், ஜமுனாபாரி ஆடுகளும், குட்டிகளும் சினைப்படுத்துவதற்கேற்ற ஒருவருட ஜமுனாபாரி கடாவும், இறைச்சிக்கு உகந்த வான் கோழிகளும், முட்டையிடும் வெள்ளை, கறுப்பு கினிக் கோழிகளும், வான் கோழிகளும், குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மதுரம், 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (64619)

அவரி இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட 250 kg மேடைத் தராசு கிலோவுக்கு மாற்றப்பட்டது விற்பனைக்கு உண்டு. நல்ல நிலையில் உள்ளது. தொடர்பு: ச.கந்தராசா அராலி மத்தி. வட்டுக்கோட்டை. (64581)

## தவறிவிட்டது

இல. 23/5, கொழும்புத்துறை ஏ. வி. றோட், சென். மேரிஸ 1 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த பொனிபஸ் ஜெராட் கனியூட் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (இல 0901C07131) 17 - 03 - 99 கொழும்புத்துறைக்கும், கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல 17, ஏ. வி. றோட், சென். மேரிஸ் 1 ஆம் ஒழுங்கையில் ஒப்படைத்துதவவும் (64629)

விக்கினேஸ்வரன் றஜனி என்பவரின் விசேட அடையாள அட்டை (இல 0903018079) 5 – 4 – 99 யாழ்ப்பாணத்திற்கும், இருபாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் வி. எச். லேன், இருபாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (64615)

செல்வி சிவபாக்கியவதி அமிர்தலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல: 758043410V) கடந்த 5 – 4 – 99 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து R சம்பந்தநாதன், 35, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். R சம்பந்தநாதன். (64614)

சாவற்காட்டைச் சேர்ந்த சிவலிங்கம் விஜயன் என்பவரது விசேட அடையாள அட்டையும் கடல் அனுமதிப் பத்திரமும் 07 – 04 – 99 புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், சாவற்காடு சந்தை முன்பாகவுள்ள நல்லதபிகடையில் ஒப்படைத்து உதவவும். (64635)

வாகையடி, மட்டுவில் தெற்கு, சாவச்சேரியைச் சேர்ந்த இந்துமதி லோகராஜா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 788062737V) 6 - 4 - 99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (64636)

## JOB WANTED

Driver Heavy Vehicle. Fluent in English Sinhala and Tamil Having Computer Driving Licence, Knows Jaffna and Colombo Roads Needs Employment. Advertiser No: 866, Uthayan, 361, Kasthuriyar Road, Jaffna (64593)

## திருமண சேவை

1962 புனர்பூசம் படித்து சென்னையில் சொந்தமாக லொச் நடத்தும் உரிமையாளருக்கு மணப்பெண் தேவை. பொருத்தமான மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள்: ஞாயிறுகளில் துரை விமலா கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (64559)

மணமக்கள் தெரிவுக்கு சகல விவரங்களுடன் நேரில் சமுகமளிக்கலாம். அனைத்து மணமக்களுக்குரிய வசதியான சேவை. சுபமங்கல திருமணப்பணி வைமன் வீதி, நல்லூர். (64621)

## இராசி பலன்கள்

ஆனந்தி வெளியீடு பிரமாதி வருட சனீஸ்வர, வியாழ - இராகு - கேது பலாபலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. சோதிடர்: V. A சிவராசா 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (64599)

## நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
ஆண்டு — 5
புலமைப் பரிசில் - 99
1ஆவது மாதிரிப்பரீட்சை
11 - 04 - 99
ஞாயிறு
காலை 9. 00 மணி

★ ஒவ்வொரு ஞாயிறும் மாதிரிப் பரீட்சை.
★ வினாத்தாள் பெற விரும்புவோர் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும். (64622)

# தனியாருக்குத் தேங்காய்; சமாசம் விநியோகிக்கும்

அரியாலை, ஏப்ரல் 10

யாழ் மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவு சமாசம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவித்த தேங்காய்களைத் தனியார் வர்த்தகர்களுக்கும் விநியோகிக்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தனியார் வர்த்தகர்கள் சமாசத்துடன் தொடர்பு கொண்டு தேங்காய்களைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் —

தேவைக்கேற்ப தேங்காய்கள் வழங்கப்படும் என்றும்— சமாசத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

அதேசமயம்—

கூட்டுறவுச் சங்கங்களுக்கும் போதியளவு தேங்காய் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# தாழமுக்கம் நீடிக்கும்

கொழும்பு, ஏப்ரல் 10

நாட்டின் தென்பகுதிக்கு அப்பால் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் இன்னும் ஒரு சில நாள்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. (இ-7)

## ITN கொமினிக்கேசன் சென்ரர்

குறைந்த கட்டணத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு
கணனி மயப்படுத்தப்பட்ட 24 மணிநேர பக்ஸ் வசதிகள்

வெளிநாட்டு பக்ஸ் 0094–70–212401
உள்நாட்டு பக்ஸ் 070–212401

27, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்,

[64595]

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் காப்பாளரும் ஆலோசகருமாகிய

### திரு. சரவணமுத்து சோமசுந்தரம்

அவர்கள் 07 – 04—99 இல மறைந்ததையிட்டு அதிர்ச்சியடைகின்றோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
"கலையகம்",
ஆவரங்கால்.

[64634]

நாளை! நாளை!

## திருமறைக் கலாமன்றம்

வழங்கும்

### "உயிர்ப்பு விழா"

சிறப்பு நிகழ்வாக
அருள் கலாநிதி நீ. மரியசேவியர்
அடிகளாரின்

### கல்வாரிப் பரணி

நூல் வெளியீடு
வெளியீடும் மதிப்பீட்டுரையும்
கலாநிதி எஸ் சிவலிங்கராசா
தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்

### கலை நிகழ்ச்சிகள்


- வில்லுப்பாட்டு
- கவிதைக் கதம்பம்
- நாடகம்

நாள்: 11-04-99 நேரம்: 6-00 மணி

இடம்:
மன்ற அரங்கு
அனைவரும் வருக.

(சி/7094)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மரியாம்பிள்ளை செல்வத்துரை

(இளைப்பாறிய M. S. அலுவலர்,
யாழ். தபாற் கந்தோர்)

இறப்பு: 10 – 04 – 1989

அன்பு நிறைந்த ஐயா! பத்து ஆண்டுகள்
ஓடி மறைந்தன; உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு அகலாது!

உங்கள் நினைவில் வாடும்!

மனைவி: செ. பாக்கியம்,
மகள்: S. T. சகுந்தலாதேவி.

40/5, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(64605)

## மீண்டும் ரவி அன் ராஜ் சில்க்ஸ் ஸ்தாபனத்தாரின்

# மகத்தான சிறப்புத் தள்ளுபடி விற்பனை

வரும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு அனைத்துப் புடைவைத் தினுசுகளையும் மாபெரும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.
இவ்வரிய சந்தர்ப்பம் சிலதினங்களுக்கு மட்டுமே என்பதால் முந்துங்கள் முந்துங்கள் இன்றே, இப்பொழுதே!

## ரவி அன் ராஜ் சில்க்ஸ்

(64453)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு விளையாட்டு விழா

அரச ஊழியர்களும், பிரஜைகள் குழுக்களும் இணைந்து நடத்தும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தை ஒட்டிய விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 2-00 மணிவரை சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில்நடைபெறவுள்ளது.

தமிழரின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளதால் இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் தனிநபர் அல்லது குழுக்கள் அன்றைய தினம் விழா மேடையில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்து விளையாட்டுக்களில் கலந்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

# நாவற்குழிப் பகுதியில் கசிப்பு வேட்டை

தென்மராட்சி, ஏப்ரல் 10

தென்மராட்சி மதுவரித் திணைக்களத்தினர் கடந்த வாரம் நாவற்குழி, தச்சன் தோப்பு, கைதடி மத்தி ஆகிய இடங்களில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது மூன்று பரல் கசிப்பு உற்பத்தி செய்வதற்குரிய கோடா உட்பட பெருமளவு கசிப்பு மற்றும் சட்ட விரோத மது பானங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி அழித்ததாக தென்மராட்சி பிரதேச மது வரி நிலையப்பொறுப்பதிகாரி றொகான் சந்சேராஜூ தெரிவித்தார்.

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளிப் பிரதேசங்களில் சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனைகள் அதிகரித்து வருவதால் அவற்றினைக் கட்டுப்படுத்த விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-117)

# பிரதேச செயலர் விசாரணையில்

மட்டக்களப்பு, ஏப்ரல் 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற வெல்லாவெளிப் பிரதேசத்தின் பிரதேச செயலரான எஸ். பாஸ்கரன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தேசிய அடையாளஅட்டை விநியோகம் தொடர்பான ஆவணங்களுடன் வருமாறு அவர் கேட்கப்பட்டுள்ளார்.

(இ-3-21)


## தேவை

St Joseph's Catholic Press

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்

(1) அச்சுக்கோப்பாளர் (ஆங்கிலம், தமிழ்)
(2) கணனி ஆங்கில, தமிழ் தட்டெழுத்தாளர்

விண்ணப்ப முடிவு திகதி : 17 - 04 - 1999
நேர்முகப் பரீட்சை: 19 - 04 - 1999

விண்ணப்பித்தபின் சான்றிதழ்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் தரவும்

முகாமையாளர்,
360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(64639)

## தேவை [BILL CLERK]

யாழ். நகரிலுள்ள Hardware / Electronic வர்த்தக ஸ்தாபனத்திற்கு ஆங்கிலம் எழுத, வாசிக்கத்தெரிந்த முன் அனுபவமுள்ள 30 வயதிற்கு மேற்பட்ட பில் கிளாக் [Bill Clerk] தேவை.

15–4–99 - க்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர — இல. 867,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

[64618]

## ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு:

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பு ஸ்தாபனத்தார் இன்று முதல் மூன்று தொலைபேசி இணைப்புடன் அதிநவீன முறைகளைக் கையாண்டு மிகமிகக் குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் எதுவித தாமதமுமின்றி அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் திருப்தியே எங்கள் சேவை! மேலும் எமது சில மகத்தான சேவை :—

[1] பக்ஸ்
[2] போட்டோ கொப்பி
[3] லெமனேசன் [ கவரிடுதல் ]

வெளிநாட்டில் இருந்து தொடர்பு கொள்ளும் இலக்கம்
0094 7021 2354
0094 7021 2383

உள்நாட்டுத் தொடர்புகளுக்கு :—
070 21 2354
070 21 2383

குறிப்பு :— வெளிநாட்டுத் தொடர்பு ரூபா 90 மட்டும்
உள்நாட்டுத் தொடர்பு ரூபா 6 மட்டும்
உள்வரும் அழைப்பு ரூபா 4 மட்டும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பு நிலையம்
நீர்வேலி கந்தசாமி கோயில் வடக்கு வீதி

(64613)


# வடமராட்சியில் கல்வி அபிவிருத்தி கழகம்

வடமராட்சிப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தி கருதி வடமராட்சி கல்வி அபிவிருத்திக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தலைமையில் இக்கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன் தலைவராக இளைப்பாறிய பொறியியலாளர் எஸ். விக்கினேஸ்வரனும், செயலாளராக வடமராட்சி வலய திட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சேதுராஜாவும், பொருளாளராக பருத்தித்துறைப் பிரதேச சபைப் பொது நூலக நூலகர் ஏ. என். எஸ். திருச்செல்வமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இக்கழகத்துக்கு நிரந்தர அலுவலகம் ஒன்று ஏற்படுத்தப்படும்வரை, வடமராட்சிக் கல்வி வலயத்தில் இக்கழகம் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வலி.மேற்கு பிரதேச கலாசார பேரவை

வழங்கும்

# மாபெரும் இசைவிழா - 1999

சுழிபுரம் மத்தி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் மேற்கு, பண்ணாகம், பனிப்புலம், தொல்புரம் கிழக்கு, தொல்புரம் மேற்கு, பொன்னாலை, மூளாய் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்களின் ஆதரவில்

## மூன்றாம் நாள் நிகழ்வுகள்

10 – 04 – 1999 சனிக்கிழமை

இடம்: சங்கானை கலாசார மண்டப திறந்தவெளி அரங்கு

மாலை 2.00 – 2.05: மங்கள விளக்கேற்றல்:
**வைத்திய அதிகாரி திரு. எ. செல்வநாயகம் அவர்கள்**
**வைத்திய அதிகாரி திரு. கே. கமலநாதன் அவர்கள்**

2.05 – 2.15: தமிழ்த்தாய் வாழ்த்து
**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள்**

2.15 – 3.00: மங்கள இசை
**திரு. சிவகுமார் குழுவினர்**

3.00 – 3.45: இசைக்கச்சேரி:
**இசைக்கலைமணி திருமதி சாரதா பரம்சோதி — பாட்டு**
**திரு. கா. குகபரன் — வயலின்**
**சங்கீதரத்தினம் மா. சிதம்பரநாதன் – மிருதங்கம்**

3.45 – 4.30 வீணை இசை:
**இசைக்கலைமணி செல்வி ஜனனி சொக்கலிங்கம்**
**சங்கீதரத்தினம் திரு சி. மகேந்திரம் — மிருதங்கம்**

4.30 – 5.00 கெஞ்சில் கச்சேரி
**திரு வே. இரத்தினம் குழுவினர்**
(கிராமசேவை உத்தியோகத்தர், பொன்னாலை)

5.00 – 5.15 வரவேற்புரை
**பண்டிதர் ப. இராசகுரு அவர்கள்**

தலைமையுரை:
**திரு. கா. சந்திரராசா**
(பிரதேச செயலர் வலி.மேற்கு, தலைவர் கலாசாரப் பேரவை சங்கானை)

பிரதம விருந்தினர்:
**திரு. ஆர். ரி. விக்கினராஜா** (மாவட்ட நீதிபதி பருத்தித்துறை)

சிறப்பு விருந்தினர்கள்:
**திரு. ரி. வி. கிருஷ்ணசாமி**
(உதவி ஆணையாளர் உள்ளூராட்சித் திணைக்களம்)
**திரு. ரி. சிவதட்சணாமூர்த்தி** (உதவிப்பணிப்பாளர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் யாழ் மாவட்டம்)
**வண. பிதா கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்**
(இளவாலை மறைமாவட்ட குருமுதல்வர்)

கௌரவ விருந்தினர்:
**திருமதி அ. வேலுப்பிள்ளை** (அதிபர் விக்ரோறியாக் கல்லூரி)
**திரு. கா. நடராசா** (அதிபர் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)
**திருமதி பத்மாவதி மகேஸ்வரன்**
(பொது முகாமையாளர் ப. நோ. கூ. சங்கம், சங்கானை)

நன்றியுரை:
**திரு. இ. சிறீரஞ்சன்** (கிராம உத்தியோகத்தர் தொல்புரம் மேற்கு.)

5.15 – 6.15 இன்னிசைக்கச்சேரி:
**சங்கீதபூசணம் திரு. சு. கணபதிப்பிள்ளை — பாட்டு**
(பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
**இசைக்கலைமணி திரு. க. குகபரன் — வயலின்**
**சங்கீதரத்தினம் திரு. மா. சிதம்பரநாதன் — மிருதங்கம்**
**கலா வித்தகர் பிரம்மஸ்ரீ வ. ரமணன் — மோர்சிங்**
**செல்வன் தி வரோதயன் — கடம்**

6.15 – 7.00 கலை நிகழ்ச்சி பாடசாலை மாணவிகள்:
**யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**
**யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**
**யா/யாழ்ப்பாணக் கல்லூரி**

7.00 – 8.00 திருமறைக் கலாமன்றம் வழங்கும்
"சோழன் மகன்"


விளம்பர அன்பளிப்பு:

**மீனாட்சி ஜவுளி சமுத்திரம்**
பிரதான வீதி, சங்கானை.

**புதிய அபிராமி புடைவை மாளிகை**
பிரதான வீதி, சங்கானை.

**ஸ்ரீ வரதராஜா வெதுப்பகம்**
பிரதான வீதி, சுழிபுரம்.

(C/7092)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. வடக்கில் மீளக்குடியமர

# அனுமதிக்கக் கோரி மகஜர்

## ச.ச.நிலைய சமாசக் கூட்டத்தில் தீர்மானம்

சண்டிலிப்பாய், ஏப்ரல் 10

'வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இதுவரை மீளக் குடியேறுவதற்கு அனுமதிக்கப்படாதிருக்கும் இடம்பெயர்ந்த மக்களை அங்கு சென்று குடியேறுவதற்கு அனுமதிக்க வேண்டும்.'

இவ்வாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்ளும் முக்கிய தீர்மானமொன்று வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கடந்த மாதம் 27 ஆம் திகதி சமாசத் தலைவர் நா. போஜன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் கலந்து கொண்டார்.

வலி. வடக்கு பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வரும் குடும்பங்களுக்கு மீளக்குடியேறலுக்கான ஐயாயிரம் ரூபா கொடுப்பனவை முன்னுரிமை அடிப்படையில் வழங்க வேண்டும் என்ற தீர்மானம் உட்பட்ட மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி ரி. மகாதேவன் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் சன சமூக நிலையங்களின் அனுசரணையுடன் இப்பிரிவில் சூழல் சுகாதாரம் மூலம் வீடு வீடாக நுளம்பு ஒழிப்புத் திட்டமொன்றை இம்மாதத்தில் ஆரம்பிப்பது என்றும் —

வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் வராதபடி தடுப்பு ஊசி மருந்து ஏற்றும் திட்டத்தை சன சமூக நிலையங்களின் உதவியுடன் விரைவில் நடைமுறைப்படுத்துவது என்றும் —

முடிவு செய்யப்பட்டது.

(ஐ-135)


## கணக்காளர் தேவை

5 வருடத்திற்கு மேற்பட்ட வியாபார அனுபவம் உள்ள ஆண் கணக்காளர் ஒருவர் தேவை. நேரில் வரவும்.

**சிவா றேடிங் கோ**

22. டச்சு றோட்,
சாவகச்சேரி.

(64644)


## புதிய பஸ் சேவை

குறிகாட்டுவானுக்கு பஸ் சேவை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது

வேலணையில் இரவு தங்கி விடியற்காலையில் குறிகாட்டுவானுக்கு சென்று அங்கிருந்து பயணிகளை யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஐ-167)


## விஜிதா தொலைத் தொடர்பகம்

அச்சுவேலி

**எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு**

எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர்கள், நண்பர்களுடன் கலந்துரையாடுவதற்கு வசதியாக எமது கட்டணங்களை வெகுவாகக் குறைத்துள்ளோம் என்பதை அறியத் தருகின்றோம்.

வெளி நாட்டில் உள்ள உங்கள் உறவினர்கள், நண்பர்களுடன் உரையாடுவதற்கு அழைப்பதற்கான அழைப்புக் கட்டணம் ரூபா **100** மட்டுமே.

உள்ளூர் அழைப்புக்கு ரூபா 6.00

தகவல்களை உடனுக்குடன் அறிவிக்கும் வசதிகள் தங்குமிட வசதிகள் சகலதும் செய்து தரப்படும்.

**தொலைபேசி இலக்கம்: உள்ளூர்** 070 - 212331
வெளிநாடு 0094-70 - 212331

**விஜிதா**
**தொலைத் தொடர்பகம்**
விஜிதா மில் - வல்லை றோட்,
அச்சுவேலி.

(64650)



SALE! SALE!!

இதோ! **முந்துங்கள்**

உள்ளம் துள்ளும் புதுவருடப் பரிசு

# மகாநதி

**வழங்கும்**

## மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

இந்தத் தள்ளுபடி **14 - 04 - 99** வரை மட்டுமே!

நதிகளின் சங்கமம் கடலில்
சகலவித புடைவைகளின் சங்கமம்

**மகாநதியில்**

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
**புதுவருட புடைவைகளுக்கு**
ஆம்

# மகாநதி புடைவை அகம்

முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான நிறுவனம்

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021-2552

4, நவீன சந்தை.
சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்கு
பிரத்தியேக காட்சி அறைகள்

16, நவீன சந்தை,
[மேல் மாடி]
யாழ்ப்பாணம்.

[illegible], நவீன சந்தை
[illegible]
சாவகச்சேரி.

(சி/7114)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாதேவி லோகநாதன்

(முன்னாள் மகளிர் பிரிவுத் தலைவி மானிப்பாய் ஸ்ரீ சத்திய சாயி நிலையம்)

மானிப்பாய் பச்சஸ் ஒழுங்கை, திருமதி கமலாதேவி லோகநாதன் அவர்கள் 08 - 04 - 99 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற காராளபிள்ளை லோகநாதனின் (பொறியியலாளர்) அருமை மனைவியும் சச்சிதானந்தன் (ஹட்டன் நஷனல் வங்கி அளுத்கடை கிளை), திருமதி நாகலட்சுமி சிவகுமாரன். திருமதி ஜெகதாம்பிகை குகதாசன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10-04-99 சனிக்கிழமை இல. 55/1 மோர் றோட், வெள்ளவத்தையில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3.00 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**இ. வசந்தசேனன்**

லோ. சச்சிதானந்தன் (மகன்),
இல. 55/1. மோர் றோட்,
வெள்ளவத்தை.

(64640)

## கிருஸ்ணபிள்ளை தியாகராசா

(வீரவாகு)

கர்ரைநகர் தங்கோடை சிவகாமி அம்மன்வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வெள்ளாந்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை தியாகராசா (வீரவாகு) 08 - 04 - 1999 இல் காலமானார்.

இவர் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஓய்வு பெற்ற மின்சார போமனும், முத்துப்பிள்ளையின் அன்புக்கணவரும், புஸ்பராணி, ரஞ்சிதமலர் (கல்வித் திணைக்களம் கிளிநொச்சி), தேவநாயகி (பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கொழும்பு), கிருஸ்ணராசா (போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சூரசங்காரன் (மின்னியலாளர்), இராமகிருஷ்ணன் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), தவேந்திரா (மஸ்கன் இன்டஸ்ரீஸ் கொழும்பு), மங்கையர்க்கரசி ஆகியோரின் மாமனாரும், கிருஸ்ணமேனன், கிருபாகரன், சஜந்தா, குருசாந், கோபிதா, அனிதா, திவ்யா, வாசுகி, தனஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தம்பிராசா (உதிரிப்பாக விற்பனையாளர் திருமலை), துரைராசா (துரை அன்கோ, யாழ்ப்பாணம்), செங்கமலம் சரவணை (காரைநகர்), காலஞ்சென்ற இராசம்மா கிருஸ்ணசாமி, காலஞ்சென்ற செல்லமுத்து கணபதிப்பிள்ளை (சின்னத்தம்பி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10 - 04 - 99) சனிக்கிழமை காலை, 9 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தி கிருஸ்ணராசா (மகன்)**

190, சிவன்பண்ணை வீதி,
வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

[64646]

## பசுபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் கிளுவானை ஒழுங்கை, கொக்குவில் மேற்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை சுப்பிரமணியம் [பிரபல் அளவையியல் ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி] 09—04—99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை சிவயோகம் தம்பதிகளின் அருமை மகனும், சிவலோஜனாவின் அன்புத் துணைவரும், யாதவனின் பாசமிகு தந்தையும், தங்கவடிவேல், இராசலட்சுமியின் அன்பு மருமகனும், திருமதி நல்லைவரோதயன் [ஆசிரியை அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி], கார்த்திகேசு [உதவி முகாமையாளா மக்கள் வங்கி, சுன்னாகம்] சிவபாலசுந்தரம் [பிரான்ஸ்] ஆகியோரின் பாசமிகு சகோதரரும், செல்வேந்திரன், செல்வராணி [மாத்தளை], சுலோஜனா, சிவகப்பிரமணியம் [கொழும்பு], நளினலோசனா, மகேந்திரன் [கனடா] ரவீந்திரன், செல்வமதி [அமெரிக்கா], நல்லைவரோதயன் [உயர் நீதிமன்றம், யாழ்ப்பாணம்], கிருஸ்ணவேணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 11-04-99 ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணியளவில் அவரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**ப. கார்த்திகேசு**
[சகோதரன்]

குளப்பிட்டி வீதி,
கொக்குவில் மேற்கு.

[64648]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியா தடுப்பு மருந்து சிறுமி உயிர் பறித்தது!

## சாவகச்சேரியில் பரிதாப சம்பவம்

சாவகச்சேரி, ஏப்ரல் 10

மலேரியாக் காய்ச்சலைக் குணப்படுத்த வழங்கப்படும் 'குளோறோகுயின்' என்ற குளிசைகளில் நான்கை ஒன்றாக உட்கொள்ளக் கொடுத்ததால் ஆறுவயதுச் சிறுமி ஒருத்தி அநியாயமாக உயிரிழந்ததாகக் கூறப்படுகின்றது.

பரிதாபகரமான இச் சம்பவம் சாவகச்சேரிப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

சாவகச்சேரி பங்களா வீதியில் வசிக்கும் — சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் தரம் ஒன்று மாணவியான — மரிய அலிஸ்ரா விேனாத்ரொபினா என்ற சிறுமியே பலியானாள்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் காய்ச்சலுக்காகச் சிகிச்சைபெற்று வந்த இச் சிறுமிக்கு ஆஸ்பத்திரியில் வழங்கப்பட்ட குளோறோகுயின் வில்லைகளில் நான்கை அவரது தாயார் வீட்டில் வைத்து சிறுமிக்கு வழங்கியுள்ளார். மருந்து உட்கொண்ட சுமார் அரை மணி நேரத்தில் சிறுமி மயக்கமுற்றதை அடுத்து அவரை அவசர அவசரமாக மீண்டும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். அங்கு குளுக்கோஸ் ஏற்றப்பட்ட நிலையில் சிறுமியின் உயிர் பிரிந்தது.

டாக்டர் கூறிய ஆலோசனைப்படியே நான்கு வில்லைகளைச் சிறுமிக்குக் கொடுத்ததாகத் தாயார் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று ஆஸ்பத்திரியில் விசாரணையை மேற்கொண்டனர்.

மேலதிக விசாரணையின் பொருட்டும் பிரேத பரிசோதனைக்காகவும் சிறுமியின் சடலத்தைப் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

(ஐ-31)

## நிவாரண விநியோகம்

அரியாலை, ஏப்ரல் 10

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான 73 ஆவது 'ஏ. பி' ஆகிய உலர் உணவு முத்திரைப் புள்ளிகளுக்கு நிவாரணம் வழங்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளூடாக நிவாரண விநியோகம் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

நிவாரணம் மற்றும் பொருள்களை விநியோகிக்கும் முகமாக சங்கத்தின் கிளைகள் யாவும் இன்றும் நாளையும் முழு அளவில் திறந்திருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-17)

## பொது கலைமாணி பரீட்சை முடிவுகள்

பேராதனை, ஏப்ரல் 10

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட பொதுக்கலைமாணி (பி.ஏ) பரீட்சை முடிவுகள் கடந்த 5 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளன.

அரசியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்டவர்களின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி முடிவுறாத நிலையில் மேற்படி பெறுபேறு வெளியிடப்பட்டுள்ளதாகவும் —

இதனால் அரசியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்டவர்களின் பெறுபேறுகள் இன்னும் ஓரிரு வாரங்களில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ். மாவட்டப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

[இ-7)

## தோற் பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம் ஏப்ரல் 10

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வடமராட்சி வடக்குப் பிரிவு பருத்தித்துறைக் கிளையின் ஆதரவில் நடைபெற்று வரும் புலோலி தெற்கு வதிரி தோற்பொருள் உற்பத்தி நிலையத்தின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் இன்று சனிக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வரை நான்கு நாள்கள் நடைபெற உள்ளன.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும் இவ்விழாவிற்கு, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஆண், பெண், பாலர்களுக்கான பாதணிகள், பாடசாலைப் பைகள், பயணப் பைகள், கைப்பைகள் மற்றும் பல தோற்பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

(ஐ-15-173)

## புதிய கட்டடத் திறப்பு விழா

'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் நிறுவப்பட்ட ஆனைக்கோட்டை ஆதவன் பாலர் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்புவிழா அண்மையில் ஆனைக்கோட்டை கிராம அலுவலர் வை. சந்திரராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

'யுனிசெவ்' நிறுவனத்தைச் சேர்ந்த அ. ப. சிறிஸ்கந்தராசா புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகன், ஆனைக்கோட்டை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சட்டத்தரணி மா. தியாகராசா, உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ந. சிவபாதம்[புத்தொளி] ஆகியோர் உட்பட மற்றும் பலர் இவ் விழாவில் உரையாற்றினார்கள். [ஐ-135]

## வள்ளுவர் விழா

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய வருடாந்த வள்ளுவர் விழா இன்று காலை 9, 30 மணிக்கு பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் ந. அரியரத்தினம் தலைமையில் நடைபெறும்.

கல்வித்திணைக்கள கட்டடப் பொறியியலாளர் கு. சிவபாலன் பிரதம விருந்தினராகவும் வடமராட்சி வலயக் கணக்காளர் இ. இராஜதுரை சிறப்பு விருந்தினராகவும் இதில் பங்குபற்றுவர்.

சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-6)

★ ★ ★

சோரன்பற்று கணேசா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் க. உதயகுமாரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

தென்மராட்சிக் கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. கயிலாயபிள்ளை பிரதம விருந்தினராகவும், ஓய்வு பெற்ற அதிபர் ந. தாமோதரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

## மகாபொல சான்றிதழ்கள்

யாழ். பல்கலைக்கழகத்தில் 1997-98 கல்வி ஆண்டிற்கான மகாபொல புலமைப் பரிசில் கிடைத்தவர்களில் ஜனவரி மாதம் மாவட்ட ரீதியாக நடைபெற்ற வைபவத்தின் போது தமது புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்களுக்குரிய புலமைப் பரிசில் சான்றிதழ்கள் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நலச் சேவைகள் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் நேரில் சமுகம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவர்களுக்கு வழங்கப்படும் இறுதிச் சந்தர்ப்பம் என்றும் — இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறும் —

அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## எழுத்தாளர் அகால மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 10

எழுத்தாளரும் பத்திரிகையாளருமான முன்னாள் பாடசாலை அதிபர் சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் வவுனியாவில் நேற்று நண்பகல் அகால மரணமானார்.

வவுனியா மணிக்கூட்டுச் சந்தியில் இராணுவ 'பவள்' வாகன விபத்தில் தலைநெரியுண்டு அந்த இடத்திலேயே மரணமானார். அவரது சடலம் நேற்று மாலை வரை வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. இன்று அவரது இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

சைவப்புலவர் தங்கரத்தினம் மூத்த சிறுகதை எழுத்தாளர் ஆவார். தினகரன், ஈழநாடு மற்றும் பத்திரிகைகளில் 'நகுலன்', 'இராசாக்குட்டி' என்ற புனை பெயர்களில் எழுதினார். இவர் தினகரன், ஈழநாடு, உதயன், ஈழநாதம் பத்திரிகைகளின் வெளியூர் செய்தியாளராகவும் நீண்டகாலம் பணி புரிந்தவர். இவருக்கு இறக்கும் போது வயது 63 ஆகும். [அ]

## நேர்முகப் பரீட்சை

வலி. வடக்கு, ஏப்ரல் 10

கிராம அலுவலர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று யாழ். செயலகத்தில் நடைபெறுகின்றது.

1997 ஆம் ஆண்டு கிராம அலுவலர்களுக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் கூடிய புள்ளி பெற்றவர்களே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-86)

## படைத்தரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

சம்பந்தப்பட்ட இராணுவ வீரர் இந்தப் பெண்ணுடன் காதல் உறவு கொண்டிருப்பதாக இராணுவ வீரரின் கட்டளை அதிகாரிக்கு தெரிய வந்ததையடுத்து 99 - 03 - 31 ஆம் திகதி அச்சுவேலி இராணுவ முகாம் சிவில்இணைப்பு காரியாலயத்திற்கு இந்த யுவதியின் பெற்றோர்கள் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட போது, இந்த யுவதிக்கும் இராணுவ வீரருக்கும் சில காலமாக காதல் உறவுகள் இருந்ததாக யுவதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதன் பின்பு இராணுவ வீரர் வேறொரு பகுதிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆனால் இந்த யுவதி இராணுவத்தினராலோ, குறிப்பிடப்பட்ட இராணுவ வீரராலோ பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார் என யுவதியின் பெற்றோர்கள் எந்தவொரு இடத்திலும் முறைப்பாடு செய்யவில்லை.

1999-04-05 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியையடுத்து அச்சுவேலி சேனைப் பிரிவும், இராணுவ பொலீஸாரும், சிவில் பொலீஸாரும் விசாரணைகளை நடத்தி மேலதிக [illegible] பட்டுள்ளது. [ஐ]

## 150 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 150 தபாற் பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலமாக நேற்றைய தினம் யாழ். எடுத்து வரப்பட்டன.

தபாற் பொதிகள் யாவும் இன்று முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும். என யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (ஐ-7)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

கொக்குவில் மத்திய சன சமூக நிலையத்தின் ஆதரவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகளின் விவரம் வருமாறு:

★ காலை 8.30 மணி — சென்ரலைட்ஸ் (சொக்ஸ்) அணி எதிர் மானிப்பாய் பரிஷ் வி. க. அணி;

★ பிற்பகல் 1 மணி — ஜொனியன்ஸ் வி. க. அணி எதிர் ஸ்ரான்லி வி. க. அணி.

(உ-3)


Jaffna, Sri Lanka
INSTITUTE OF INFORMATICS STUDIES

IMMEDIATE VACANCY

For a TELEPHONIST / RECEPTIONIST

The Ideal Candidate

★ Should be a smart Female with Excellent Command in written and Spoken English and

★ G. C. E. (O/L) Qualified and

★ Have a working knowledge in Windows - 95, MS- Word and Excel.

Forword your application on or before 20 - 04 - 99

- DIRECTOR
IIS,
100, ClockTower Rd,
Jaffna.

(சி/7150)


## மரண அறிவித்தல்

### ஸ்ரீ பத்மநாதன் விக்னேஸ்வரன்

நல்லூர் 69, வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபத்மநாதன் விக்னேஸ்வரன் 06-04-99 செவ்வாய்க்கிழமை அன்று லண்டனில் அகால மரணமானார்.

அன்னார்காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன்[முன்னாள் [முகாமையாளர் அரச வடிசாலைக் கூட்டுத்தாபனம், யாழ்.], பத்மாவதி ஆகியோரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி துரைரத்தினம் [மானிப்பாய்], திரு. திருமதி சிவஞானம் [கொட்டடி] ஆகியோரின் பேரனும், அருந்ததி, குமுதினி, விஜயராகவன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தம்பியும். காலஞ்சென்ற ஸ்ரீபத்மானந்தா [முன்னாள் நிதி முகாமையாளர், ஸ்ரீலங்கா சிமெந்து கூட்டுத்தாபனம்], ஸ்ரீபாஸ்கரன் [யாழ். கொமினிக்கேசன், யாழ். பல்பொருள் விற்பனை நிலையம்], செல்வமீரா [ஜேர்மனி]ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரமேந்திரா, பீஸ்மன், பவித்திரா, வாகீசன் ஆகியோரின் அருமை மாமனாரும், ரேணுவசாயின் ஆசைச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [12-04-99] திங்கட்கிழமை அன்று 17, Wellesley Road, Chiswick, London-W-4 இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

69, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

திருமதி ப. ஸ்ரீபத்மநாதன்
[தாய்]

[64655]

## வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில்
5-04-99 அன்று நடைபெற்ற

**எமது திருமண வைபவத்தின்**

போது வருகை தந்து சிறப்பித்து எம்மை ஆசீர்வதித்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு

**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டப முதலாம் ஆண்டு பூர்த்தி**

நாளில் நிர்வாகத்தினருக்கும் ஊழியர்களுக்கும் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு. திருமதி ஜெகதீஸ்வரன்**

**புதிய நதியா நகை மாளிகை**

யாழ்ப்பாணம்.

(64660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் நடமாட்டம் தடுக்கப்பட்ட பின்னரே மடுவில் படை வாபஸ்!

### அமைச்சர் ஜெயராஜ் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.10

மடுப் புனிதப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டதும் அங்கு நிலைகொண்டுள்ள படையினர் வாபஸ் பெறப்படுவர் என திட்டமிடல், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் விவாதம் நேற்றைய தினம் நாடாளுமன்றில் இடம்பெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மடுப்புனிதப்பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் பல்வேறு திட்டங்களை அமுல்செய்யவுள்ளது.

மடுப்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் அங்கு அத்தியாவசியஉணவுப பொருள்களின் விலை உயர்வாக இருந்தது. ஆனால் தற்போது அவ்வாறான நிலை இல்லை. - என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

# அம்பாறை வீரமுனையில் நேற்று கான்ஸ்டபிள் சூட்டுக்குப் பலி!

அம்பாறை,ஏப்.10

அம்பாறை மாவட்டம் வீரமுனைப் பகுதியில் றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்மாந்துறைப் பொலீஸ் பிரிவின் கீழ் உள்ள வீரமுனைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த நாகூர் சலீம் (வயது 32) என்ற பொலீஸாரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுகவீனம் காரணமாக மருந்து எடுப்பதற்காக பொலீஸ் நிலையத்தில் இருந்து மருந்தகம் ஒன்றுக்கு சைக்கிளில் சென்ற இவரை பின் தொடர்ந்து சைக்கிளில் சென்ற இருவர் சுட்டு விட்டுத் தப்பிவிட்டதாக பொலீஸார் தெரிவித்தனர். விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரே இத்தாக்குதலை நடத்தியதாக பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவத்தைஅடுத்து வீரமுனை, சொறிக்கல்முனை, வீரச்சோலை ஆகிய தமிழ்க் கிராமங்களைச் சுற்றி வளைத்த அதிரடிப் படையினர் அங்கு தேடுதலை நடத்தினர். (ஐ-ரீ-21-14)

# ஒருங்கிணைப்பு குழுவில் இருந்து அ.தி.மு.க. நேற்று விலகியது

சென்னை,ஏப்.10

இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசின் ஒருங்கிணைப்புக் குழுவில் இருந்து ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. உத்தியோகபூர்வமாக விலகிக்கொண்டதாக நேற்று அறிவித்துள்ளது.

அ.தி.மு.கவின் அவைத்தலைவர் நெடுஞ்செழியன்தலைமையிலான எட்டு அங்கத்தவர்கள் அடங்கிய குழு நேற்று சென்னையில் மேற்கண்ட அறிவிப்பை விடுத்தது.

நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், இந்தியாவில் உறுதியான ஆட்சியை ஏற்படுத்தும் நோக்குடனும் தமது கட்சி வாஜ்பாய் தலைமையிலான அரசில் இருந்து விலகிக்கொள்வதாகவும் -

பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயின் ஆட்சிக்காலத்தில் தீவிரவாதம் இந்தியாவில் உயிர்பெற்று விட்டது எனவும்-

இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானியும், பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸும் விடுதலைப் புலிகளுக்கு உதவியும் அடைக்கலமும் கொடுத்து வருகின்றமை இதனை எடுத்துக்காட்டுவதாகவும் -

அ.தி.மு.க. தெரிவித்துள்ளது.

இதேவேளை -

பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி அரசு கவிழ்ந்துவிடும் என்ற பேச்சுக்கே இடமில்லை என பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் வெங்கையாநாயுடு கல்கத்தாவில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி அரசு தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் அல்லது இந்தியா மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திக்கும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ஐ-7)

# அவசரகால சட்டம் நீடிப்பு

அவசரகாலச் சட்டத்தை நாடு முழுவதும் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை 97 அதிகப்படியான வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாகவும் -

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ ஆகியவற்றின் உறுப்பினர்கள் பிரேணைக்கு எதிராகவும் -

வாக்களித்தனர்.

ஐ.தே.க., புளொட் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடைபெற்ற போது நாடாளுமன்றில் பிரசன்னமாகி இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 103 பேரும், எதிராக 6 பேரும் வாக்களித்தனர். (ஐ-7)

## மேலும்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டடத் தொழிலாளர்கள் குழி வெட்டியபோது சேதமாக்கப்பட்டதாகக் கருதப்படும் ஆகக் குறைந்தது மூன்று எலும்புக் கூடுகளுடன் சேர்த்து மொத்தமாக 19 சடலங்களுக்குரிய எலும்புத் தொகுதிகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

மேலும் பல எலும்புக்கூடுகள் இருப்பதாகத் தெரியவந்துள்ளதை அடுத்து அகழ்வு வேலைகள் இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

அகழ்வுப்பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு புதுவருட விடு முறை வழங்குவதற்காக அகழ்வுப் பணிகள் இன்றுடன் நிறுத்தப்பட்டு மீண்டும் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-5-15-139-17-173)

## யுத்தத்தை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டம் காலை 10 மணிக்கு ஆரம்பமானது. இதில் ஆண், பெண்கள் இருபாலாரும் சுமார் ஐம்பது பேர் பங்குபற்றினர்.

உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்ற மேடைக்கு முன்பாக ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சுழற்சி முறையில் மறியலில் ஈடுபட்டனர்.

களுத்துறை விகாராதிபதி இந்திரியாகே பஞ்சரத்தின தேரர் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

"இந்த நாட்டில் நடக்கும் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். மாறி மாறி வரும் ஆட்சியாளர்கள் யுத்தத்தை தொடர்ந்தவண்ணம் இருப்பது கவலைக்குரியது. எனவே உடனடியாக யுத்தத்தை நிறுத்தி இருதரப்பினரும் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் - என்று அவர் கோரினார்.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமற்போன படையினரின் படங்கள், நவாலி தேவாலயம் மீது இடம்பெற்ற குண்டுவீச்சுத் தொடர்பான படங்கள், மடுத்தேவாலயப் பகுதி அகதி முகாம்களில் உள்ள சிறுவர்கள் போசாக்கின்மையால் வாடுவதைச் சித்திரிக்கும் படங்கள் போன்றவை அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

தெற்குச் சிறைகளில் உள்ள தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை. உட்படப் பல கோரிக்கைகளை போராட்டகாரர் முன்வைத்திருந்தனர்.


மாபெரும் மலிவு விற்பனை!

யாழ். 'சீமாட்டி'யின் புத்தாண்டு

மலிவு விற்பனை!

மலரும் புத்தாண்டை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட

சாறிகள், வேட்டி சால்வைகள், ஒறிஜினல் கிப்ஸ் சாரங்கள்
பெனியன்கள், ஸ்கேட் & பிளவுஸ், சேட், ரீ சேட்,
பேபி சூட், பாபறா, இன்ரர்கூலர், டயானா பிறின்ட்,
பட்டர் சில்க், சேட்டிங், சூட்டிங் துணி வகைகள்

இன்னும் பலப்பல புத்தம் புதிய தரமிக்க வர்ண வர்ண ஜவுளித் தினுசுகள் என்றும் எங்கும் கிடைக்காத விஷேட கழிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

**இந்தச் சலுகை ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 14 வரைதான்!**

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்!

மொத்தமாகக் கொள்வனவு செய்யும் வியாபாரிகளுக்கு அதிவிசேட கழிவுண்டு.

**சீமாட்டி** (புடைவைக்கடல்)

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

இதே மலிவு விற்பனை எமது கிளை நிறுவனமான 'மங்கை சில்க்' கிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மங்கை சில்க்

15, நவீன சந்தை,யாழ்ப்பாணம்.

**சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்**

**சீமாட்டி**

(சி-7043)



கபிலா காலணி அகம்

கபிலா சூ பலஸ்

இல.4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கபிலா ஸ்தாபனத்தாரின் புத்தாண்டு விசேட தள்ளுபடி விற்பனை**

*அத்துடன் எமது ஸ்தாபனத்தின் கபிலா என அச்சிடப்பட்ட பைகள் (BAG) பத்தினைக் கையளித்தால்*

ரூபா 300 பெறுமதியான காலணி ஒன்று இலவசம

இந்தச் சலுகை புத்தாண்டு தினம் வரை மட்டும்தான்

யாழ். நகரில் உங்கள் உள்ளம் கவர்ந்த காலணித் தெரிவுகளுக்கு புகழ் பெற்ற ஸ்தானம்

கபிலா

கொழும்பிலிருந்து நேரடியாக உள்நாட்டு, வெளிநாட்டு காலணிகளை கொண்டு வந்து விநியோகிப்பவர்கள

**கபிலா காலணியகத்தினர்**

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்.

**கபிலா சூ பலஸ்**

இல.4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

([illegible])



என்றும் உங்கள் தெரிவு

சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்

சூட்டிங், சேட்டிங், சேலைகள்,
சேலைத் துணிகள், சாரங்கள்
டிரஸ் மற்றிரியல்ஸ்,
பிறசியர்ஸ், வெஸ்ற்

**வகைகளுக்கும் மற்றும்**

**சகல விதமான புடைவைத் தினிசுகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்**

**சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்**

**(மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்)**

*21, மின்சார நிலைய வீதி,*
*நவீன சந்தை,*
*யாழ்ப்பாணம்.*

(64449) போன்: 2826


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி,361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

10 APR 1999

சஞ்சீவி
# சஞ்சிகை

10-04-1999 சஞ்சீவி

புதுமையும், எழிலும், பொலிவும் கொண்ட பட்டு, பருத்தி, ஜவுளி ரகங்களின் பட்டாடை உலகம்.

சிவகணேசன் ஸ்ரோர்ஸ்
இல. 41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(C/6879)

## கருத்துக் கலசம் — மேஜூரா

### நினைப்பது நடக்கும்

"நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே நீ ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் நீ பலவீனனாகவே ஆகிவிடுகிறாய். நீ உன்னை வலிமை படைத்தவன் என்று நினைத்தால், நீ வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுகிறாய."

-சுவாமி விவேகானந்தர்.

மனிதனின் மனத்துக்கும் அவனது குணாம்சங்களுக்கும், இயல்புகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குணாம்சங்கள், இயல்புகள் அவரவர் மனத்தில் இருந்து முளைப்பவையே - பிறப்பவையே.

நாம் நல்லவற்றையே நினைத்தால் எமக்கும் நல்லனவே கிடைக்கும். தீய எண்ணங்கள் எங்கள் மனத்தைக் கௌவிக் கொண்டால், தீய பலன்களே விளையும். தீய பலன்கள் துன்பத்தையும் வேதனையையும் விளைவிக்கும்.

மனம் போல் வாழ்வு என்பார்கள். எங்கள் மனதில் நல்ல சிந்தனைகள் பிறந்தால் நல்லனவற்றையே செய்வோம். நல்லனவற்றைச் செய்பவனுக்கும் சில வேளைகளில் சோதனைகளும் அவற்றின் பெறுபேறாக வேதனைகளும் வருவதுமுண்டு. அவ்வாறு வந்துவிட்டதே என்று நல்ல சிந்தனைகளைக் கைவிட்டு விடலாகாது. அது பலவீனம்.

மனப்பலவீனம் துன்பத்துக்கு வழி செய்யும். அந்தத் துன்பம் உளரீதியான சித்திரவதையாகவும் கூட மாறலாம். அது ஒரு வகை மரணமே. அதாவது உடலில் இருந்து உயிர் பிரியும் மரணத்துக்கு ஒப்ப, உயிர் இருக்கும் போதே சம்பவிப்பதாகும்.

மனவலிமை - மனத்தைரியம் - உள்ளவன் நேர்மையுள்ளவனாக, நீதிக்குப் பயந்தவனாக, நல்லன செய்பவனாக விளங்குவான். மனவலிமை வேறெங்கும் இருந்து வாங்குவதல்ல. ஒவ்வொருவனுக்கும் உள்ளே இருப்பதாகும். அதனை உணர்ந்து நாமே வளர்க்க வேண்டும்.

மனவலிமை உள்ளவனுக்கு மகிழ்ச்சிகரமான வாழ்க்கை கிடைக்கும். அவன் வளமான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்வான்.

ஆகையால் நல்லனவற்றைச் சிந்தித்ததால் - செய்ததால் - துன்பம் வந்ததே என்பதற்காக, அடுத்த பக்கம் மாறுவதற்கு நினைக்கக் கூடாது. அது தற்காலிகமானதே. நல்ல சிந்தனை எப்போதும் மகிழ்ச்சியையே தரும். அதுவே நிரந்தரமாகும்.

நினைப்பதெல்லாம் நடப்பதில்லை என்று சொல்வர். அதுவே பலரின் அனுபவமாக மாறுகிறது. ஆனால் மனதில் நம்பிக்கை உடையவனுக்கு அத்தகைய அனுபவம் உண்டாவதில்லை. எடுத்துக்கொண்ட - தொடங்கிய - கருமத்தில் உறுதியும் விடா முயற்சியும் அணி செய்யும் போதே மனதில் நம்பிக்கை பிறக்கும். தோல்விகளை வெற்றிக்கான படிகளாக எடுத்துக் கொண்டு உழைப்பது அவசியம். அதுவே நம்பிக்கையின் அத்திவாரம்: அடித்தளம்.

ஆகையால் -

நாம் மனதால் எதனை நினைக்கின்றோமோ, அதனை இன்றில்லாவிடினும் என்றோ ஒரு நாள் அடைய நேரிடும். அவ்வாறு கிடைப்பதற்கு இடையில் வேறு வழி - தீய சிந்தனைக்கு - மனம் மாறாது இருப்பது அவசியம்.

நல்ல சிந்தனை பிறப்பதற்கு நல்லறம் போதிக்கும் நூல்களைப் படிக்க வேண்டும். நல்லவர்களோடு சேர வேண்டும். அவர்களைப் பின்பற்றி வாழப் பழக வேண்டும்.

# வாழும்வரை வாட்டசாட்டம்

என்றென்றும் இளமையுடன் இருக்க எல்லோருக்கும் விருப்பம்தான். ஆனால் பாழும் உடம்பு விட்டுக் கொடுத்தால்தானே! ஊதிப் பருத்தோ, சவண்டு துவண்டோ இயலாமையின் எல்லையைத் தொட்டு நிற்கத் துடிக்கிறது அது.

நாவுக்கு ருசியாக கண்டதும் தின்றிட ஆசையோ அதிகம். கையைக் காலை ஆட்டி அசைத்திட அசதி விடுவதில்லை. உண்டதும் படுக்கை, கொண்டதும் குறட்டை.

'ஸ்நானம் - போசனம் - சயனம்' என்பார்கள். மூன்றும் கிரமமாக இருந்து விட்டால் போதும். உடம்போ உப்பிவிடும். தொப்பை மூன்றடி முன்னோக்கி நீளும்.

அன்றாடம் சற்றுத் துடிப்பாக இருந்து இப்பிரச்சினைகளுக்கு விடிவு காணத் தெரியாதவர்கள்பாடு சிரமம்தான். அவர்களுக்கு உதவி செய்யப் பல கொம்பனிகள் தமது வியாபார-விளம்பர உத்திகளைப் பயன்படுத்திப் பிழைக்கின்றன: வயிறு வளர்க்கின்றன.

'பயிற்சிகள் இல்லை. மருந்துகள் இல்லை. உணவுக் கட்டுப்பாடு இல்லை. ஒரே மாதத்தில் உங்கள் எடை குறைய எம்மை நாடுங்கள் என்ற விளம்பரங்கள் பத்திரிகைகளில் சர்வ சாதாரணம்.

எடை குறைக்கப்போய் உப்பி ஊதி வந்தவர்களும் உண்டு. பயன்பெற்றவர்களும் உண்டு. எல்லா இடங்களிலும் எல்லோருக்கும் இப்படி வசதிகள் வாய்ப்பதுமில்லை. வாய்த்தும் பயன் கிட்டுவதுமில்லை.

சுவாரசியமான ஒரு கதை சொல்வார்கள்.

வெளிநாடு ஒன்றில் போய் இறங்கினார் ஒரு தொப்பையர். ஒரு அறிவிப்பு கண்ணில் பட்டது. "இங்கே உங்கள் (Pocket இன்?) எடை குறைக்கப்படும்" என்ற விளம்பரம்தான் அது. உடனே விவரமறிய உள்ளே புகுந்து கொண்டார்.

'சாதாரண பயிற்சி 1000 டொலர் - ஒருமாதம் எடுக்கும்'

'ஸ்பெஷல் பயிற்சி 2500 டொலர் - ஒரு வாரம் மட்டுமே' என்று விளக்கம் சொன்னார்கள்.

ஆயிரம் டொலர் செலுத்தி சாதாரணம் என்று பதிந்து கொண்டார் வந்தவர். உள்ளே போனதும் ஓர் இருபது வயது இளம் பெண். அவள் ஓட, அவளைப் பிடிக்க இவர் துரத்த வேண்டும். இவர் துரத்தத் துரத்த அகப்படாமல் ஓடும் அவள் அழகே தனி.

அட. சாதாரணமே இப்படி என்றால் 'ஸ்பெஷல்' ஏப்படி இருக்கும்? உடனே 'ஸ்பெஷலுக்கு' மாறிவிட்டார் ஆசாமி.

பாவம். ஓர் எழுபது வயதுக் கிழவி துரத்தத் துரத்த அதனிடம் இருந்து தப்பிக்க இவர் ஓடிய ஓட்டம் இருக்கிறதே.........!

இனி எங்கள் எடைப் பிரச்சினைக்கு வருவோம். நாம் என்ன செய்யலாம். சிவனே என்று எடை ஏறவிட்டு சுகமே இருப்பது வசதிதான். வேண்டாம் என்று இளைக்க வேண்டின் பல வழிகள் உண்டு. அவரவர் தனது மனநிலை உடல் நிலைக்கு ஏற்ப வழிகளை நாடி ஆரோக்கியமாக - இளமையாக - பொலியலாம்.

வயிறு பெருப்பதால் வேண்டாத எடையைச் சுமந்துதிரிய வேண்டிய நிலைமை எழுகின்றது. அன்றாட அலுவல்களைச் செய்வதில் இடைஞ்சல் செய்வது தொப்பை. அது மட்டுமா? முள்ளந்தண்டு எலும்பின் கீழ்ப்பாகம் பளுவைச் சுமக்கிறது.

அத்துடன் வயிற்று மற்றும் இடுப்புத் தசைகள் களைத்தும் பலமிழந்தும் விடுகின்றன. இதனால் இடுப்புவலி - முதுகுவலி ஏற்படலாம். சீராக மலங்கழிப்பது கடினமாகும்.

இவற்றிலிருந்து விடுபட சில சில்லறைப் பயிற்சிகளை தினசரி செய்து வருவது சிறந்தது. மல்லாக்கப் படுத்திருந்தபடி கால்களை மாறி மாறி மடக்கி நீட்டி சைக்கிள் ஓட்டுவது போலப் பயிற்சி செய்வது ஒன்று. அடுத்தது இடுப்பில் கைகளை வைத்தபடி நிமிர்ந்து நின்று மூச்சுப் பயிற்சி செய்யலாம். மெதுவாக - சீராக காற்றை உள்வாங்கி மார்பை அகல விரியவிட்டு - பின் முற்றாக காற்றை வெளிவிடுவது.

## மு.சிவநேசன்

கைகளையும் கால்களையும் வீசியோ சுழற்றியோ மடிக்காது தரையைத் தொட்டோ செய்யும் பலவகைப் பயிற்சிகள். இவற்றை எல்லாம் ஒரே நாளில் செய்து உடம்பை முறிக்காமல் படிப்படியாக அதிகரித்து வரலாம். அப்போது சுமை தெரியாது.

பயிற்சிகளை தமது எண்ணப்படி செய்யாமல் தகுந்த வழிகாட்டலுடன் செய்வதே ஆரோக்கியத்துக்கு உகந்தது. இன்றேல் பாதிப்புக்கள் ஏற்பட இடமுண்டு.

அடுத்து - உணவுப் பழக்கவழக்கங்கள் எடையைச் சீராக்க உதவும் என எதிர்பார்க்கலாம்.

விரதம் இருப்பதோ - ஓரிரு வேளை உணவைத் தவிர்த்து விடுவதோ புத்திசாலித்தனம் ஆகாது. மீண்டும் சாப்பிடும்போது மூக்கு முட்டப் பிடி பிடிப்பதால் உடலில் கொழுப்பு ஏறுவது தவிர்க்க இயலாததாகிவிடுகிறது.


எனவே சீரான திட்டமிட்ட உணவே சிறந்தது. தேவைக்கு அதிகமான - அவரவர் உழைப்புக்கு மிஞ்சிய - கலோரிப் பெறுமானம் உள்ள உணவு வேண்டாத கொழுப்புச் சுவையை உடலில் ஏற்றி வரும்.

பல மணித்தியாலயங்கள் தொடர்ந்த ஓரிடத்தில் இருந்தபடி வேலை செய்பவர்கள் நேரம் கிடைக்கும் போதெல்லாம் உடம்புக்கு ஓட்டம் காட்டியே தீர வேண்டும். இன்றேல் நீண்டகால நோக்கில் உடம்பு உருப்படியாகி விடும்.

மூன்றுவேளை சாப்பாடு போதாதென்று இடையிடையே நொட்டு நொறுக்குச் சாப்பிடுவது பற்றி கூறப்போனால் இங்கே இரு கருத்துக்களுக்கு இடம்முண்டு. இது சாப்பாட்டைக் கெடுத்து ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்பாரும் உண்டு. சாப்பாட்டின் அளவைக் குறைக்க இது உதவும் என்பாரும் உண்டு.

எதற்கும் அதிக எடை ஏற்றத்தக்க உணவு வகைகளை இடையிலோ சாப்பாட்டிலோ தேவைக்கு மேலாகச் சேர்க்காமல் இருப்பதே மேல்.

அதிக தண்ணீர் குடிப்பதால் உடம்பு நீர்ப்பிடிப்பு ஆகிவிடும் எனப் பிழையாகக் கருதி தண்ணீர் குடிப்பதைக் கட்டுப்படுத்துவது மடமை.



தாராளமாக தண்ணீர் குடிப்பது உடம்பில் நீர்ச் சமநிலையைப் பேணவும் கழிவகற்றவும் துணை போகும். ஒரே முறையிலோ சாப்பாட்டு வேளையிலோ அதிகம் குடிக்காமல் - நாள் முழுவதும் பரவலாக நாம் குடிக்கும் தண்ணீரின் அளவை அதிகரிப்பதே சிறந்தது. இதனால் அடிக்கடி சிறுநீர் கழிக்கும் தொல்லை ஏற்படும் எனக் கலங்க வேண்டா. நாளாக நாளாக சிறு நீர்ப்பை பயிறப்பட்டு அங்கு நேரக்கட்டுப்பாடு பழகிவிடும்.

வயது ஏற ஏற உணவின் அளவை உடற் செயற்பாட்டுக்கு ஏற்ப சற்றுக் குறைத்து வருவது எடை அதிகரிப்பைத் தவிர்க்கத் துணை நிற்கும். எனினும் சிலகாலம் எடை குறைக்க எண்ணி உணவைக் கட்டப்படுத்துவதும் எடை குறைந்ததும் சாப்பிடுவதுமாக மாறி மாறிச் செயற்படுத்துவது உடல் நிலையை மோசமாக்கும். ஆண்டு முழுவதும் அதிகரித்த எடையுடன் வாழ்ந்து விடலாம்.

உணவைக் கட்டுப்படுத்தும் போதும் மாப்பொருள், கொழுப்பு, புரதம், விற்றமின்கள், கனியுப்புக்கள் போன்றவை தேவையான விகிதத்தில் தினசரி உடலுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம். இவற்றில் ஒரே அம்சத்தை அதிகம் எடுத்து மற்றொன்றைத் தவிர்த்து வயிற்றை நிரப்புவதால் கேடுதான் எஞ்சும். மதுபானம் கலோரிப் பெறுமானம் கூடியது. அதன் மூலம் தேவையான கலோரிகளை பெற்றுக் கொள்வதால் உணவில் உள்ள சக்தி உடற் சமநிலையைப் பாதிக்கவே செய்யும்.

ஓரளவுக்கு பச்சைக் காய்கறிகளை கிரக மாக சேர்த்துக் கொள்வது சிறந்த பயனைத் தரும்.

இளவயதிலேயே உணவுக் கட்டுப்பாடு பழக்கப்படல் வேண்டும்.

சிறுவர்களின் உணவில் கூட தேவைக்கு அதிகமாகக் கொழுப்புச் சேர்க்கப்படுவது கொழுப்புக் கலங்களின் விருத்திக்கு வித்திடும். இவ்வாறு தோன்றும் கொழுப்பு அழிவின்றி ஆயுள்வரை நிலைக்கவே நிலைக்கும்.

புட்டிப்பாலை விட தாய்ப்பால் குழந்தையின் உடலில் தேவையற்ற - விரும்பத்தகாத - கொழுப்பு சேர்வதை தடுக்கும் வல்லமை உடையது எனலாம்.

உண்ணும் உணவை தராசுத் தட்டில் போட்டு கலோரிப் பொறுமான அட்டவணையில் கணித்து தமது உடற் தேவைக்கும் பருமனுக்கும் ஏற்ப அளந்து உண்ணுவது எம்மைப் பொறுத்தவரை அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. எனினும் ஒரு குத்துமதிப்பான கணிப்பு அவசியமாகிறது.

பலரக போஷாக்கும் கொண்ட மூன்று வேளை உணவிலும் சேர்த்துப் பெறவேண்டிய ஒட்டு மொத்த கலோரிப் பெறுமானத்தை - மத்தியானம் இலையில் குவியும் சோறு ஒன்று மட்டுமே 'கவர்' பண்ணிவிட - மீதம் உண்பதெல்லாம் அவம் என வாழும் வாழ்வில் தொப்பை விழாமல் போகுமா?

விரும்பியவர்கள் கணிக்க வசதியாக அவரவருக்கு தினசரி தேவையான கலோரிப் பெறுமானத்தை இப்படி எட்டலாம் என ஆலோசனை கூறப்படுகிறது. ஒருவர் தனது எடையினை அடிப்படையாக வைத்தே இதைக் கணிக்க வேண்டும். அதுவும் எடை குறைக்க விரும்புபவர் தனது இலக்கினையே அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

50 கிலோ எடையுடைய ஓர் ஆணுக்கு தினசரி 1700 கலோரிகளும், 50 கிலோ எடையுடைய ஒரு பெண்ணுக்கு தினசரி 1350 கலோரிகளும் தேவைப்படுகின்றன எனலாம். எனவே ஆண் ஒருவர் தமது எடையை 35ஆல் பெருக்கியும், பெண் ஒருவர் தமது எடையை 27 ஆல் பெருக்கியும் தமது தேவையைக் கணித்துக் கொள்ளலாம் என மருத்துவ ஆலோசனை கூறப்படுகிறது. இதிலும் சம உரிமை கேட்பார்களோ என்னவோ?

இவற்றுக்கு ஏற்ப பலரக உணவும் கலந்து தயாரிக்கும் பட்டியல் ஒரு வேளைக்கே போதாது என்று ஏக்கம் பிறக்கலாம். இடையில் நொட்ட நொறுக்குகளும் 'கட்'தான். எனினும் நாளாக வயிறு பழகிவிடும். பயப்படவேண்டாம்.

நொட்டு நொறுக்குகளையோ சிற்றுண்டிகளையோ கண்ணில்பட மேசை முன்வைக்காமல் குசினிக்குள் பதுக்கிவிடுங்கள். சுலபமாக எடுக்காமல் எட்டுவதற்கு சிரமப்படும் வகையில் தூரத்தில் வைத்தால் அடிக்கடி நாட்டம் ஏற்படாது,

அவரவர் தேவையைக் கணித்துக் கூட்டி - அளவாகச் சமைத்துப் பகிர்ந்து எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டு முடித்துவிடல் வேண்டும். பின்பு குசினிக்குள் ஏதும் மீதம் விடக்கூடாது. குசினியும் துப்புரவாக இருக்கும். உடலும் மனமும் இலேசாக இருக்கும்.

உணவு பரிமாறப்படும் சாப்பாட்டுப் பாத்திரம் பெரிதாக இருப்பது வசதி என நினைக்கவேண்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கொட்டில்களில் 'பிஸ்னஸ்' எப்படி?

**சாவகச்சேரி. சி.சிவா.**

வித்துவானே பருவக் காய்ச்சல் என்றால் என்னவோ?

**☸ பருவத்தில் வயசுக் கோளாறினால் வரும் ச(ன்)னி இது. இந்தக் காய்ச்சலின் சூடு 'அரைப்' பாகைக்கு கீழும் 'கால்'ப் பாகைக்கும் மேலும் காயும்.**

☸ ☸ ☸

**மானிப்பாய். வி.கலைவாணி.**

காவியக் காதலுக்கும் நவீன காதலுக்கும் இடையில் என்ன வித்தியாசம்?

**☸ காவியக் காதலன் நளன், காதலி தமயந்தியைக் காட்டிலே விட்டுச் சென்றான். நவீன காதலனோ காதலியை வார்ட்டில் அல்லவா விட்டுச் செல்கின்றான்?**

☸ ☸ ☸

**கைதடி. சி. தயாளினி.**

முத்தையா முரளிதரன் மீது ஆஸ்திரேலியாவுக்கு என்ன கோபம் - தமிழன் என்பதாலா?




**சங்கானை. கோ.சுரேஸ்.**

குலைக்கின்ற நாய் கடிக்காது என்கின்றார்களே! உண்மையா?



**☸ நாயும் பழமொழி படித்துப் புரிந்து கொண்டிருக்குமானால் நீர் கூறுவது மெத்தச் சரி.**

**பயிற்றோலை. கி.ஜனகன்.**

அடங்காத பெண்டாட்டியை எப்படி அடக்கலாம்?




**☸ மொட்டைத்தலை டாக்டரிடம் விரைவாக முடிவளர்வதற்கு மருந்து எடுக்கப் போகும் அப்பாவி நோயாளி போலல்லவா நீர் இருக்கின்றீர்!**

☸ ☸ ☸

**கோப்பாய். தி.சோமசேகரம்.**

எனது மனைவி எனது பொக்கட்டில் அடிக்கடி கைவைத்துத் தொல்லை புரிகின்றாரே?

**☸ ஏதாவது குலுங்குகின்றது என்று பார்க்கின்றாராக்கும்! (சில்லறையைத்தான் சொல்லுகின்றேன்.)**

# வித்துவான் பதில்கள்

**நல்லூர். பிரேம்ஜி.**

விழிக்கும் மொழிக்கும் தொடர்பு உண்டா?

**☸ விழியில்லா முகம் இருண்டது. அது போல மொழியில்லா இனம் இருண்டது.**

**அத்தோடு மொழி பேச முடியாததை விழி பேசுவதை நீர் அனுபவத்தில் கண்டதில்லையா?**

☸ ☸ ☸

**கற்கோவளம். த.வசந்தன்.**

துரையப்பா ஸ்டேடியத்தில் பெரும் மனிதப் புதைகுழி இருப்பதாக அண்மையில் செய்திகள் வெளியிடப்பட்டன. இது யாருடைய வேலை?

**☸ செய்திகளை வெளியிட்டது பத்திரிகையாளர்கள் வேலைதான்!**

**வரணி. ஜே.சுகி.**

யாழ்ப்பாணக் கொட்டில்களில் 'பிஸ்னெஸ்' எப்படி........?




**☸ 'கிபீர்' விற்பனை என்று தொடங்கி கல்வி வியாபாரம் வரை பல விவகாரங்கள் இன்று கொட்டில்களிலும் கொட்டகைகளிலும் அரங்கேறுகின்றன. நீர் எதைக் குறிப்பிட்டாலும் அந்த பிஸ்னெஸ்கள் எல்லாம் இன்று பிய்த்துக் கொண்டு போவதுதான் உண்மை.**

☸ ☸ ☸

**மடத்தடி. பா.சத்தியசுதன்.**

ஓ!வித்துவானே!! உமது முன்வாய்ப் பற்கள் எங்கே?

**☸ வீட்டில் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்டதால், பல் டாக்டரிடம் வாயைக் காட்டி புதிதாக வாங்கிக்கட்டிக் கொண்டு விட்டேனே!**

☸ ☸ ☸

**குப்பிளான். செ.பகீர்.**

வித்துவான் ஐயா! நீங்கள் யாழ் மேயராக வரவேண்டும் என இறைவனை வேண்டுகிறேன். விருப்பமா?

**☸ எனக்கு மரண அறிவித்தல் போடுவதில் உமக்கு ஏன் அவ்வளவு அவசரம்?**

☸ ☸ ☸

**கொடிகாமம். ரஜினி.**

வித்துவான் ஐயா! வீதிகளில் பெண்களுக்கு 'கண்டோஸ்' கொடுத்துவிட்டு பின்னர் அவர்கள் வீடுகளுக்குச் செல்லும் ஆண்கள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?




**☸ முதலில் கண்ணால் 'டோஸ்' தருவார்கள். அதற்கு நீங்கள் பதில் 'டோஸ்' காட்டினால்தானே பின்னர் 'கண்டோஸ்' உடன் வழிமறிக்கின்றார்கள்? உங்கள் பதில் 'டோஸை' உறைப்பாகக் கொடுத்துப் பாருங்கள். பின்னர் கண்டோஸுடன் வழிமறிக்கின்றார்களா என்று.**

☸ ☸ ☸

வித்துவானே! ஆண்கள், 'கண்மை' இடலாமா?

**☸ அழகுக்கும் குளிர்ச்சிக்கும் கண்மை தேவை. ஆனால் அதைவிடத் தேவையான 'மை' ஒன்றுள்ளது. அது ஆண்மை!**

☸ ☸ ☸

**வட்டு.கிழக்கு. ச.சரிதா.**

வள்ளுவரைப் 'பொய்யா மொழியார்' என்கிறார்களே. திருக்குறளில் பொய் இல்லையா?

**☸ யார் சொன்னார்கள் இல்லை என்று? சாம்பிளுக்கு ஒன்று:-**

**'யான்நோக்குங் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்**
**தான் நோக்கி மெல்ல நகும்.'**

**இது காமத்துப் பாலில் 'குறிப்பறிதல்' அதிகாரத்தில் நான்காவது குறள். அதன் கருத்து 'யான் (காதலன்) நோக்கும்போது அவள் (காதலி) நிலம் நோக்குவாள். யான் நோக்காதபோது அவள் என்னை நோக்கி மெல்ல தனக்குள் சிரிப்பாள்'**

**நல்ல காதல் சித்திரம் போல குறள் விளக்கம் அமைகின்றது. சரி நான் நோக்கும் போது எனக்குத் தெரிகின்றது. அதை ஏற்கலாம். நான் நோக்காத போது (பார்க்காதபோது) அவள் என்னைப் பார்ப்பதுவும் தனக்குள் சிரிப்பதுவும் எனக்கு எப்படித் தெரியும்? தெரியாதுதானே? ஆகவே குறளார் பொய் சொல்கின்றார் என்று கூறலாமா?**

**காதலன் தன்னைப் பார்க்கவில்லை என்று எண்ணிக் கொண்டு காதலி அவனை நோக்குவதும் -**

**காதலி தன்னைப் பார்க்கவில்லை என்று எண்ணிக்கொண்டு அவளைக் காதலன் நோக்குவதுமாக -**

**ஒருவரை ஒருவர் மாறி மாறி 'மேய்வதை' திருவள்ளுவர் எப்படித்தான் விளக்குவது? அதனால்தான் இப்படிப் பொய்யுரைத்தார் அவர்.**

☸ ☸ ☸

**வேலணை. க.சந்திரன்.**

சமயம் விட்டு சமயம் மாறுபவர்கள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

**இக்கரைமாட்டுக்கு அக்கரைப்பச்சை என்ற பழமொழியை நீர் கேள்விப்பட்டதில்லையா?**

☸ ☸ ☸

**நாவலர் மடம். எஸ்.எஸ்.ராஜ்.**

வித்துவான் மாமா! யாழ்ப்பாணத்தில் உங்களுக்குப் பிடித்த இடம் எதுவோ?

**மருமகனே! நிச்சயமாக இப்போது முற்றவெளி, பொதுநூலகம், துரையப்பா விளையாட்டரங்கு ஆகியவை அல்ல.**

☸ ☸ ☸

**பண்ணாகம். உதயகலா.**

எவ்வித தப்பும் செய்யாமல் சிறைக்குச் சென்ற அனுபவம் உண்டா?

**இல்லறச் சிறையில் சிக்கி வாழுவதற்கு நான் செய்த தப்பு என்னவென்று தெரியாமல் முழுசுகிறேனே!**

☸ ☸ ☸

**கைதடி. க.ஞானமுத்து.**

வித்துவான் ஸார்! காதலுக்கு வரைவிலக்கணம் கூறுவீரா?

**☸ அவரவர் தமக்குத் தாமே வைக்கும் பொறி அது. புரியாமல் விழுந்துவிட்டு முழுசும் போதுதான் எல்லாமே புரியும்.**

☸ ☸ ☸

**வேலணை. குமாரி.**

நான் வெளிநாட்டு மாப்பிள்ளையை திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன. இப்போது அவர்களுக்கு சீதன 'ரேட்' என்னவோ?

**☸ உம்மால் முடிந்ததைக் கொடும். ஆனால் அதற்கு முன்னர் அவர் மிக அண்மையில் பெற்றுக் கொண்ட 'எய்ட்ஸ் கிளியரன்ஸ் சேர்ட்டிபிக்கெட்டை' தவறாது கேட்டு வாங்கிப் பரிசீலனை செய்து கொள்ளும். அல்லது விலையைக் கொடுத்து வினையை வாங்கியதாக முடிந்துவிடும்.**

☸ ☸ ☸

**சுன்னாகம். அன்பு.**

அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக் கால்வாய்குள் ஏராளமான கர்ப்பத்தடை உறைகள் கண்டுபிடிக்கப்பட்டதாமே. இது குறித்து உங்கள் கருத்து?

**☸அவர்கள் மிக முன்னெச்சரிக்கையாக இருக்கின்றார்கள்! (ஹி.....ஹி...! கால்வாய்க்குள் கிடக்கும் நுண்ணிய பொருளையும் கூட கவனிக்கக்கூடிய வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மிக எச்சரிக்கையாக இருக்கின்றார்கள் என்று கூறுகின்றேன். அவ்வளவுதான்! வேறு அர்த்தம் பண்ணிக்கொள்ளாதீர்கள்.**

# பருவக் காய்ச்சல் என்றால் என்ன?

**☸ கொழும்புக்கு வந்தால் குண்டு எறிவார்கள் என்று உலகக் கோப்பை ஆட்டம் ஒன்றையே கோட்டை விட்ட கங்காரு நாட்டவர்களுக்கு, தமது தேசத்திற்கு வந்து முரளி தப்பாமல் பந்து எறிகின்றார் என்ற கோபம். காய்க்கின்ற மரத்துக்குத் தானே கல் எறி விழும்? மொத்தத்தில் இந்தப் பிரச்சினையின் மையமே எறிதல்தான்.**

☸ ☸ ☸

**கட்டுடை. ஆர்.குமார்.**

அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு என்கின்றார்களே. அது என்ன?

**☸ அரச வானொலி குறித்து கேள்வி கேட்டு வித்துவானை மாட்டவைக்கத் திட்டம் போடுகின்றீர் போலை.**

☸ ☸ ☸

**இணுவில். அ.கந்தையா.**

காதலர் கிசு கிசுப்பது உமக்கு விளங்குமா?

**☸ 'கிசுகிசு'த்தலும் விளங்காது: 'கிஸ் கிஸ'தலும் விளங்காது. சும்மா விடுமய்யா என்னை.....!**

☸ ☸ ☸

**இடைக்காடு. ரீ.சுந்தர்.**

பஸ் பயணத்தின் போது தவறுதலாகக் கை பட்டதற்கு இளம் பெண் பயணி ஒருவர் என்னைத் திட்டிவிட்டாரே.....?

**☸ எந்த இடத்தில்.....? (ஹி.... ஹி...... 'இடை'க்காட்டிலா என்று கேட்டேன்.)**

☸ ☸ ☸

**வட்டூர். ஐ.கனகமணி.**

'முத்தம் கொடுத்தால் ஆயுள் நீடிக்கும்' என்கின்றதே ஓர் உளவியற் சஞ்சிகை....!

**☸ முத்தம் இடம் மாறிக் கொடுத்தால் சில சமயம் அந்தக் கணமே அது ஆயுள் நீக்கும் என்பதை உலகவியற் சஞ்சிகையில் படித்துக் கொள்ளும்.**

☸ ☸ ☸

**மருதங்கேணி. நி.நித்தியகுமார்.**

ஓர் ஆண், ஓர் பெண்ணை அடிக்கடி பார்த்தால் அது எங்கே போய் முடியும்?




**☸ அடிக்கடி பார்ப்பது அடிபிடியாகவும் முடியும். சிலவேளை ஆணை எடுபிடி (கணவன்) ஆக்குவதிலும் போய் முடியும்.**

☸ ☸ ☸

**கரவெட்டி. எஸ்.நந்தகுமார்.**

ஒரே கிராமத்தில் பாடசாலைக்கும் டியூட்டறிக்கும் அதிபராக இருக்கும் ஒருவர் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?

**☸ அரச ஆஸ்பத்திரியிலும் தனியார் மருத்துவ மனைகளிலும் ஒரே சமயத்தில் பணிபுரியும் டாக்டர்களின் அண்ணனாக இருப்பார்.**

☸ ☸ ☸

**அராலி வடக்கு. வி.ராஜன்.**

வித்துவானே! எனது முதலாளி அம்மா என்னை 'ஓவர் டைம்' செய்யச் சொல்லுகின்றாரே! என்ன செய்யலாம்?

**☸ உமக்கு [illegible] ஓவராக [illegible] செய்து தொலைக்க வேண்டியதுதானே!**

☸ ☸ ☸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் வசம் 'சாம்' ஏவுகணை: போரில் திருப்பம் வருமா?



'சாம்' ஏவுகணை

வடக்கு - கிழக்கு பகுதிகளில் கடந்த சுமார் ஒரு மாத காலப்பகுதியில் (5.3.99 முதல் 6.4.99 வரை) பாதுகாப்புப்படைகளுக்கு எதிராகக் புலிகள் நடத்திய - குறிப்பிடத்தக்க - 26 தாக்குதல்களில் சுமார் 70 படையினர் (பொலீஸார், ஊர்காவற்படை, விமானப்படை அடங்கலாக)பலியாகி உள்ளனர். இந்த எண்ணிக்கையில் சுமார் அரைவாசியானோர் வரை காயமடைந்து களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

பெரும்பாலும் இவை அனைத்தும் புலிகள் நடத்திய சிறுசிறு தாக்குதல்களாகும்.

புலிகளின் இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்ற பகுதிகளை யாழ். குடாநாட்டு, வன்னியில் கண்டி வீதிக்கு கிழக்குப் புறமாக உள்ள நிலப்பரப்பு, மேற்குப்புறமாக உள்ள நிலப்பரப்பு, மற்றும் கிழக்கு மாகாணம் என நான்கு வலயங்களாகப் பிரிக்கலாம்.

### குடாநாட்டில்

யாழ். குடாநாடு கடந்த மூன்று ஆண்டு காலத்துக்கு மேலாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ள இந்தப் பகுதியில் கடந்த ஒரு மாத காலத்தில் குறிப்பிடத்தக்க எட்டு தாக்குதல் சம்பவங்கள், அல்லது தாக்குதல் முயற்சிகள் இடம்பெற்றுள்ளன.

நல்லூர்ப் பகுதியிலும், திருநெல்வேலியிலும் பொலீஸார் மீது பிஸ்ரல் குழுவினர் எனச் சந்

## புலிகளின் சிறு தாக்குதல்கள் வடக்கு - கிழக்கில் அதிகரிப்பு

தேகிக்கப்படும் புலிகள் தாக்கியுள்ளனர். நாவற்குழி பொலீஸ் சோதனை நிலையம், யாழ்.நகரை அண்டிய முலவைச் சந்தி பொலீஸ் சோதனை நிலையம், பளை நகரில் உள்ள சோதனைத் தடை நிலையம் ஆகிய இடங்களில் குண்டு வெடிப் புக்கள் இடம் பெற்றுள்ளன. இவை படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் முயற்சிகளாகவே கருதப்படுகின்றன.

இந்தத் தாக்குதல்கள் அனைத்தும் இராணுவத்தின் பலம் குறைக்கப்பட்ட - ஐதாக்கப்பட்ட- பொலீஸாரின் பாதுகாப்பில் உள்ள - பகுதிகளிலேயே இடம்பெற்றுள்ளன.

அதேசமயம் புன்னாலைக்கட்டுவன் - புத்தூர் வீதியில் இராணுவ வாகனம் ஒன்று புலிகளின் கிளைமோர் கண்ணிவெடியில் சிக்கிச் சேதமடைந்தது. பளை தர்மக்கேணிப் பகுதியில் படையினர் பயணம் செய்த உழவு இயந்திரம் ஒன்று அமுக்க வெடியில் சிக்கியதில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர். இவ்விரு சம்பவங்களும் இராணுவத்தினரின் பலம் பெரிதும் குறைக்கப்படாத இடங்களில் இடம்பெற்றுள்ளன.

### வன்னியில்

வன்னிப்பகுதியில் கடந்த ஒருமாத காலத்தில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களை வகைப் படுத்தும்போது கண்டி வீதிக்கு(ஏ-9) மேற்குப்புறமாக உள்ள பெருநிலப்பரப்பிலேயே குறிப்பிடக் கூடிய பத்து தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

'போர்க் கோஷம்' என்ற படைநடவடிக்கை மூலம் படையினர் இரு கட்டங்களில் கைப்பற்றிய பிரதேசங்களை உள்ளடக்கிய மன்னார் மாவட்டத்திலேயே புலிகளின் தாக்குதல்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

தள்ளாடி இராணுவ முகாம் மீதான புலிகளின் அகோர ஆட்டிலறி ஷெல் தாக்குதலைவிட குறிப்பிடக்கூடிய வேறு ஒன்பது தாக்குதல்களை இப்பகுதியில் புலிகள் நடத்தி உள்ளனர்.

இந்த ஒன்பது சம்பவங்களிலும் - பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்ட தகவல்களின்படி - 30க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். இவர்களில் இராணுவத்தினர் 10 பேரும், விமானப்படையினர் 4 பேரும், ஊர்காவற்படையினர் 4 பேரும், பொலீஸார் 12 பேரும் அடங்குவர். இவர்களில் பொலீஸாரின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.

'எடிபல' இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்டு, நீண்டகாலம் இராணுவத்தின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்து, அண்மையில் பொலீஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பொறுப்பின் கீழ் வந்த மன்னார் - வவுனியாவீதி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலேயே பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இப்பகுதியில் படையினரின் போக்குவரத்தை இலக்க வைத்து வெற்றிகரமான நான்கு கண்ணி வெடித் தாக்குதல்களைப் புலிகள் நடத்தியுள்ளனர்.

இதைவிட மன்னார் நகரின் பிரதான வீதியிலும் பொலீஸார் தாக்கப்பட்டுள்ளனர். வேறு சில இடங்களில் படைநிலைகள்புலிகளின் ஷெல் வீச

இயங்கு நிலையில் வைத்திருப்பது நாட்டின் பொருளாதாரத்தில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

எனினும் யுத்தத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டிஇருப்பதால் அரசு மக்களுக்குப் பல காரணங்களைக் கூறி செலவுகளைச் சமாளித்து வருகிறது. ஆனால் இந்நிலையைத் தொடர முடியாது. ஆண்டுதோறும் வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூட இதனைக் கூறத் தவறுவதில்லை.

இராணுவத்துக்கான செலவுகளைக் குறைப்பதாயின் இயங்கு நிலையில் உள்ள துருப்பினரின் எண்ணிக்கையை இயன்றளவு குறைக்க வேண்டும். எனவே துருப்பினரின் முழுப்பலத்தையும் பயன்படுத்தி புலிகளின் வசமுள்ள பிரதேசங்களைக் கைப்பற்ற வேண்டும்.

இவற்றைக் கருத்திற் கொண்டே கைப்பற்றப்பட்ட பகுதிகளில் படையினரின் செறிவைக் குறைப்பதிலும், அங்கிருந்து அவர்களை முன்னணி நிலைகளில் குவித்து புதிய படைநகர்வுகளை முன்னெடுப்பதிலும் படைத்துறை கவனம் செலுத்தி வருகிறது. இந்த வகையிலேயே வடக்கில் கைப்பற்றப்பட்ட பகுதிகளின் பாதுகாப்புப் பொறுப்புக்கள் பொலீஸ் மற்றும் விசேட அதிரடிப் படைகள் வசம் கைமாற்றப்பட்டு வருகின்றன.

(இது குறித்து 6.3.99 சஞ்சீவியில் இதே பத்தியில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது)

மன்னார் மாவட்டத்தின் பெரும் பகுதியில் இராணுவம் வாபஸ் பெறப்பட்டு பொலீஸாரும், விசேட அதிரடிப்படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

குடாநாட்டிலும், வன்னியிலும் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இராணுவத்தின் பலம் குறைக்கப்பட்டு வருவது புலிகளைப் பொறுத்தவரை பெரும் சவாலான விடயமாகும்.

ஏனெனில் துருப்புக்கள் இன்றியே பெரிய பிரதேசத்தை தக்கவைத்திருக்க வாய்ப்பான சூழல் அமைவது இராணுவரீதியில் அரசுக்குப் பெரும் சாதகமான நிலைமை ஆகும்.

படையினரின் இந்த உத்தியை தொடர்ந்தும் அனுமதித்தால் மேலும் புதிய நிலப்பிரதேசங்களை இழக்கவேண்டிய நிலை புலிகளுக்கு ஏற்படலாம்.

பொலீஸாரினதும் மற்றும் துணைப்படைகளினதும் உதவியுடன் பெரிய பிரதேசத்தில் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளைப் பாதுகாக்க முடியும் என்பதை நிரூபிக்கும் நிலைமை வடக்கில் குடாநாடு உட்பட கைப்பற்றிய பகுதிகளில் உருவாகுவதை விரைந்து தடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் புலிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் இராணுவத்தின் செறிவு ஐதாக்கப்பட்டுள்ள இடங்களில் தமது தாக்குதல்களை அவர்கள் முடுக்கி விட்டுள்ளனர். அங்கும் இங்குமாக சிறு சிறு தாக்குதல்களை விடாமல் நடத்துவதன் மூலம் பாதுகாப்பு நெருக்கடியை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இதன் மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்குவதுடன் மீண்டும் படையினரின் செயற்பாட்டை அப்பகுதி

மறுபக்கம் வ்கக்பாுவ

வார விமர்சனம்

நல்லூர் தாஸ்

சுக்கு இலக்காகி உள்ளன.

வன்னியின் மேற்கு நிலப்பரப்பில் புலிகளின் சிறு சிறு தாக்குதல்கள் அதிகரித்திருப்பதையே இவை காட்டுகின்றன.

குடாநாட்டிலும், வன்னிப் பகுதியிலும் சிறு சிறு தாக்குதல்களைப் புலிகள் தீவிரப்படுத்தி வருவது ஏன்?

இலங்கை இராணுவத்தின் ஏழு டிவிசன்களைச் சேர்ந்த சுமார் 63 ஆயிரம் துருப்புக்கள் யாழ். குடாநாட்டிலும், வன்னிப் பகுதிகளிலும் நிலைகொண்டுள்ளன. இதைவிட ஆயிரக்கணக்கான விசேட அதிரடிப்படையினரும், பொலீஸாரும் இப்பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு லட்சம் படையினரைக் கொண்ட இலங்கை இராணுவத்தில் 65 சதவீதமான துருப்புக்கள் குடாநாட்டிலும், வன்னிப்பகுதியிலும் முடக்கப்பட்டிருப்பது அரசுக்குப் பெரும் நெருக்கடியைஏற்படுத்தும் விடயம். இந்தத் துருப்புக்களை தொடர்ந்தும் இயங்கு நிலையிலேயே வைத்திருக்க வேண்டிய அவசியம் உள்ளது. இராணுவத்தை அதன் ஆளணி அம்புகளோடு

களில் விரிவுபடுத்தும் கட்டாயத்தை ஏற்படுத்துவது புலிகளின் நோக்கம்.

கடந்த ஒருமாத காலத்தில் புலிகள் நடத்தியுள்ள தாக்குதல்கள் இதனையே காட்டுகின்றன.

### புலிகளிடம் புதிய ஏவுகணை

விடுதலைப் புலிகள் தங்கள் விமான எதிர்ப்புப் பலத்தை அதிகரித்துள்ளதாக மீண்டும் தகவல் வெளியாகி உள்ளது.

தோழில் சுமந்து சென்று விமானங்களை தாக்கக்கூடிய ரஷ்யாவின் 'சாம்-16' ரக ஏவுகணைகளை புலிகள் வாங்கியிருக்கிறார்கள்.

உலக அளவில் பாதுகாப்பு, உளவு மற்றும் ஆயுத விவகாரங்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்டு வரும் 'ஜேன்ஸ் டிபென்ஸ் வீக்லீ (Jane's Defence Weekly) என்ற சஞ்சிகை அதன் பிந்திய வெளியீட்டில் இந்தத் தகவல்களைத் தெரிவித்திருக்கிறது.

சர்வதேச ரீதியில் தமிழர் விவகாரங்களைச் செய்திகளாக வெளியிட்டு வரும் 'தமிழ் நெற்' என்ற 'இன்ரநெற்' செய்தி அமைப்பு 'டிபென்ஸ் வீக்லி'யின் தகவலை அப்படியே செய்தியா வெளியிட்டது.

புலிகள் எத்தனை ஏவுகணைகளை பெற்றுள்ளனர் என்பதை அந்த சஞ்சிகை வெளியிடவில்லை.

புலிகள் பலமான விமான எதிர்ப்புப் படைப் பிரிவு ஒன்றை வைத்துள்ளனர் என்பது புதிய செய்திஅல்ல:ஆனால் புலிகளிடம் உள்ளவிமான எதிர்ப்பு ஏவுகணைகள் பற்றி அவ்வப் போது முரண்பாடான தகவல்களே வெளியிடப்பட்டு வந்தன.

1995 ஆம் ஆண்டு பலாலிக்கு அருகே வைத்து விமானப் படையின் அவ்ரோ விமானங்கள் இரண்டை புலிகள் சுட்டு வீழ்த்தியிருந்தனர். அமெரிக்கத் தயாரிப்பான 'ஸ்ரிங்கர்' ரக ஏவுகணை மூலமே புலிகள் அவற்றைச் சுட்டதாக அச்சமயம் ஸ்ரீலங்கா பாதுகாப்புத்துறையினர் நம்பினர். ஆனால் 'ஒலிகன்'ரக பீரங்கி மூலமே



'ஸ்ரிங்கர்' ஏவுகணை

விமானத்தைச் சுட்டதாக அப்போது புலிகள் உரிமைகோரியிருந்தனர். விமானப்படை விமானங்கள், ஹெலிகள் என்பன பல தடவைகள் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வந்துள்ளன. எனினும் தம்வசம் விமான எதிர்ப்பு ஏவுகணை (Anti Aircraft Missiles) இருப்பதாக புலிகள் ஒப்புக்கொண்டதில்லை.

தோளில் சுமந்து இடத்துக்கிடம் எடுத்துச் செல்லக் கூடிய 'சாம்' ரக ஏவுகணை பனிப்போர் காலத்தில் சோவியத் தலைமையிலான 'வார்சோ' நாடுகளில் பிரபல்யம் பெற்றுவிளங்கின.

ரஷ்யப் படைகளும் ரஷ்ய ஆதரவு பெற்ற தீவிரவாத அமைப்புக்களும் இந்த ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்திவந்தன. அமெரிக்காவின் 'ஸ்ரிங்கர்' ரக ஏவுகணைகளுடன் ஒப்பிடும்போது ரஷ்யாவின் 'சாம்' ரக ஏவுகணைகள் தரங்குறைந்தவை ஆகும்.

புலிகள் இந்த சாம் ஏவுகணைகளை ஆசிய நாடு ஒன்றில் இருந்தே பெற்றுள்ளதாக ஆசியாவை தளமாகக் கொண்ட உளவு அமைப்புகள் கூறியுள்ளன. கம்போடியா அல்லது தாய்லாந்து வழியாக இவை புலிகளைச் சென்றடைந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.


புலிகளின் கைகளில் 'சாம்' ஏவு கணைகள் கிடைத்திருப்பது பற்றிய தகவல் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நடைபெற்றுவரும் போரில் இது ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். *

## ஒரு மாத காலத்தில் இடம்பெற்ற தாக்குதல்கள்

*5.3.99 - அம்பாறை சின்னவத்தையில் புலிகளின் அதிரடியில் 5 அதிரடிப் படையினர் காயம்.
*6.3.99 - கோப்பாய் சந்திக்கு சமீபமாக கிளைமோர் கண்ணி ஒன்றை படையினர் செயலிழக்கச் செய்தனர்.
*6.3.99 - மணலாறு குஞ்சுக்குளம் என்னுமிடத்தில் புலிகள் நடத்திய தாக்குதலில் 2படையினர் பலி.
*8.3.99 - நாவற்குழி சோதனைச் சாவடிக்கு அருகே குண்டு வெடிப்பு.
*9.3.99 - நல்லூரில் பொலீஸார் மீது புலிகள் சூடு. இரு பொலீஸார் காயம்.
*10.3.99 - இரணைஇலுப்பைக்குளம் - மூன்றுமுறிப்பு பகுதி படை நிலைகள் மீது புலிகள் ஷெல் வீச்சு: இரு அதிகாரிகள் பலி.
*11.3.99 - வாழைச்சேனையில் புலிகளின் தாக்குதலில் சிப்பாய் பலி.
*12..3.99 - பளைநகரப் பகுதியில் பொலீஸ் சோதனை நிலையம் அருகே குண்டு வெடிப்பு.
*17.3.99 - தள்ளாடி இராணுவத்தளம் மீது புலிகள் ஆட்டிலறி வீச்சு. ஆயுதக் களஞ்சியம் அழிவு: 11 படையினர், 4 ஊழியர் பலி.
*17.3.99 - யாழ்ப்பாணம் முலவைச் சந்தியில் பாதுகாப்பு அரணுக்குள் குண்டு வெடிப்பு:
*17.3.99 - வவுனியாவில் இருந்து மாமடு நோக்கி டிராக்டரில் சென்ற படையினர் கண்ணியில் சிக்கினர். இரு பொலீஸார், 4 ஊர்காவலர் பலி.
*18.3.99 - கனகராயன்குளம் பகுதியில் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் 2 படையினர் பலி: 3 பேர் காயம்.
*19.3.99 - மன்னார் நானாட்டானில் புலிகளின் தாக்குதலில் 3 பொலீஸார் பலி.
*21.3.99 - பூவசரங்குளம் - இரணைஇலுப்பைக்குளம் வீதியில் உழவு இயந்திரம் மீது கிளைமோர் தாக்குதல். 6 படையினர் பலி: மூவர் காயம்.
*23.3.99 - திருநெல்வேலிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டில் 2 பொலீஸார் காயம்.
*24.3.99 - புன்னாலைக்கட்டுவன் - புத்தூர் வீதியில் படையினர் வாகனம் ஒன்று கினைமோரில் சிக்கியது.
*25.3.99 - மன்னார் நகரின் பிரதான வீதியில் புலிகளின் தாக்குதலில் இரு பொலீஸார் பலி.
*28.3.99 - தள்ளாடி முகாம் மீது புலிகள் மீண்டும் ஷெல் வீச்சு.
*28.3.99 - வவுனியா புளியங்குளம் பகுதியில் உழவு இயந்திரம் மீது புலிகள் கிளைமோர் தாக்குதல்: 4 விமானப்படையினர் பலி.
*28.3.99 - நீர்வேலி கரந்தன் பகுதியில் படையினர் மீது கிரனேட் வீச்சு.
*29.3.99 - மணலாறு ஒதிய மலைப்பகுதியில் இராணுவவாகனம் மீது புலிகள் கண்ணி வெடித்தாக்குதல்: ஒன்பது படையினர் பலி.
*30.3.99 - மன்னார் உயிலங்குளம் தடைமுகாம் மீது புலிகள் ஷெல் வீச்சு.
*01.4.99 - மூதூர் வைத்தியசாலை அருகே பொலீஸார் மீது தாக்குதல்: 2 பொலீஸார் ,சிவிலியன் மரணம்.
*2.4.99 - மன்னார் முருங்கன் வீதியில் -கட்டை அடம்பன் பகுதியில் - பொலீஸ் பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதல்: 5 கான்ஸ்டபிள்கள் பலி: 6 பேர் காயம்.
*3.4.99 - பளை தர்மக்கேணி பகுதியில் படையினரின் டிராக்டர் மீது அமுக்க வெடித்தாக்குதல்: நால்வர் பலி.
*6.4.99 - மட்டக்களப்பு காவத்தமுனை படைமுகாம், வாழைச்சேனை பிரிக்கேட் தலைமையகம் ஆகியவற்றின் மீது புலிகள் தாக்குதல், 3 படையினர் பலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை ஆட்டம் காண வைத்த விஷ்ணுபகவத் விவகாரம்!



இந்தியாவில் மீண்டும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தற்போதைய நெருக்கடியில் இருந்து பாரதீய ஜனதா அரசு தப்பிப்பிழைக்குமா என்பதில் அரசியல் அவதானிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

மத்தியில் உள்ள பாரதீய ஜனதா கூட்டணியின் பிரதான கட்சிகளில் ஒன்றாக இருந்து வருகின்றது அ.தி.மு.கழகம். இந்தக் கட்சியில் 18 எம்.பிக்கள் உள்ளனர். ஆகவே இவர்களின் ஆதரவு இன்றி பாரதீய ஜனதா ஆட்சியில் நீடிப்பது சாத்தியம் அல்ல.

பாரதீய ஜனதாக் கூட்டணியில் இருந்து விலகப் போவதாக அ.தி.மு.க. கோடிகாட்டி இருப்பதே தற்போதைய நெருக்கடிக்குக் காரணம்.

வழமை போன்று வெறும் அச்சுறுத்தல்களுடன் செல்வி ஜெயலலிதா இம்முறை நின்றுவிடவில்லை. தனது கோரிக்கைகளை முன்வைத்து அரசைக் கவிழ்ப்பதற்கு அ.தி.மு.க. முடிவு செய்துவிட்டது போன்றே தெரிகின்றது. புதுடில்லியில் கடந்த சில நாள்களாக இடம்பெற்று வரும் அரசியல் சதுரங்கக் காய்நகர்த்தல்கள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

கடற்படைத் தளபதி விஷ்ணுபகவத் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட மூன்று கோரிக்கைகளை செல்வி



விஷ்ணு பகவத்

ஜெயலலிதா மத்திய அரசிடம் முன்வைத்தார். அந்த மூன்று கோரிக்கைகளையும் அமைச்சரவை கடந்த திங்களன்று நிராகரித்தது. அதனை அடுத்து மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த அ.தி.மு.க. அமைச்சர்களான கடம்பூர் ஜனார்த்தனமும் தம்பித்துரையும் தமது அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

ஜெயலலிதாவின் கோரிக்கைகளை நிராகரிக்கும் அமைச்சரவைத் தீர்மானம், அ.தி.மு.க. அமைச்சர்கள் பதவிதுறப்பு ஆகியவை இந்த நெருக்கடியில் தீர்வு ஏற்படும் வாய்ப்புக்களை அறவே இல்லாமல் செய்துவிட்டன.

மத்திய அரசில் அ.தி.மு.க. தொடர்ந்து அங்கம் வகிப்பதா? அல்லது இல்லையா? என்பது குறித்து முடிவு எடுக்கும் அதிகாரத்தை அ.தி.மு.க. செயற்குழு செல்வி ஜெயலலிதாவுக்கு ஏகமனதாக வழங்கியுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை செல்வி ஜெயலலிதா புதுடில்லி செல்கிறார். பாரதீய ஜனதா அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை விலக்கிக் கொள்வது குறித்து புதுடில்லியில்வைத்து செல்வி ஜெயலலிதா அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விஷ்ணு பகவத் விகாரம

கடற்படைத் தளபதி விஷ்ணுபகவத் பதவி நீக்க விவகாரமே தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு பிரதான காரணம் ஆகும். ஐக்கிய முன்னணி அரசு ஆட்சியில் இருந்தபோது - அதாவது தேவகௌடா பிரதமராக இருந்தபோது - கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டவர் விஷ்ணு பகவத். தேவகௌடாவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த ஐ.கே. குஜ்ராலின் ஆட்சிக் காலத்திலோ அல்லது பாரதீய ஜனதா ஆட்சியின் ஆரம்பக் காலத்திலோ விஷ்ணுபகவத் குறித்து குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படவில்லை.

ஆனால் கடந்த டிசம்பர் 30இல் அவர் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸினால் திடீரெனப் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். இந்தியாவின் பாதுகாப்பு ரகசியங்களை வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு வெளியிட்டதாக, விஷ்ணு பகவத் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இதற்குப் பதிலடியாக ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது விஷ்ணு பகவத் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார். விஷ்ணுபகவத் பதவி நீக்கம் செய்யப்பட்டது குறித்தும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது அவர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்தும் விசாரிக்க நாடாளுமன்றக் கூட்டுக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று பிரதான எதிர்கட்சியான காங்கிரஸ் கோரியது. மத்திய அரசு பல்வேறு காரணங்களைக் கூறி இதனைத் தட்டிக்கழித்து வந்தது. இத்தகைய நிலையிலேயே மார்ச்27 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற பாரதீய ஜனதாக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அரசு ஏற்க முடியாத மூன்று கோரிக்கைகளையும் செல்வி ஜெயலலிதா முன்வைத்தார்.

*கடற்படைத் தளபதி விஷ்ணுபகவத் மீண்டும் பதவியில் அமர்த்தப்படவேண்டும்.

*பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய நாடாளுமன்றக் கூட்டுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

*விசாரணைகள் நேர்மையாக நடைபெறுவதற்கு ஏதுவாக பாதுகாப்பு அமைச்சரை அவரது பதவியிலிருந்து விடுவிக்கவேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையுமே மத்திய அமைச்சரவை கடந்த திங்கட்கிழமை நிராகரித்தது. அதன் எதிரொலியே இரு அ.தி.மு.க. அமைச்சர்கள் பதவி விலகியதும் அரசுக்கான ஆதரவை் விலக்கிக் கொள்ளப்போகும் அ.தி.மு.க.வின் அச்சுறுத்தலும் ஆகும்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட விஷ்ணுபகவத் பாதுகாப்பு அமைச்சரை பெரும் ஊழல் பேர்வழி என்று குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் கடந்த மாதம் 14 ஆம் திகதி வீஷ்ணுபகவத் நீதிமன்றத்தில் சத்தியக் கடதாசி ஒன்றை சமர்ப்பித்தார். அந்த சத்தியக் கடதாசியில் உள்ள விடயங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறியே நடாளுமன்றக் கூட்டுக் குழுவை நியமிக்கும் கோரிக்கையை காங்கிரஸ் முதலில் முன்வைத்தது.

கடற்படையின் 'ஒப்பரேஷன் லீச்' நடவடிக்கையை நிறுத்தும்படி பாதுகாப்பு அமைச்சர் 27-08-98இல் பணிப்புரை விடுத்ததாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்த சத்தியக் கடதாசியில் விஷ்ணுபகவத் தெரிவித்தார். இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில செயற்படும் தீவிரவாதிகளுக்கு அந்தமான் தீவுகளுக்கு ஊடாக ஆயுதங்கள் கிடைப்பதைத் தடைசெய்யும் நடவடிக்கைதான் 'ஒப்பரேஷன் லீச்'.

## ஆர்.எஸ்.எஸ். மீது குற்றச்சாட்டு

விஷ்ணுபகவத் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னணியில் இந்து தீவிரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ். சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. விஷ்ணுபகவத்தின் மனைவி நிலோபர் மும்பாயில் பிரபல சட்டத்தரணி. இவர் சிவசேனை முக்கியஸ்தர்கள் சிலர் குற்றவாளிகளாகக் காணப்பட காரணமாக இருந்தார் என்று கூறப்படுகின்றது.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக விசாரிக்க அன்றைய அரசு ஆணைக்குழு ஒன்றை நியமித்தது. பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் சார்பாக இந்த ஆணைக் குழுவில் நிலோபர் ஆஜரானார்.

இவரது வாதத் திறமையால் சிவசேனை முக்கியஸ்தர்கள் சிலர் குற்றவாளிகளாகக் காணப்பட்டது ஆர்.எஸ்.எஸ்.அமைப்புக்கு பெரும காழ்ப்புணர்வை ஏற்படுத்தி இருந்ததாகக் கருதப்படுகின்றது.

## காங்கிரஸின் கோரிக்கை

பாதுகாப்பு அமைச்சர் மீது விஷ்ணுபகவத் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று காங்கிரஸ் உட்பட எதிர்க்கட்சிகள் கோரிக்கை முன்வைத்தன.

முக்கிய பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக விஷ்ணுபகவத்துக்கு எதிராக அறிக்கைகள் கிடைத்திருப்பதால் நாடாளுமன்றத்தில் விவாதிப்பது நாட்டின் பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என்று அரசு தெரிவித்து இதனை முதலில் தட்டிக்கழித்து விட்டது. எனினும் மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு சபைகளையும் கொண்ட ஒரு குழுவை நியமிக்க சபாநாயகர் இணங்கினார். விஷ்ணுபகவத் விவகாரத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டுமா என்பது குறித்து இந்தக் குழு தீர்மானிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தக்குழு நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் நியமிக்கப்படவில்லை. எனவே நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு உள்ள அதிகாரம் இந்தக்குழுவுக்கு வழங்கப்படவில்லை. இந்தக் குழுவின் அதிகாரம் குறித்து தெளிவான விளக்கமும் அரசால் வெளியிடப்படவில்லை.

விஷ்ணுபகவத விவகாரம நாடாளுமன்றத்தில் விசாரிக்கப்படுவதையோ அல்லது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவால் விசாரிக்கப்படுவதையோ விரும்பாததாலேயே அந்தஸ்தும் அதிகாரமும் இல்லாத குழுவை அரசு நியமித்தது என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ் சாட்டின.

இந்த நிலையில் 193ஆவது நிலையியற் கட்டளையின் கீழ் ஏப்ரல் 12ஆம் திகதி அதாவது எதிர்வரும் திங்கட்கிழமை இந்த விவகாரம் மக்களவையில் விவாதிக்கப்படும் என்று சபாநாயகர் அறிவித்தார்.

இரு சபைகளினதும் கூட்டுக்குழு விசாரிக்க வேண்டும் என்ற காங்கிரஸின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. 193ஆவது நிலையியற் கட்டளையின் கீழ் நாடாளுமன்றத்தில் நடத்தப்படும் விவாதத்துக்கு வாக்

### ஜெயலலிதாவினால் மீண்டும் நெருக்கடி

கெடுப்பு நடத்தப்படுவதில்லை.

விஷ்ணுபகவத் விவகாரம் மக்களவையில் விவாதிக்கப்படுவதை தவிர்பதற்கு அராங்கம் முதலில் மேற்கொண்ட முயற்சிகளும் -

பின்னர் வாக்கெடுப்பு நடத்த முடியாத பிரிவின் கீழ் விவாதத்துக்கு சம்மதித்ததும் -

மக்களவை - மாநிலங்களவை கொண்ட நாடாளுமன்றத்தின் கூட்டுக் குழு விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்ததும் -

இந்த விவகாரத்தில் அரசு விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்பதை தெளிவாகக் காட்டின.

## அரசியல் சதுரங்க காய் நகர்த்தல்கள்

பெண்களின் அரசியல் விவகாரக் கண்காணிப்புக்குழு மார்ச் 26 ஆம் திகதி புதுடில்லியில் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் தலைமையில் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்தது. பெண்களுக்கு தமது கட்சியில் மூன்றில் ஒரு பங்கு ஒதுக்கியதற்காக செல்வி ஜெயலலிதா இந்தக் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டார். இந்தக் கருத்தரங்கில் அவர் கௌரவிக்கப்பட்டார். இந்தக் கருத்தரங்கிற்குப் பின்னரே அரசியல் காய் நகர்த்தல்கள் ஆரம்பிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. அடுத்த நாள் 27ஆம் திகதி பாரதீய ஜனதாக் கூட்டணிக் கட்சியின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது. இரண்டு நாள்கள் கழித்து 29ஆம் திகதி சுப்பிரமணிய சுவாமி நடத்திய விருந்துபசாரத்தில் சோனியா காந்தியும் கலந்து கொண்டார்.

காங்கிரஸின் கோரிக்கைகளுக்கு ஒப்பான நிலைப்பாட்டை பாரதீய ஜனதாக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜெயலலிதா முன்வைத்ததும் அதன் பின்னர் சுப்பிரமணியசுவாமி நடத்திய விருந்துபசாரத்தில ஜெயலலிதாவுடன் சோனியா காந்தியும் கலந்து கொண்டதும் அ.தி.மு.க. காங்கிரஸை நோக்கி நகரும் அறிகுறியாகவே கருதப்படுகிறது.

## தேர்தலுக்கு காங்கிரஸ் தயாரா?

மத்திய அரசுமீது ஜெயலலிதா தொடுக்கும் நெருக்கடிகளின் பின்னணியில் காங்கிரஸும் இருப்பதாகக் கருதப்படுகின்ற போதிலும் காங்கிரஸ் மற்றொரு தேர்தலுக்குத் தயாரா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

காங்கிரஸ் தலைமையில் கூட்டணி அமைத்து மாற்று அரசு உருவாக்குவது பெரும்பாலும் சாத்தியம் இல்லை என்றே கருதப்படுகின்றது.

மாற்றுஅரசு அமைக்கும் நிலைமை ஏற்பட்டால் பீஹாரில் செல்வாக்குப் பெற்று இருக்கும் ராஷ்ட்ரிய ஜனதா தள், உத்தரபிரதேசத்தில் செல்வாக்குப் பெற்று இருக்கும் சமாஜ்வாதிக் கட்சி, மேற்கு வங்காளத்தில் வலுவான தளத்தைக் கொண்டிருக்கும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் ஆகியவற்றின் ஆதரவு காங்கிரஸுக்குத் தேவை. இந்த மூன்று மாநிலங்களிலும் மக்களவையில் 181 உறுப்பினர்கள் உள்ளனர். எனவே இந்த மூன்று மாநிலங்களிலும் தனது தளத்தை விரிவுபடுத்துவதற்கு காங்கிரஸ் முனைப்பாக ஈடுபட்டுள்ளது.

மேற்கண்ட மூன்று கட்சிகளின் ஆதரவுடன் மாற்று அரசு அமைத்தால் அந்த மூன்று மாநிலங்களிலும் தளத்தை விரிபடுத்தும் காங்கிரஸின் நடவடிக்கைகள் பாதிக்கப்படும்.

கர்நாடகம், ஆந்திரா, கோவா, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் எதிர்வரும் நவம்பர் மாதத்திலும் மத்திய பிரதேசத்திலும் ஒரிஸாவிலும் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாத்திலும் சட்ட சபைத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. இவற்றிலும் வெற்றி அடைந்து தனக்குச் சார்பான பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதிலேயே காங்கிரஸ் கவனம் செலுத்தி வருவதாகீ நம்பப்படுகிறது.

பாரதீய ஜனதா அரசைப்பொறுத்தவரை விஷ்ணுபகவத் விவகாரத்தில் அரசு கவிழமாட்டாது என்று பிரதமர் வாஜ்பாய் உறுதியாகத் தெரிவித்துள்ளார். மத்தியில் பாரதீய ஜனதாக் கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. வெளியேறி காங்கிரஸுடன் கூட்டுச் சேரும் பட்சத்தில் தற்போது அரசுக்கு ஆதரவு அளிக்கும் நிலையில் உள்ள பிரதான கட்சிகள் தி.மு.க.வும் தமிழ் மாநில காங்கிரஸும்தான். தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் தீவிர காங்கிரஸ் ஆதரவாளர். ஆனால் அ.தி.மு.க. காங்கிரஸுடன் கூட்டுச்சேரும் பட்சத்தில் காங்கிரஸை ஆதரிக்கும் நிலையில் தமிழ் மாநில காங்கிரஸ் இல்லை.

மக்களவையில் தி.மு.கவுக்கு ஆறு உறுப்பினர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸுக்கு மூன்று உறுப்பினர்களும் உள்ளனர்.

அ.தி.மு.க. வெளியேறும் பட்சத்தில் பாரதிய ஜனதாக் கூட்டணியில் தி.மு.க.இணையுமா என்ற கேள்விக்கு தி.மு.க. செயற்குழுவே இது குறித்து முடிவு செய்யும் என்று கருணாநிதி அளித்த பதில் மத்தியில் பாரதீய ஜனதாக் கூட்டணியில் தி.மு.க. உட்பட சில எதிர்க்கட்சிகள் சேரும் வாய்ப்பை அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டு அரசியலைப்பொறுத்தவரை கருணாநிதியும் ஜெயலலிதாவும் ஒருவரை ஒருவர் வீழ்த்துவதற்காக எவருடனும் கூட்டுச் சேரத் தயாராக இருந்து வருகின்றனர்.

தி.மு.க. அரசு கலைக்கப்படவேண்டும். தம்மீதான வழக்குகள் வாபஸ் பெறப்படவேணடும் என்பதே ஜெயலலிதாவின் பிரதான நோக்கம். இதற்காகக் கடந்த காலங்களில் மத்திய அரசுக்கு பல்வேறு நெருக்கடிகளை ஜெயலலிதா கொடுத்து வந்துள்ளார். தற்பொழுது விஷ்ணுபகவத் விவகாரத்தை துரும்பாகப் பயன்படுத்தி அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் அ.தி.மு.க. இறங்கி இருப்பது ஜெயலலிதாவின் சந்தர்ப்பவாத அரசியலின் உச்சமே. *



புதுடில்லியில் சுப்பிரமணிய சுவாமி அளித்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட ஜெயலலிதாவும் சோனியாவும.

## உலக உலா

என். பி. சிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி
## உங்கள் கவிதைகள்...

ஆயுதங்கள் அனைத்தும்
அழிக்கப்பட வேண்டியவையே
எனினும்
அழிப்பதற்குமோர்
ஆயுதம் வேண்டுவது
மனித விதி

**- தே.கவிதா**
கல்வியன்காடு.



சரிந்து போன எங்கள் சரித்திரத்தை
சம்மட்டி கொண்டு சரி செய்வோம்!
வானமே எல்லை - என்று
வடுப்பட்ட எங்கள் தேசத்தில்
வளைந்து போன வாளினால்
வரலாறு எழுதுவோம்.....
சுதந்திரக் காற்றின் சுவாசமெல்லாம்
சும்மா இருந்தால் கிடைப்பதில்லை!

**- தமிழன்பன்**
தும்பளை.

ஓ... பாவி மனிதனே
சூரிய வாளும் பூமியினுள்
புதைய மறுக்கின்றதே,
காரணம் புரிகின்றதா?
பாசமுள்ள பூமித்தாயின்
கரங்களினுள் அப்பாவிகள்,
அவர்களை இனியாவது
நிம்மதியாகத் துயிலவிடு!

**- ச. தயாபரன்**
மட்டுவில்.

வீரனே உனது வாள்
மழுங்கிவிட்டதா?
தீட்டு.... நன்றாகத் தீட்டு - ஆனால்
தமிழனை வாழ வைப்பதற்கா-அல்லது
சந்திகளில் தலைகளை வீசுவதற்கா?
எனக்குப் புரியவில்லை!

**- ஊர்க்குருவி**
செம்பியன்பற்று

உழைக்கும் கரங்களை ஒடுக்க முடியாது
உதிக்கும் சூரியனை அடக்க முடியாது.

**- கல்வளைக் கவிதாயினி**

நான்,
ஒன்றும் காப்பிய நாயகனாய்,
வில்லுடைக்கப் புறப்படவில்லை,
புதைந்த என் உறவுகளின்
புதைகுழிகளைப்
புரட்டிப்பார்க்கும்
தர்மத் தலைவனாய்.....

**- எஸ். அருந்ததி**
உடுத்துறை.

அகழ்வாரைத் தாங்கும்
நிலமென்ன செய்யும்?
எனினும்
ஆழத் தோண்டு!
எச்சரிக்கையுடன்
ஏனெனில்
எலும்புக் கூடுகள்
நொருங்கிவிடும்!

**- நயினை இராகுலன்-**

**மகா நிர்வாணம் போதித்தவர்களின்**
**வதை முகாமில்**
**உன்கோலம் முழு நிர்வாணம்!**
**அதன் விளைவு**
**சிங்கத்தின் கையில் உள்ளதை**
**நீ உன்**
**அங்கத்தில் எடுத்துக் கொண்டாய்!**

**- கதா -**

**முகம் காட்ட மறுக்கும்**
**மன்மதா~ நீயென்ன**
**சண்டியனா...?**

**- எஸ்.வி. ரூபன்**
அராலி.

உன்
வாள் வீச்சில்
வாழ்வு இழந்த
உயிர்களுக்கு
நிகராகுமா? உனது
வாள் வளைக்கும்
பிராயச்சித்தம்?

**-ஜெயகிருஷ்ணா**
சாவகச்சேரி.

ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தைக் கொடு!
யேசுவின் போதனை........
கன்னத்தைக் கொடுத்தே
களைத்துப் போனவர் நாம்.
அகிம்சையே அடிவாங்கி
பல வருடங்களாச்சு
வாளுக்கு வாள்!
துப்பாக்கிக்குத் துப்பாக்கி!
தவறினால் நீ
அடிமை ஆக்கப்படுவாய்.

**- அ. தெய்வேந்திரன்**
நல்லூர்.

எத்தனை உடல்களைக் கிழித்த வாள்?
எத்தனை உயிர்களைக் குடித்தவாள்?
எத்தனை சிரங்களை அறுத்த வாள்?
எத்தனை குருதியை சுவைத்த வாள்?
வந்த ஆரியம் தாங்கிய வாள்!
நின்ற ஆரியம் ஏந்திய வாள்
ஆனால் இன்று.......
திமிர்பிடித்த கொலை வாள்
சுட்டெரிக்கும் சுதந்திர வேட்கை முன்
சுத்தியாலால்சுறுட்டி சுக்குநூறாக்கப்படுகிறது!

**- பூநகரி அப்துல்லா**

**அரிமாவின் கரம் பற்றியுள்ள**
**வாளினை எடுத்து உடைக்க**
**எனக்கும் கூட ஆசைதான்!**
**ஆனாலும் என்ன செய்ய ?**
**என் மீசையை வளர்க்கக் கூட**
**எனக்குச் சுதந்திரமில்லை.....**
**ஏனென்றால் நான் .**
**கம்பசிற்கு எடுபட்டிருக்கின்றேன்.**

**- இரா. நீலன்**

கடின முயற்சியென்றால்
காரணம் இருக்கத்தான் செய்கிறது.....
ஒரு வேளை...
செம்மணி வெளியினிலே
மாதிரி மண் எடுகிறாரோ?

**-வி. நிஷோதன்**
பளை.

யுத்தத்தை வெறுத்தா
வாளினை முறிக்கிறீர்
இல்லையேல்........
நவீன ஆயுதங்கள்
உண்டென்றா முறிக்கிறீர்?

**- வயலூர் முருகன்**

**ஓ....பயில்வனே**
**நீ சம்மட்டி கொண்டு**
**வாளை ஏற்ற**
**நினைப்பது....மடமை**
**ஏனெனில் இது மனித**
**புதைகுழிகளால்**
**இறுகிப் போன**
**எம் தாயகமல்லவா!**

**- ஜெ.வாணி**
-சாவகச்சேரி.

நாற்றிசையிலும்
நானிலங்கள் பறிபோக
கால்பதித்த தேசத்தில்-காலாற
நானிருந்த போது.......
புதைகுழியின் கீழிருந்த
குற்றுயிரும்
"வாளேந்திய
வன்னியன் பரம்பரையில்-நீ
வந்த பின்பும்
வாளாங்கிருப்பதாவென்று"
எனைநோக்க..........
விடியலைத்தேடி
நானும்
புறப்பட்டதில்
தவறில்லையென்று- உன்
மனமும்
உரைக்காதோ?......

**-எஸ். தீபன்**
அச்சுவேலி.

சிங்கம் ஏந்திய வாள்
சிறுபான்மையினரை அழித்து நிற்கிறது
அங்கங்களை வெட்டும் அரிவாள் கூட்டம்
அணியணியாய்த் திரிகிறது......
எண்டிசைப் போற்றும் எம்மவர் பூமியை
எக்காளமிட்டு பறிக்க நினைக்கும்
சிங்கள வாளின் சின்னப் புத்தியை
சங்கமமாக்கச் சம்மட்டியுடன்
சதிர் கொண்டு புறப்படு தமிழா!

**- மனோகர்**

அரசியல் நெறிக்கு
நல்வழி கூறும்
அறிஞர் கூற்று
சுதந்திரம்......
சமத்துவம்
சகோதரத்துவம்.....
இன்று வளைந்து போன
இச் செங்கோலை
நிமித்துங்கள் நிதானமாய்!

**- க. நாகராசா**

## மௌன மொழி 29



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்காலம் பிறக்கும்
பொழுதொன்று புலரும்
உறுதி தளராதே!
தற்கால அடக்குமுறையின்
அராஜகக் கரங்கள்
உன் ஆடையைக் களைந்து
உன் சுதந்திரத்தின் ஆன்மாவில்
பதித்த கோணல் வடுக்களை
கற்கால ஆடையில் நின்றேனும்
தட்டி, நிமிர்த்தி, நீட்டி, நெளிவெடுத்து,
தரணிக்கோர் பாடம் புகட்ட
தயங்காதே தமிழா!

**- வதிரி வாசன்**

ஓ... மானிடனே
என்னை அள்ளித் தின்றாய் மழலையில்
நான் அழவில்லை.
கிள்ளி எறிந்தாய் சிறுவயதில்......
நான் கதறவில்லை.
இன்று... குற்றுயிராய்க் கிடக்கும்
குவலயமாய் குமுறுகிறேன்.
வ்ளால் நீ குற்றுவதை
இனியும் நான் பொறுப்பேனா?

**- சு.ப. கஜானன்**
அச்சுவேலி.

*சிதைந்த உலகில்*
*புதைந்த சமாதானத்தை மீட்க*
*வீரன் ..........*
*வீறுடன் நடக்கின்றாய்!?*
*அதற்கு முன் - சற்று*
*அமைதியாய் நில்*
*உனக்கு முன் சென்றவர்கள்,*
*எவரையும் இன்னமும்*
*திரும்பி வரக்காணோமே!!"*

**- ச.சுஜிதா**
அச்சுவேலி.

கல்தோன்றி மண்தோன்றா
காலத்து முன்தோன்றி
வேல்பிடித்து
போர் நடத்தி
கற்றோரும் மற்றோரும்
தோள் கொடுத்து
தூக்கி வளர்த்த
எம்பிரதேச மண் வளத்தில்
குடியேற்றமெனும் சொற்கேட்டு
வதம்செய்ய
வாளெடுத்த வாலிபனே
வாழ்க நீ!

**- பண்ணாக நாரதன்**

வேண்டுவது சமாதானம்
வேண்டாதது யுத்தம்
போர் வாள் இனி எதற்கு
மனிதா?

**-இணுவை எஸ். கவிதா**

வாளையும் வாழ்வையும்
செப்பனிடு!
நாளைய நகரத்தை
நறுக்கிவிடு!

**- மனியூர் ரட்ணேஸ்**

**ஒற்றை வீரனே!**
**உன்போல**
**ஒரு சிலர் போதும்**
**பெற்ற மண் பெற.........**
**வளைந்த நின்**
**வாளாக**
**நம் தேச வீரம்**
**நிமிர்த்துவதற்கு**
**உன் போன்றோரை**
**நிதமும்**
**தேடுகிறது**
**என் அன்னை தேசம்**

**- ச.சாரங்கா**
சங்கத்தானை.

எலும்புகள் மட்டுமே
எஞ்சுகிற தேசத்தில்
எதனைச் செதுக்கிவிட
அத்தனை பிரயத்தனம்?

**- சௌஜன்யா**

**ஓ..... வீரனே!**
**உன் உடலுறுதி....**
**இல்லை உன் வாளுக்கு!**
**வீசி எறிந்து விட்டு**
**இறங்கு மனவுறுதியுடன்**
**அகிம்சைப் போரில்!**

**- செ. சுகந்தா**
நீர்வேலி.

தமிழா!
உனக்கு வாளெதற்கு?
காணாமற்போன - எம்
சொந்தங்கள்
புதையுண்டனவோ?!
மண்வெட்டியைத் தூக்கு
எச்சங்களையாவது
கண்டுபிடிப்போம்!

**-இணுவை றொட்றக்**

# நிதர்சனம்



கிழக்கு வானில் சூரியன் உதயமாகி வெகுநேரம் ஆகிவிட்டது என்பதனை அதன் வெப்பக் கிரணங்கள் உணர்த்தின.

வீட்டு முற்றத்தின் ஒரு பக்கத்தில் நிலத்தில் குந்தியபடி, கால்கள் இரண்டையும் கைகளால் வளைத்துப் பிடித்தபடி அமர்ந்திருந்த மனோகரி வெய்யிலின் வெப்பம் தன்மேல் படிந்ததனால் சுய உணர்வு பெற்றாள். கண்களை அகல விரித்து வீட்டுவாயிலை நோட்டமிட்டாள். அவள் பார்வையில் ஒருவித ஏக்கம் நிழலாடியது.

கண்களைத் திருப்பி,அதேமுற்றத்தின் இன்னொரு பக்கத்தில், வீட்டின் கீழ்ப்படிகளில், அமர்ந்திருந்த மகள் வசந்தியை நோட்டமிட்டாள். வசந்தி சப்பாணி போட்டு அமர்ந்தபடியே, வானத்தை உற்று நோக்கியபடி இருந்தாள். அவள் மீது இன்னும் வெய்யிலின் வெப்பம் படவில்லை.

நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளியிட்டவாறே மனோகரியின் கண் பார்வை திரும்பியது. நடு முற்றத்திற்கு வந்ததும், நிலை குத்தி நின்றது.

நடு முற்றத்தில் ஓர் அடுப்பு. அதன் மீது பொங்கற்பானை. அருகில் அரிசி, தேங்காய், சர்க்கரை ஆகியன இருந்தன. மறுபுறத்தில் விறகு குவித்தபடி இருந்தது.

அதற்கு நேர் எதிரான தென்மேற்குத்திசையில் ஒரு கும்பம், தலைவாழையில் பச்சையரிசி பரப்பி வைக்கப்பட்டிருந்தது. அதனருகில் சாணத்தில் பிடிக்கப்பட்ட பிள்ளையார். அறுகம்புல் நிறைந்து காணப்பட்டது. குத்துவிளக்கும் அலங்கரித்தது.

அடுப்பு எரிந்து, நூர்ந்து, வெகு நேரமாயிருந்தது. பானையில இருந்த நீர் ஆறிவிட்டிருந்தது.

**புத்தாண்டு சிறப்புச் சிறுகதை**

குத்துவிளக்கு எண்ணெய்முடிந்துவிட்டதனால், திரிகளும் எரிந்துவிட்ட நிலையில், காட்சியளித்தது. தேங்காய் துருவப்பட்டு அரைகுறை நிலையில் காணப்பட்டது. இவற்றையெல்லாம் மனோகரியின் கண்கள், ஒரு முறை நோட்டமிட்டு, மீண்டும் வீட்டு வாயிலுக்கே திரும்பி, அங்கு நிலை குத்தி நின்றன.

மீண்டும் ஒரு நீண்ட பெருமூச்சு!

வாசகர்களை நெடுநேரம் மர்மச் சூழலில் திகைக்க வைத்து விட்டேன் போல இருக்கிறது. மெய்சிலிர்க்கும் மர்மக் கதைபோல இருக்கிறதா?

அப்படி ஒன்றுமேயில்லை. அந்த வீட்டின் நிதர்சன நிலை அதுதான். அதனையே விவரித்தேன். வேறொன்றும் இல்லை.

அன்று தமிழ்ப்புத்தாண்டு. சூரியனுக்குப் பொங்கிப் படைத்து பூரிப்படையும்நாள். ஒவ்வொரு தமிழன் வீட்டிலும் நிறைவான நாள்.

ஆனால் மனோகரியைப் பொறுத்தவரையில் - அவள் குடும்பத்தினரைப் பொறுத்தவரையில் - குறைவான நாளாகி விட்டது. அதனைப் புலப்படுத்தியதுதான் அந்த வீட்டு நிலைமை.

கணவன் மகேசன், மகன் சுதாகரன், மகள் வசந்தி ஆகியோரைக் கொண்டது மனோகரியின் குடும்பம்.

அன்று அதிகாலையிலேயே எழுந்து பொங்கலுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத்தொடங்கினாள். சூரியன் உதிக்க முன்பே பொங்கி முடித்து விடுவதும், ஆதவன் அடிவானத்தில் அடியெடுத்துவைக்கும் வேளையில் படைத்து முடிப்பதும் அவர்களுடைய வழக்கம்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த நியதியிலிருந்து தவறியது கிடையாது. ஆனால் இந்த ஆண்டு அதிலிருந் நழுவிவிட்டது. நழுவவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

அதிகாலை ஐந்துமணியிருக்கும். பானையில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது. மனோகரி அடுப்பிற்குள் விறகுகளை வைத்துத் தணியாதபடி எரித்துக் கொண்டிருந்தாள்.

நீராடி, சுத்தமான வேட்டியை அரையில் கட்டியபடி அருகிலே காத்திருந்தார் மகேசன். இன்னும் சிறிது நேரத்தில் பானை பொங்கி வழியப் போகின்றது. உடனே அரிசியைப் போடுவதற்கு தயாரான நிலையில் அவர்.

சுதாகரன் முற்றத்தைச் சுற்றி மாவிலை, தோரணம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தான்.

வசந்தி ஒருபக்கத்தில் அமர்ந்திருந்து துருவலையில் தேங்காயைத் துருவிக்கொண்டிருந்தாள்.

அப்போதுதான் அந்த எதிர்பாராத நிகழ்வு நடந்தது.

வீதியில் நாய்கள் பலமாகக் குரைக்கும் சப்தம் கேட்டது. சிறிது நேரத்தில் வீட்டின் பின்பக்கத்து வேலியினூடாகச் சில சீருடையினர் உள்ளே புகுந்தனர்.

அதிர்ச்சியுடன் எல்லோரும்எழுந்து நின்றனர்.

"எல்ரிரி இருக்கா?" சீருடையில் வந்த ஒருவர் கேட்டார்.

"இல்லை சேர்" ப்யபக்தியுடன் பதிலளித்தார் மகேசன்.

முன்னால் நின்ற ஒருவர் ஏதோ கூற, ஏனையோர் வீட்டினுள் புகுந்து அறைகளைச் சோதனையிட்டனர். பின்பு அவரிடம் ஏதோ கூறினர்.

முன்னால் தலைமை வகித்துக் கொண்டு நின்றவர் முற்றத்தில் நின்ற குடும்பத்தினர் அனைவரையும் உற்று உற்று நோக்கினார்.

"இவர்?"

சுதாகரனை நோக்கி அவருடைய கைகள் சுட்டிக்காட்ட, மகேசனை நோக்கி வினா பிறந்தது.

"என்னுடைய மகன் படிக்கிறார்" என்றார் மகேசன்.

"எங்கே?"

"மகாஜனக் கல்லூரியில்...."

மேலும் ஏதோ விவரம் தேவைப் படுபவர் போல நெற்றியைச் சுருக்கியபடி நோக்கினார் அதிகாரி. அதனைப் புரிந்துகொண்டவர் போலப் பதிலளித்தார் மகேசன்.

"பன்னிரண்டாம் ஆண்டு....."

"அப்படின்னா அட்வான்ஸ் லெவல்?"

"ஆமாம், பெஸ்ட் இயர்"

"நீங்க என்ன செய்யிறீங்க?" -

"நான் பீப்பிள்ஸ் பாங்கில் மனேஜர்....."

சிறிது நேரம் ஏதோ சிந்தித்தபின், சுதாகரனைத் தாம் விசாரணை செய்ய வேண்டும் எனவும் தம்முடன் அனுப்பும்படியும் பணித்தார்.

"அவருக்கு எல்ரிரியோடை ஒரு தொடர்பும் இல்லை சேர்...." என இழுத்தார் மகேசன்.

"அது நாங்க விசாரிச்சு முடிக்க வேணும்." என்றார்.

"ஏய் வா...." என்றார் சுதாகரனைப் பார்த்து.

"சேர்ட்டைப்போடு தம்பி" என்றார் மகேசன்.

"சேர்ட்டுப்போட நேரமில்லே.... உடனே வா..."

வேறு வழியின்றி பயத்துடன் சுதாகரன் புறப்பட்டான்.

"நானும் வருகிறேன்" என்றபடியே அரையில் சுட்டிய வேட்டியுடன் மகேசனும் பின்தொடர்ந்தார்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் அவர்கள் மறையும் வரையில், திகைத்தபடி, பார்த்துக்கொண்டு, வீட்டுப்படலையில் முன்னால் நின்ற மனோகரியும் வசந்தியும், திரும்பி வந்து ஒவவொரு பக்கத்தில் அமர்ந்தனர். மனம் எதனையும் செய்ய உந்தவில்லை.

அடுப்பு தொடர்ந்து எரிக்கப்படாததனால் அணைந்தது. எண்ணெய் முடிந்ததால் குத்துவிளக்கு தானாகவே அணைந்து விட்டது.

நேரம் செல்லச் செல்ல அக்கம் பக்கங்களிலிருந்து வேறும் இளைஞர்கள் பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட தகவல் வெளியாகியது.

சுதாகரன் மட்டும் அழைத்துச் செல்லப்படவில்லை என்ற செய்தி ஓரளவு ஆறுதலை அவர்களுக்கு அளிப்பதாக இருந்தது.

-பழையூர் சுந்தரம்பிள்ளை-

சூரியன் உச்சிவானைத் தொட்டது. அது நேரம் நண்பகலாகி விட்டதை உணர்த்தியது.

இடையிடையே வீட்டுக்கும் படலைக்குமாக நடைபோட்டுக் கொண்டிருந்தாள் வசந்தி. இப்போது படலையில் வந்து நின்று வீதியில் எட்டிப் பார்த்தவளின் கண்கள் அகல விரித்தன.

"அம்மா..." உள்ளே திரும்பி பலத்த சப்தத்தில் தாயைக் கூவி அழைத்தாள்.

"என்ன வசந்தி?" அலுப்புடன் வினாத் தொடுத்தாள் மனோகரி.

"இஞ்சை வாங்கோம்மா.... அருகி ணம் போல இருக்கு"

அவசரமாக எழுந்து ஓடி வந்தாள். கண்ணுக்கு எட்டிய தூரத்தில் சிலர் நடந்து வருவது தெரிந்தது.

"அண்ணையும் வாறானே? வடிவாய்ப்பார்..."

"ஓமம்மா. அண்ணையும் வாறார்."

இந்தப் பதில் மனோகரியின் நெஞ்சில் பால் வார்த்தது போல இருந்தது. அவளது கால்கள் அங்கிருந்து அசைய மறுத்தன. அவர்கள் வரும் வரை அங்கேயே இருவரும் காத்து நின்றனர்.

அவர்கள் வந்ததும் எல்லோருமாக உள்ளே நுழைந்தனர்.

"அடிச்சவங்களே சுதா?" என அவசரமாக வினாவினாள். அவளது தாய் மனம் பதைபதைத்தது. நடந்ததை அறிய விளைந்தது.

"அப்படி ஒண்டும் நடக்கேல்லை." தந்தை முந்திக்கொண்டு பதிலளித்தார். அவர் மேலும் தொடர்ந்தார்.

"இவ்வளவு நேரமும் முகாமிலை இருத்தி வைச்சிருந்தவை. இப்ப கொஞ்சம் முந்தித்தான் தலையாட்டிக்கு முன்னாலை நிறுத்தினவை. அது தலையாட்டாததாலை சுதாகரனை விட்டிட்டினம்!!

"அவங்களுக்கு போயும் போயும் இண்டைக்கு வருடப்பிறப்பு நாள்தான் கிடைச்சுது போல இருக்கு. சுத்தி வளைக்கிறதுக்கு....." என்று ஆரம்பித்த மனோகரியை இடைமறித்தார் மகேசன்.

"இராத்திரி உந்தப்பக்கம் ஒரு கிறனைட் எறியப்பட்டதாம். அதுதான் இந்தச் சுற்றிவளைப்பு எண்டு கதைக்கினம்."

"இராத்திரி நடந்ததுக்கு இந்த விடியப்பற நேரத்திலேயே விசாரணை நடத்துகிறது?" என அலுத்துக்கொண்டாள் மனோகரி.

"எறிஞ்சவன் இவ்வளவு நேரமும் இந்தப் பக்கம் நிற்கப்போறானே? உவையளின்ரை வேலையல்லாம் அப்படித்தான். நடந்தது நடந்து முடிஞ்சு போய்ச்சுது. இனி அதைப் பற்றி ஆராய்யிறதாலை என்ன இலாபம்? ஏதோ இந்தளவில் நிம்மதி எண்டிருக்க வேண்டியதுதான்."

"பொங்கலைக்கூட சுதந்திரமான ஒரு நேரத்துக்குப் பொங்க முடியேல்லை என்பது எவ்வளவு வேதனையாயிருக்கு"

"சுதந்திரம் எண்டது பெயரளவிலைதான். ஆனால் நிதர்சனம் இப்படித்தான். அவற்றைப்பற்றி நாள்முழுக்க அலசலாம். நேரம் பன்னிரண்டுக்கு மேலே போல இருக்குது. இனியாவது பொங்கி முடிப்பம்." என முடித்தார் மகேசன்.

அடுப்பு மீண்டும் எரியத் தொடங்கியது. காலைமுதல் இயங்காது நிறுத்தவைத்திருந்த வானொலியைத் திருகினாள் வசந்தி."சந்தேகத்தோடு... அது சந்தோஷக்கேடு......." என்ற பாடல் அதில் மிதந்து வந்தது. *

# ஒட்டியுள்ள உறவு

முற்றத்து வேப்பமரத்தில் இருந்த கடைசி வேப்பமிலையும் சுழன்று வீசிய காற்றுக்கு கீழே கொட்டிவிட்டது. வேப்பமரம் தனிமரமாகக் கம்பீரமாக நின்றது. தனிமரமாக நிற்கின்ற இந்த வேப்பமரத்தைப் பார்க்கும்போது எனக்கு வேதனையாக இருந்தது. என்னைப்போல் இதுவும் தனித்துவிட்டது என்ற ஏக்கத்துடன் அதனை அண்ணாந்து பார்த்தேன்.

எங்கள் நாற்சார் வீட்டின் நடு முற்றத்தில்தான் இந்த வேப்பமரம் இருக்கின்றது. எங்கள் அம்மம்மா காலந் தொடக்கம் நிற்கும் இந்த மரம் எங்கள் மூன்று தலைமுறையினரையும் அவர்களின் நன்மை, தீமைகளையும் கண்டுவிட்டது. எங்கள் அப்பாவும் இதன்கீழ் இருந்துதான் எங்களுக்கு நீதிக்கதைகளும் தத்துவக்கதைகளும் சொல்லுவார். நானும், அக்காவும், அண்ணாமாரும், தங்கையும் இதைச்சுற்றி ஓடிப்பிடித்து விளையாடுவோம்.

சித்தியும், மாமாமாரும் எங்கள் வீட்டைச் சுற்றி இருந்ததால் மாலை என்றால் ஒரே குதூகலந்தான். எல்லோரும் இந்த வேப்பமரத்தின் கீழ் திண்ணையில் இருந்து எங்களோடு கதைப்பார்கள்.

அப்பா அடிக்கடி சொல்லுவார் - 'உறவுக்கழகு சூழ இருத்தல்' என்று. மற்றவர்களைப்போல் சீதனத்தை எதிர்பார்க்காமல் அப்பா தன்னுடைய பிள்ளைகளுக்கு எங்கள் ஊரிலேயே வீட்டிற்குக் கிட்டத்தான் சம்பந்தம் பேசி முடித்தார். அப்பொழுது எங்களுக்கு ஏன் என்று விளங்கவில்லை. ஆனால் கேட்டால். "எட்டப்போனால் எட்டிவிடும்: கிட்டப்போனால் கிட்டிவிடும்" என்று அவர் சொல்வார். நாங்கள் ஒன்றுமே புரியாமல் விழிப்போம். இப்பொழுதுதான் எல்லாமே புரிகின்றது.

அப்பாவும்போய் பதினாறு வருடங்கள் கழிந்துவிட்டன. அப்பாவைத் தொடர்ந்து அம்மாவும் ஒருவருடத்திற்குள் கண்ணை மூடிவிட்டா. இவர்களைத் தொடர்ந்து மூன்று அண்ணன்மாரும், அக்காவும், தங்கையும் வெளிநாடு போய்விட்டார்கள். அவர்கள் மட்டுமல்ல மாமாமார், சித்தி, மச்சாள்மார் என்று இருந்த இரத்த உறவுகளும் ஊரை விட்டுச் சென்றுவிட்டன. எல்லோருக்கும் நாட்டு நிலைமை ஒரு நல்ல சாட்டாக மாறி விட்டது.



நானும் மைத்துனியும் மட்டும் எங்கள் பரம்பரையின் எச்சமாகஇங்கே காலூன்றி நிற்கின்றோம். இடப்பெயர்வினைச் சாட்டாகக் கொண்டு மைத்துனியும் குடும்பத்துடன் கொழும்புக்குப் போக நான் மட்டும் குடும்பத்தின் எச்சத்தின் எச்சமாக மிஞ்சி இருக்கின்றேன்.

உறவுகள் வெளியூரில் இருந்தாலும் தொடக்கத்தில் அடிக்கடி கடிதங்கள் தொடர்ந்தன. ஆனால் அதுவும் காலப்போக்கில் தேய்பிறையாகி, இப்போது அமாவாசையாகிவிட்டது. என்னவோ வருடத்தில் ஓரிரு கடிதம் சம்பிராதாயபூர்வமாக வரும். அவ்வளவு தான். இப்போதுதான் அப்பா சொன்ன "எட்டப்போனால் எட்டி விடும்', 'கிட்டப்போனால் கிட்டிவிடும்."என்பதன் அர்த்தமே விளங்கியது. பழகப் பழகத்தான் உறவும் பலக்கும்.

நான் வேப்பமரத்தை அண்ணாந்து மேலிருந்து கீழாகப் பார்த்தேன். அதன் பெரிய வேர் கண்ணை உறுத்தியது. இந்த வேரில் இருந்துதான் சின்னண்ணா குறும்புக் கதைகள் சொல்லுவார். மெல்ல மெல்ல அவர் அமர்ந்திருக்கும் இடத்தை தடிவிப்பார்த்தேன். என் உடல் புல்லரித்தது. இந்த இடத்தில்தான் ஆசை அண்ணா, குறுக்கும் நெடுக்குமாக நடந்து நடந்து [illegible] திறந்து விடுவார். சிலசமயம் கற்பனையிலும் திளைப்பார். அவர் ஒவ்வொரு விடயத்தையும் விவரிக்கும் பொழுது அகலவிரியும் அவரது கண்களையும் மனக்கண்ணில் பார்க்கின்றேன். நெஞ்சின் ஒரு பக்கத்தில் முள்ளாகக் குத்தியது. அதோ திண்ணையில் இருக்கும் அந்தச் சாய்வு நாற்காலியில் அப்பா என்ன கம்பீரமாகப் படுத்திருப்பார்! அப்பாவும் அம்மாவும் புண்ணியம் செய்தவர்கள். நேரகாலத்துடனேயே போய்விட்டார்கள். இப்ப நான்தான் இங்கே... தனிமரமாக நிற்கின்றேன்.

முன் முற்றத்துக்குப்போய் இடது பக்கம் திரும்பி சித்தியின் வீட்டைப் பார்த்தேன். முன்பெல்லாம் எவ்வளவு சந்தோசம். சித்தியின் வீட்டு முற்றத்தில் உள்ள சிமெந்து பெஞ்சில் இருந்து, சித்தியின் பிள்ளைகளுடன் நேரம் போவது தெரியாமல் அரட்டை அடிப்போம். ஆனால் இப்போது..... என்னை அறியாமல் என்னுள் இருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. சித்தியுமில்லை. பிள்ளைகளுமில்லை. சித்தியின் வீட்டு முற்றத்தை நிமிர்ந்து பார்த்தேன். அங்கு நின்றவர்கள் என்னை அந்நியமாக பார்த்தபார்வை..... நெஞ்சில் 'சுருக்' கென்று தைத்தது. திரும்பி வலப் பக்கம் மாமாவீட்டு முற்றத்தைப் பார்த்தேன். அங்கு புதிதாக குடிவந்திருப்போர் முறைத்துப் பார்த்த பார்வையில் 'எல்லோரும் போய்விட்டனர். நீ மட்டும் ஏன்? போய்விடு' என்று சொல்லாமல் சொல்லுவது போலிருந்தது. நத்தை ஓட்டுக்குள் தன்முழு உடலை இழுப்பதுபோல், என் உணர்ச்சிகளை உள்ளடக்கிக் கூனிக் குறுகிக்கொண்டு ஓடிப்போய் மறுபடியும் வேப்பமரத்தின் கீழ் நின்றேன். பொத்துக் கொண்டு வந்த அழுகையையும் அடக்கிக்கொண்டு பின்பக்கம் பார்த்தேன். வள்ளி என்னைப் பார்த்து தலையைத் தலையை ஆட்டி தூரிகா பாடசாலையால் வரும் நேரம் இது என்பதனை கோடிட்டுக் காட்டியது.

தனிமையின் தாக்கத்தினால் தூரிகாவும், 'நாங்கள் இங்கே இருப்பதில் அர்த்தமில்லை' என்று அடிக்கடி வாதாடுவாள். அவள் ஆண்டு எட்டுப் படித்தாலும் அடிக்கடி தத்துவங்கள் கதைப்பாள். " அம்மா! எனக்கு தங்கச்சி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பெரியம்மா, சித்தியின் பிள்ளைகள் கூட இங்கில்லை" என்று அடிக்கடி புலம்புவாள்.

ஒரு நாள் அவள், "அம்மா! நாங்கள் தெண்டிச்சு கனடா போவம். அங்கை எனது ஒன்றவிட்ட சகோதரிமார் எல்லோரும் இருக்கினம். இங்கை யாரம்மா இருக்கினம்?" என்று அழத் தொடங்கி விட்டாள். நான் என்ன சொல்லியும் அவள் சமாதானமடையவில்லை.

"அம்மா என்னைப்பற்றி யோசியுங்கோ, எனக்காகவெண்டாலும் கனடா போக வேண்டும்" என்று அடம் பிடித்தாள்

"தூரி! உன்ர அப்பாவைப்பற்றி உனக்குத் தெரியாது. மேற்படிப்புக்காக வெளிநாடு போன போது அவருக்குக் கிடைத்த நல்ல பதவியைக் கூட உதறித்தள்ளிப் போட்டு வந்தவர். அப்படிப்பட்ட அப்பா தனது இறுதி மூச்சைக்கூட இந்தமண்ணில்தான் விடுவார்."

"என்னம்மா?"

"ஓம் தூரி. அப்பா மட்டுமல்ல நானும் கூடத்தான். இந்தக் கட்டை இந்த மண்ணிலதான் வேகும்." அவள் தனது கண்களை அகலவிரித்து என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"பிள்ளை உனக்கொன்று சொல்லுறன் கேள்!"

சிவசக்தி தியாகராசா

"என்னம்மா?"

"எட்டிப்போன இந்த உறவுகளை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்காமல், நீயே உனக்கொரு உறவைத் தேடிக்கொள். உடன்பிறந்தால்தான் சகோதரமா? நீயே பள்ளிக்கூடத்தில உன்னோட நல்லாப் பழகிற பிள்ளை ஒன்றை உடன்பிறவாச் சகோதரமாக நினைத்துப் பழகு" என்று அந்த நேரத்திற்கு ஒருவாறு சமாதானம் சொன்னேன்.

எங்கள் காலமெல்லாம் போய் விட்டது. எங்கள் பிள்ளைகளுக்கு இப்படி ஒரு நிலையா? எனது மனம் பாரமாக அழுத்தியது. திடீரென்று ஒருநாள் தூரி குதுகலத்துடன் "அம்மா! அம்மா! உங்களுக்கு ஒரு குட் நியூஸ். என்னென்று சொல்லுங்கோ பார்ப்பம்?" என்றாள்.

"எனக்குத்தெரியவில்லை. நீயே

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காசுக்குத்தான் காதலடி!

பூவுக்குள் தேன்தேடி வருவாரடி
தாங்கள் தப்பில்லா உத்தமரே என்பாரடி
இரவு பகல் சுற்றிச் சுற்றிநின்றாரடி - இருதயம்
தனை வந்து கொய்வாரெடி

ஆசைக் கதையெல்லாம் சொல்வாரடி
மீசைத் திரை கொண்ட வீரரடி
தாமே தமக்கென்று இருப்பாரடி - வாழும்
காலம் எலாம் சமம் என்றுரைப்பாரடி

பத்துத் திங்கள் பறந்து போயினதென்றால்
பாசத் திரை கொஞ்சம் அவிழ்ப்பாரடி
அம்மாவின் பிள்ளை என்றுரைப்பாரடி
சும்மாவரலாமோ? எனச் சொல்வாரடி

நீயின்றி நானில்லை என்றுரைத்தால்
தாயின்றி வாழுதல் பிழை என்பாரடி
லட்சங்கள் சிலதானே வையென்பாரடி - இல்லை
லட்சாதிபதி மகளைக் கைபிடிப்பாராமடி

படிப்புக்கு பல லட்சங்கள் பகர்வாராமடி
உழைப்புக்கு சில லட்சம் உரைப்பாரடி
வீட்டுக்கு பல லட்சம் விலையாமடி
தாலிக்கும் பவுன் கொஞ்சம் தேவையாமடி

காதல் விலைதானோ என்றாளடி பெண்
கன்னி மனம் கலங்கலாமோ? அழுதாளடி
காசு கொண்டு வருவதென்றால் வரட்டாமடி
காதல்தனை மறுப்பதென்றால் விடட்டாமடி

சீதனமே இல்லை யென்றால் சிந்தியபடி
சீயென்று அவளை விட்டுப் போனாரடி
சிறப்பாக தான் வாழ்ந்தாள் சொன்னபடி
சோதனைகள் பெண் ஏற்றக் கூடுமேஎடி?

காசுக்குத்தான் காதலடி காதலுக்கல்ல
நோட்டுக்குத்தான் நேசமடி உண்மைக்கல்ல
காதலின்றி வாழ்ந்தாலும் காசுதானடி
கடவுள் என்று தலையில் வைத்துப் போற்றுவாரடி!

- சி சிவாணி

# பரீட்சைக் கனவு

வண்டு வந்து துளைக்காத
வானத்து மல்லிகையோ!
தொண்டு புரிகின்ற - தேவ
மண்டலத்துக் காரிகையோ!!
பண்டு தவப்பயனால்
வந்துதித்த முல்லைமொட்டோ!!
கண்டு எண்ணி யெண்ணி
ஏங்கிநின்ற வேளையதில்,
அஞ்சன விழிகளினால்
அச்சத்தை அகற்றிவிட்டாள்
மெல்லனவே நடந்து வந்து
மேனி தடவி விட்டாள்
கொல்லெனவே சிரித்து - எந்தன்
கவலையெல்லாம் போக்கி நின்றாள்
கல்லான என் னிதயம் கரைய ஒரு
கலவை தந்தாள்

ரக்கத்தில் எந்தன் உள்ளம்
ஏகாந்தம் கண்டு நிற்க
மயக்கத்தில் மன மெல்லாம்
மந்திரங்கள் சேர்ந்தொலிக்க
பக்கத்தில் வந்த அன்னை
பரிதவிப்பாய் பாவி யென்றால்
தயக்கத்தோ டெழுந்துநின்று
தடுக்காதே தமிழ்படித்தேன்
அடுத்த கிழமையென்தன்
அரையிறுதிப் பரீட்சையென்றேன்.

படிப்பிதுவோ பகற்கனவோ
பத்தாது (இ)ரண்டு உதை
தடிபிடித்தால் தெரியுமெந்தன்
பொல்லாத குணமென்றாள்
வானத்து மல்லிகையும்
வையகத்தே போய் மறைந்தாள் - தேவ
மண்டலத்துக் காரிகையோ
தேசம் விட்டோடிவிட்டாள்
அஞ்சன விழிகளுளாள்
பஞ்செனவே பறந்து செல்ல
புத்தகத்துப் பக்கமெல்லாம்
புள்ளிகளாய்த் தெரியுதையோ!

- உமா செல்லத்துரை




# பாவலர்யாம் போற்றுவோமோ பகர்ந்து

பிரமாதி யெனும்பெயரிற் பிறந்திடும் புத்தாண்டைப்
பிரமாதப் படுத்துகின்றோம் பெரிதாக பிரமனாதி
தேவர்களை வேண்டியும் தீரவில்லைத் தமிழன்துயர்
பாவலர்யாம் போற்றுவோமா பகர்ந்து!

நித்திய கண்டமே நிதர்சனமாய்த் தோற்றுகையில்
புத்தாண்டில் என்ன காண்போம் புதிதாக ~ நித்தமும்
காணாமற் போவோரின் கணக்குத்தான் கூடிடுது
வானாளில் இதுதான்காண் வழக்கு!

செம்மணிப் புதைகுழியில் சென்றடைந்தோர் கணக்கை
எம்மனிதர் அறிந்துள்ளார் எடுத்தியம்ப ~ நம்மணியார்
துரையப்பா அரங்கினுள்ளும் உண்டென்றார் எலும்புக்கூடு
உரையப்பா என்றுமேலும் உணர்த்தி!

பெற்றவரை யிழந்தோர் பிள்ளைகளைப் பறிகொடுத்தோர்
உற்றவன்தன் நிலையறியா ஒண்டொடிகள் ~ மற்றவர்கள்
மனங்கலங்கி நிலைகுலைந்து மலைத்து நிற்கும் வேளையிதில்
இனங்கலந்து கொள்ளுமோ விருந்தில்!

விருத்தியின்றிக் கலங்கிநிற்க விவசாய மன்னர்கள்
வருந்திமிக வாடுகிறார் வலைஞர்கள் ~ திருந்திய
கைத்தொழில்க ளெல்லாமிங்கு கைநட்ட மாகையிலே
எத்தொழிலால் மேன்மையுண்டு இயம்ப.

நாதியற்றோர் தமிழரென நாற்றிசையு மின்றறியும்
நீதியற்றோர் செயலிங்கு நீள்கிறது சோதியற்ற
வாழ்க்கைநிலை மாறும்வரை வளம்தராது புத்தாண்டெம்
வீழ்க்கைநிலை வேறவேண்டீர் விரைந்து.

(ஒண்டொடிகள் - பெண்கள்)
(வலைஞர்கள் - கடற்றொழிலாளர்)
(வீழ்க்கை - விருப்பம்)
(உற்றவன் - கணவன்)

- பழையூர் சுந்தரம்பிள்ளை

# உயிர்கொல்லிகள் ஒழியும் அற வழிகாண்!

| | | | |
|---|---|---|---|
| ஆணுக்கொரு | பெண்ணாய் ஒரு | பெண்ணுக்கொரு | ஆணாய் |
| பேணுற்றிடில் | வாழ்வுநலம் | பெற்றுய்த்திடும் | உலகு |
| வீணுக்கலை | மனிதர்பிற | விருப்பத்திலே | காமத் |
| தீனுற்றிடில் | தொலைவார்உயிர் | கொல்லிக்கிரை | யாவார்! |
| | | | |
| "கற்பென்பது | பொதுவாய்இரு | பாலர்க்கது | உரிதாம்" |
| நிற்கின்றது | கவிதைஅதை | நிலைநாட்டுதல் | பெரிதாம் |
| இற்பண்பது | இதுவேஇதை | இழிவாக்குதல் | பழிதான் |
| உற்றுண்டிடும் | கிருமி,உயிர் | உடல்விட்டிடக் | குழிதான்! |
| | | | |
| நெறிவாழ்வினில் | நில்லாதுறு | நீசத்திலே | செல்லும் |
| பொறிவாழ்வினில் | புகுவோர்தொகை | பூமிக்கிடர் | செய்யும் |
| வெறிவாழ்வுறக் | குமுறும் உடல் | வேண்டாவினை | தேடும் |
| செறிவாக்கிடும் | நோய்கள்அவை | தெளிவாக்கியே | சூடும்! |
| | | | |
| அந்தப்பெணை | இந்தப்பெணை | அடைந்தின்புறத் | திரிந்து |
| பந்தப்படும் | உறவுபல | தரப்பட்டிடச் | சுரந்து |
| நொந்துற்றிடம் | உயிர்கொல்லியும் | நுழைந்துட்செலச் | சாவார் |
| எந்தப்பெரும் | அறிவாளியும் | இதல் உற்றிடில் | மீளார்! |
| | | | |
| தாகம்வரப் | பருகும்இடம் | தடவும்மனக் | குரங்கு |
| மோகம்வரக் | களிநீரையும் | முட்டாமலே | மொள்ளு |
| போகம் எனில் | பொசிப்பென்றுமே | புழுகாய்அதில் | புரளும்! |
| தேகம்அதில் | அகப்பட்டிட | நோய்வாய்களில் | உருளும்! |
| | | | |
| இந்திரன்கண் | ஆயிரம் பெற | இடர்தந்ததே | காமம் |
| சந்திரன்தேய் | பிறையயாய்த்தடு | மாற்றியதே | காமம் |
| இந்த மண்ணில் | எண்ணற்றோர்க் | கிடர்தருவதே | காமம் |
| வந்தவினையும் | வருவினைகளும் | வராதுகாப்பதே | சேமம்! |
| | | | |
| கிணற்றுக்குள்ளே | பலகுப்பையும் | சேர்ந்தாலது | நாறும் |
| தினத்துக்கொரு | தீன் உண்பவர் | செயலாலுடல் | சீழும் |
| தனக்குற்றிடும் | தீமைக்கவர் | தானேபொறுப் | பாளி |
| மனக்குற்றமும் | மறுக்குற்றமும் | அறவேஅவர் | வாழி! |
| | | | |
| காமம்ஒரு | நோய்என்பதை | உணர்ந்தேஅதன் | மருந்தை |
| ஏமம்கெட | இல்வாழ்வினில் | இணைந்தோர்பெரு | விருந்தாய் |
| தாமின்புறத் | தந்தாற்பிற | விருந்தைஅவர் | விரும்பார் |
| ஓம்என்றிடில் | உயிர்கொல்லிகள் | ஒழியும்அற | வழிகாண்! |
| | | | |
| துறந்தார்களும் | மறந்தார்களும் | தொலைந்தாரிதன் | சொகுசால் |
| இறந்தார்களும் | இருப்பார்களும் | இடரென்றிதைச் | சொன்னார் |
| பரந்தாகுது | நோயுமிதைப் | பார்த்தாயினும் | திருந்தார். |
| வரம்தாஉயர் | இறைவாஇதன் | வலிகுன்றிடச் | செய்வாய்! |

- நயினைக் கவிஞர் நா.க. சண்முகநாதபிள்ளை

# வடக்கிருந்த நாட்கள்

சோதனை நாட்கள் - அவை
வேதனை நாட்கள் - நாங்கள்
புலம்பெயர்ந்த நாட்கள்
எங்கள் உள்ளம் நொந்த நாட்கள்.

எங்கள் உயிர்போன நாட்கள் - அவை
நாங்கள் சிறைப்பட்ட நாட்கள்
எம் வாழ்வில் கறைபட்ட நாட்கள் - அவை
நாங்கள் குறைகேட்ட நாட்கள்.

நாடோடி போல நாமிருந்த நாட்கள் - அவை
மாடி மனையெல்லாம் நாமிழந்த நாட்கள்
கூடி நின்ற சொந்தங்கள் தொலைந்துபோன - நாட்கள்
பாடிக்களித்த சுகம் கலைந்து போன நாட்கள்.

எம்வாழ்வில் ஒளியிழந்த நாட்கள் -
நாம் அகதி என்ற பெயர் சுமந்த நாட்கள்
போகும் வழியிழந்த நாட்கள் - அவை
எம் வாழ்வில் களையிழந்த நாட்கள்.

உடைந்துபோன மனதுடன் நம் உயிர்சுமந்த நாட்கள்
நடைப்பிணங்களாகிய நாம் நலிந்து நின்ற நாட்கள்
விடையில்லா வினாக்களாய் நாம் தவித்திருந்த நாட்கள்
அவை சாக்காட்டின வாசலில் நாம் - வடக்கிருந்த நாட்கள்.

-இராகவன்-

# வருக புத்தாண்டே

உரிமை இழந்தவர்கள் மகிழ்ந்திட
வருக! வருக! புத்தாண்டே!
வறுமை நிறைந்தோர் வாழ்வில் உயர்ந்திட
வருக! வருக! புத்தாண்டே!

வீதிகள், தடைகள் அகன்றிட
வருக! வருக! புத்தாண்டே!
விதிகள், மரபுகள் அழிந்திட
வருக! வருக! புத்தாண்டே!

சமாதானம் மண்ணில் முளைத்திட
வருக! வருக! புத்தாண்டே!
சந்தோசம் மனதில் நிலைத்திட
வருக! வருக! புத்தாண்டே!

வசந்தம் இனங்களை வாழ்த்திட
வருக! வருக! புத்தாண்டே!
வடக்கும் கிழக்கும் விழித்திட
வருக! வருக! புத்தாண்டே!

உற்பத்தியில் ஊழல்கள் ஒழிந்திட
வருக! வருக! புத்தாண்டே!
கல்வியில் முட்கள் ஒடிந்திட
வருக! வருக! புத்தாண்டே!

உழைக்கும் கரங்கள் உயர்ந்திட
வருக! வருக! புத்தாண்டே!
முளைக்கும் கணனி துளிர்த்திட
வருக! வருக! புத்தாண்டே!

-நல்லை அமிழ்தன்-

# புத்தாண்டில் மூடம் புதைப்பீர்!

"புத்தாண்டே வருக புதுவாழ்வு தருக"வென
எத்தனை ஆண்டுகளாய் இரங்கி மனம் வேண்டினோம்.
வந்தன வருடம்பல: தந்தனவா புதுவாழ்வு?
மந்திரத்தால் வந்திடுமா புனர்வாழ்வு?
எந்திரமும் இலத்திரனும் எத்துறையும் கணனிமயம்
வந்துமென்ன?

முந்தையர் மொழிந்தபல மூடங்களும்,
பண்டைமுறை மானியத்தின் சேடங்களும்,
நெஞ்சைவிட்டு நீங்கும்வரை
வந்திடுமா புதுவாழ்வு?

பஞ்சாங்க ஆரூட சக்கரம், பல்லிசொற்பலன்,
ஆதாயவியய அட்டவணை, லக்கினத்தின் இடப் பெயர்வு
யாவும் தருமென்று நாமிருந்தால்
பூமி நகுவாள்: அன்றி புதுவாழ்வு என்று வரும்?

பருவமழை அருகுவதும், பயிர் கருகி எரிவதுவும்
வருணனும் பிரமனும் வஞ்சித்த செயலன்று
இளைய தலைமுறையும் எண்ணும் நிலையிருக்க
எவ்வாறு நாமுயர்வோம்?

ஆளும் பொருத்தம், அறிவும் பொருத்தம், பிறந்த
ஆண்டும் பொருத்தம் அன்னைதந்தை உள்ளங்கள்
யாவும் பொருத்தம்: ஆனாலும்
ஆரூடம் பொருந்தாது அகத்துள் அடங்கும்
அபலைகள் நிலைமாற,
இளைய தலைமுறையே! இதற்கொரு விதி செய்வீர்!

ஓடும் உதிரமும், ஒழுகிடும் கண்ணீரும்
பாடுபடும் பாட்டாளி வேர்வையும்
சாதியினைச் சாற்றாதெனச் சான்றோரும்,
ஆய்வுகளும் கூறிடினும் அசைந்தோமா மரபைவிட்டு.
அப்பனும், அப்பனுக்கு அப்பனும், அவனுக்கு அப்பனும்
செப்பியதே சீரியவை: ஏனையவை சீரழிவு
என்னும் கருத்து இதயத்தின் நீங்கும்வரை
எமக்கேது புதுவாழ்வு?

விண்வெளி அளந்தார், நிலவு மேனியினை ஆய்ந்தார்
எங்கும் குறுக இணையத்தால் அடக்கிவிட்டார்.
இருந்துமென்ன? - எம்மவர்கள்
அன்றிருந்த மூடங்களை அணைப்பது விடுக்கவில்லை
இன்றைய தலைமுறையே இதற்கொரு வழிசெய்வீர்!
புத்தாண்டில் மூடம் புதைப்பீர்!

-புத்தூர்.வே.இளையகுட்டி-

# வாழிய புத்தாண்டு!

சித்திரை மாதம்! தமிழ் மாதம்!
செந்தமிழ் ஆண்டின் முதல் மாதம்
முத்தமிழ் தாயின் புத்தாண்டு!
முழங்கிடும் "பிரமாதி" எனும் ஆண்டு!

பூங்குயில் கூவும் இசைபாடும்!
பொதிகையின் தென்றல் அசைபோடும்
ஓங்கிடும் கோடை வெயில் கூடும்!
ஊட்டியைக் காண மனம் நாடும்!

படிப்புக்கும் பள்ளிக்கும் விடுமுறைதான்!
பாலர்கள் யாவர்க்கும் குதூகலம்தான்!
துடிப்புக்கும் மகிழ்ச்சிக்கும் சுதந்திரம்தான்!
துள்ளித்தான் ஆடலாம் தினம் தினம் தான்!

புத்தாண்டின் பேரின்பம் அகத்தினிலே!
புன்னகை தவழ்ந்திடும் முகத்தினிலே!
வாழிய! நம்தமிழ்ப் புத்தாண்டு!
வாழ்த்தியே பாடுவோம் பல்லாண்டு!

- கி. சுவர்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணவறை கட்டும் மகோன்னதப் பறவைகள்!

-குகன்-

பறவை இனங்களில் பெண்களைக் கவருவதற்கு பல வகையான காதலாட்டக் காட்சிகளில் (Courtship Display) ஆண் பறவைகள் ஈடுபடுவது பல இனங்களில் காணப்படுகின்றது.

அழகிய இறகுளைப் பயன்படுத்தி ஆடுவதும் குரலெடுத்துப் பாடுவதும் பல பறவை இனங்களில் சிறப்புத் தன்மை.

மயிலுக்கு ஆடவும், குயிலுக்குப் பாடவும் யார் கற்றுக் கொடுத்தார்கள்? யார் நட்டுவாங்கம் சொல்லிக் கொடுத்தார்கள்?

ஆயினும் பெண்களைக் கவருவதற்கு 'மணப்பந்தல்' கட்டும் பறவைகள் ஒரேயொரு கூட்டம்தான் உண்டு. இத்தொகுதி "கொடி வீடு/கொடிப் பந்தல் பறவைகள்" (Bower Birds) என அழைக்கப்படுகின்றன்.

இவை உலகில் ஆஸ்திரேலியா, நியுக்கினியாவில் மாத்திரம் அடர்ந்த காடுகளில் காணப்படுகின்றன. இவற்றில் பல சாதிகளும் இனங்களும் உண்டு. ஒரேயொரு கூட்டத்தைத் தவிர ஏனைய கூட்டங்களுக்குரிய ஆண்கள் எல்லாம் ஏதோவொரு வகையில் மணவறைகள் அமைக்கும். உடலளவுகளில் இனங்களுக்கு ஏற்ப மாறுபாடுகள் உண்டு. புலுனிக் குருவியில் இருந்து மணிப் புறாவின் அளவிற்கு உடற்பருமன் மாறுபடும். இனங்களுக்கேற்ப நிறங்களும் மாறுபடும். பிரகாசமான பொன், கறுப்பு, செம்மஞ்சள், பச்சை, நீலம் ஆகிய நிறங்களிலிருந்து மந்தமான கபில நிறங்கள் வரை மாறுபடும். சகல இனங்களுக்கும் பொதுவான மைய இயல்பு, சகல இன ஆண்களும் மணவறைகள் கட்டுவதுதான்.

ஆண்களால் கட்டப்படும் இந்த மணவறைகள் அலாதியான கட்டமைப்புக்களைக் கொண்டவையாகும். மிக அவதானமாகவும் மலர்களாலும் நத்தை போன்ற விலங்குகளின் ஓடுகளாலும், கனிகளாலும் (அழகான சதைப் பழங்களாலும்) இந்த மணவறைகள் அலங்கரிக்கப்படும். அநேகமான இனங்களில் இனக்கலப்பு இந்த மணவறைகளில்தான் (கொடி வீடுகளில்தான்) நிகழும். ஆயினும் மணவறைகளின் முக்கிய பணி ஆண்கள் தமது விநோதமான காதலாடல் நடனங்களில் ஈடுபடுவதற்கு ஏற்ற தளங்களாக அமைவதாகும். இம்மணவறைகளைச் சுற்றியே ஆண்கள் நடனமாடும். இனக் கலப்பு முடிந்ததும் இன விருத்தியில் தன் கடமை முடிந்துவிட்டது என்ற எண்ணத்துடன் ஆண் போய் விடும்.

பின் மரங்களில் கூடு கட்டி, முட்டையிட்டு, அடைகாத்து, குஞ்சு பொரித்து, குஞ்சுக்கு உணவூட்டி, அவற்றை "ஆளாக்கி" விடும் சகல பொறுப்புக்களையும் பெண்களே மேற்கொள்ளும். தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்பது இங்கு எவ்வளவு பொருத்தம்! பொதுவாக அங்கிகளின் இனவிருத்தியில் பெண்களே முக்கிய பங்காற்றுகின்றன என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்



பெரிய கொடி வீட்டுப்பறவை ஆண் காதலாடலில் ஈடுபட்டுள்ளது. பெண்மறு புறத்திலிருந்து நாணத்துடன் அவதானிக்கின்றது.


காட்டு. கொடிவீட்டுப் பறவைகளின் கூடுகள் (அதாவது பெண்களால் கட்டப்படும் கூடுகள்) மிக மெல்லிய சுள்ளிகளாலான, ஆழம் குறைந்த, எளிதில் கலைந்து விடக் கூடிய அமைப்புக்களாகும். ஆனால் மணவறைகளோ (கொடிவீடுகள்) முற்றிலும் மாறுபட்டவை. சில கூடக் குறைய 10 அங்குல நீளத்தையும் 9 அங்குல உயரத்தையும் கொண்டவையாக இருக்கும். சில நிலத்திலிருந்து 6அடிகள் வரை உயர்ந்தவையாக இருக்கும். சுள்ளிகளாலேயே சுவர்கள் அமைக்கப்படும். அனேகமான மணவறைகள் அதிசயிக்கத்தக்க வகையில் காத்திரமானவை. அதனால் சில கலையாமல் முழுமையாக அகற்றப்பட்டு இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளின் நூதன சாலைகளுக்கு அனுப்பக் கூடியதாயிருந்தன.

மணவறைகள் பெரியதாயிருந்தாலென்ன, சிறியவையாக இருந்தாலென்ன அவற்றின் உரிமையாளர்கள் அவற்றை அதி அக்கறையாக பாதுகாக்கும். யாராவது பிற ஆண்கள் ஊடுருவ முயன்றால் அவற்றை ஆக்ரோஷமாகத் தாக்கி துரத்திவிடும். ஆயினும் சில சமயங்களில் சில ஆண்கள் தருணம் பார்த்து ஊடுருவி மணவறையைக் குழப்பிவிடுவதுடன் சிறப்பான அலங்காரப் பொருள்களைக் களவாடிக் கொண்டு போவதுமுண்டு - தங்கள் மணவறைகளை அலங்கரிப்பதற்கு. (மேற்படி நடத்தைகள் மனிதனுக்குள்ள இயல்புகளாயிற்றே. மணவறைப் பறவைகள் எங்கிருந்துதான் கற்றனவோ!) காதலென்றும் கவருதலென்றும் வரும்போது போட்டியும் பொறாமையும் ஏற்படும் போலும்.

வேறுபட்ட மணவறைகளின் வடிவமைப்பு அவற்றை அமைக்கும் பறவைகளின் மாறுபட்ட இறக்கை ஒழுங்கைப் போல் வேறுபடும். ஆயினும் வேறுபட்ட இனங்களுக்குரியதாக சிறப்பியல்புக்கான வடிவமைப்புக்கள் உண்டு. அதனால் மணவறையின் வடிவமைப்பைக் கொண்டு அதற்குரிய இனத்தைக் கண்டறிய முடியும். மணவறைகளின் பொதுவான வடிவமைப்பு பின்வருமாறு அமையும்:- நிலத்தில் அடுக்காக சுள்ளிகள் அல்லது புற்கள் பரப்பப்படும். பின் சமாந்தரமான சுவர்கள் இதே பொருள்களினால் கிடையான படையின் மேல் எழுப்பப்படும். சுள்ளிகள் அல்லது புற்கள் ஒவ்வொன்றாக - நிலைக்குத்தாக - நெருக்கமாக- நாட்டப்பட்டு இடைச் செருகல்களும் ஏற்படுத்தப்பட்டு சுவர்கள் கட்டப்படும். மணவறைகள் இருபக்கமும் திறந்த சாலையாகவோ அல்லது கூடாரமாகவோ இருக்கும். இங்ஙனம் எழுப்பப்பட்ட 'சாலை' (Avenue)யின் தரையும், முற்றமும், பிற்கட்டும், சுவர்களும் பலதரப்பட்ட பொருள்களினால் அலங்கரிக்கப்படும். பொதுவாகப் பயன்படுத்தப்படும் பொருள்கள் வெளிறிய என்புகள், நத்தைகள் போன்ற விலங்குகளின் ஓடுகள், அழகான கனிகள், இலைகள், மலர்கள், கண்ணாடிப் பொருள்கள் மற்றும் சிறிய, நிறமுள்ள பொருள்கள். இவை சிறு குவியல்களாகப் போடப்பட்டிருக்கும். வெற்றுத் துப்பாக்கி ரவைகள், கோதுகள், சிறுவர்களின் மார்பிள் குண்டுகள், பற்தூரிகைகள், சிறுபிளாஸ்ரிக் பொருள்கள் உலோகத் துண்டுகள் மற்றும் இலை போன்ற பொருள்களும் சாதாரணமாகக் காணக்கூடியதாக இருக்கும். அருமையாக வெள்ளி நாணயங்களும் காணப்படுவதுண்டு.

மணவறைப் பறவைகள் எழுந்தமானமாக அந்தப் பொருள்களைச் சேரிப்பதில்லை. அவை அழகான பொருள்களில் குருடான நாட்டமுள்ளவை என்று கொள்ள முடியாது. இனத்துக்கு இனம் குறிப்பிடப்பட்ட நிறங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தற்செயலாக விரும்பத்தகாத நிறம் குவியலில் இடம்பெற்றுவிட்டால் அவை கவனமாக அகற்றப்பட்டுவிடும். குறிப்பிடப்பட்ட இனங்களின் குறிப்பிடப்பட்ட நிறங்களுக்குரிய விருப்பம் பூரணமாக அறிந்து கொள்ளப் படவில்லை. ஆயினும் சில இனங்களின் பெண்களின் உடல் நிறத்துக்கும் கண்ணிறத்துக்கும் ஏற்ப இத்தேர்வு நிகழ்வதாகத் தெரிகின்றது. (தோல் நிறம், கண் நிறத்துக்கேற்ப புடைவைத் தேர்வு போலும்.)

மணவறையின் வகைக்குரிய பயன்பாடு தொடர்பாக பெரிய கொடி வீட்டுப்




பற் சொண்டன் கொடி வீட்டுப்பறவை தனது துப்பரவு செய்யப்பட்ட பிரதேசத்தில்

பறவைகளின் (Greater Bower Birds) ஒருநாள் நடவடிக்கையை அவதானிப்பதன் மூலம் அறிந்த கொள்ள முடியும்.

இப்பறவை வட ஆஸ்திரேலியாவின் பெரும் பகுதியில் காணப்படும். காலை நேரத்தின் முதல் குளிர்ந்த மணித்தியாலயங்களில் ஆண் மணவறைக்கு வரும். சீறும் சத்தங்கள் மூலம் 'மியோவ்' என்று பூனை போலச் சத்தமிட்டும் தன் வருகையை உணர்த்தும். உஷாருடனும், விழித்த கண்ணுடனும் தனது மணவறையை விரிவான சோதனைக்கு உள்ளாக்கும். முதலில் கூடத்தின் சுவர்களை ஆராயும். ஒவ்வொரு தடியையும் அலகினால் மேலிருந்து கீழ்

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

நோக்கி தடவிப் பார்க்கும். ஏதாவது ஒரு தடி சற்றேனும் விலகியிருந்தாலும் அதைச் சீர்செய்யும். பின் என்புகள், ஓடுகளை இடமாற்றி அடுக்கும். இப் பொருள்கள் குவியலில் விழும் பொழுது ஏற்படும் 'கிளிங்' என்ற சத்தத்தை அனுபவிப்பது போல தலையை ஒரு பக்கம் சரித்துப் பார்க்கும். இவ்வேளையில் எங்கிருந்தோ ஒரு பெண் வரும். பெண் ஆணைக் காட்டிலும் சிறியது: சுறுசுறுப்பற்றது: மந்தமான நிறமுடையது. பெண்ணைக் கண்டதும் ஆண் முற்றிலும் மாறிவடும். அதன் உடல் விநோதமான விறைப்புத் தன்மை பெறும்: 'றோபோ' (Robot) போன்ற தோற்றம் பெறும்: உடனடியாக ஓர் என்பை அலகினால் எடுத்து, மணவறையின் ஒருபக்கமாக விறைத்த கால்களுடன் குதிப்பது போலக் குதித்து, தலையை மேலும் கீழுமாகச் சந்தத்திற்குரிய முறையில் ஆட்டும். ஒவ்வொரு அசைவின் அந்தமாக - தொடர்ச்சியான - உரத்த - 'டிக்டிக்' ஒலி எழுப்பும். அப்போது அதைப் பார்க்க ஓர் உயிர்ப் பறவை போல் இல்லாமல் மணிக்கூட்டு உபகரணமுள்ள அசையும் பாவை (Toy) போலிருக்கும். இதே நேரம் பெண் மணவறையில் ஆண் ஆடும் இடத்துக்கு எதிர் கோடியில் அமர்ந்து, கவனியாதது போல் அவதானித்துக் கொண்டிருக்கும். (நம்ம பெண்களைப் போல்) பெண் தன்சிறகுகளை பயத்துடன் அடிக்கும். உடனடியாக ஆண் தன் அலகிலுள்ள எலும்பை வேகமாக எறிந்து விட்டு ஒரு கண்ணாடித் துண்டை வைத்துக் கொண்டு தனது காதலாடல் காட்சிகளைத் தொடரும். இப்போது இடைக்கிடையே வானத்தில் உயரமாகக் குதிக்கும். உடனடியாக அதன் கழுத்தின் பிடரிப் பகுதியில் இறகுகள் விலக, பட்டுப் போன்ற செஞ்சிவப்பு - மெல்லிய ஊதா நிற - முடி புலப்படும். (Rose Lilac Crest) இளம் கபில நரைநிற உடல்நிறத்தில் எதிர்மறையான இம்முடி மேலும் பிரகாசமாகப் புலப்படும். இந்நிகழ்வின் போது ஆண் தன் அலங்கார முடியை பெண் அவதானிக்கக் கூடிய வகையில் தனது தலையைச் சாய்த்து வைத்துக் கொள்ளும். இந்த விளையாட்டு எலலாம் பெண்ணிடம் இலகுவில் எடுபடுவதில்லை. அது மணவறையை நோக்கி நகருவதில்லை. மேலும் இப்போழுது அது மேலும் பயந்தது போல் நடிக்கும். இப்போது ஆண் தன் ஆடல்களை விடுத்து பெரிய வளைவான பாதையில் பெண்ணை நோக்கி தத்தி தத்தி வரும். இப்போது தன் அலகில் ஓர் இலையைப் பிடித்த வண்ணம் - உறுதியான



பொன்னிற கொடி வீட்டுப்பறவை தனது வசந்தகாலத் தம்பமணவறையின் பாலத்தில்.

- தொடர்ச்சியான தாண்டல்கள் மூலம் சீறிக் கொண்டும் செட்டைகளை அடித்துக் கொண்டும், பெண்ணை தன் மணவறைக்குள் விரட்ட முயற்சிக்கும். ஆயினும் பெண் உஷாரானது. எப்போதும் தனக்கும் ஆணுக்கும் இடையே மணவறை இருக்கும் வண்ணம் நகர்ந்து போக்குக் காட்டி விட்டு திடீரெனப் பறந்து போய்விடும். இப்பொழுது ஆண் அமைதியடையும். பிரகாசமான முடி மடிக்கப்படும். அரைமனதான ஆராய்வுடன் தனது அலங்காரப் பொருள்களை

( X ஆம் பக்கம் பார்க்க)

## நட்பு



கொக்கு ஒன்று காட்டில் வாழ்ந்து வந்த
யார் வம்புக்கும் அது செல்லாது. அது தின
அங்குள்ள குளக்கரைக்குச் சென்று அம
திருக்கும். அந்தக் கொக்கு வெள்ளை வெ
ரென்று பார்க்க மிக அழகாக இருக்கும்.
னால் அந்தக் கொக்கு குளக்கரையில் வ
அமர்ந்ததும் அதன் அழகை ரசிப்பதற்க
குளத்தில் வசிக்கும் மீன்கள் எல்லாம்
றாகக் கூடி வரும். அம்மீன்களில் தன் புசிக்
தேவையானவற்றைக் கொக்கு பிடித்
கொள்ளும். அருகிலுள்ள ஆரமரத்துக் கிளை
குச் சென்று உட்கார்ந்து மீன்களைச் சுவை
துத் தின்னும்.

இப்படியாகக் கொக்கு தன் காலத்தை
கழித்து வந்தது. ஒரு நாள் கொக்கு வசி
ஆலமரத்துக்கு அணிலொன்று வந்து சேர்ந்த
கொக்கு அந்த அணிலைத் தன் நண்பன
ஏற்றுக்கொண்டது. இரண்டும் மிக மகிழ்ச்சி
வாழ்ந்து வந்தன. கொக்கு அணில்
யான பழங்களைப் பறித்துக் கொண்டுவ
கொடுக்கும். கொக்கு அதனை அன்புடன் ஏ
உண்டு மகிழும். அணில் தாவித் தா
குட்டிக் கரணமெல்லாம் போட்டுக் காட்
அதனைப் பார்த்துக் கொக்கு சிரித்து மகி

ஒரு நாள் கொக்கு வழக்கம் போல் கு
கரைக்கு மீன் பிடிக்கச் சென்றது. அவ்வே
யில் அங்கு வந்த வேடனொருவன் கொக்
பிடிக்க முயற்சி செய்தான். ஆனால் சுதா
துக் கொண்ட கொக்கு, பறந்து தப்பி விட்
கொக்கு பதற்றத்துடன் வருவதைக் க
அணில், "என்ன நண்பா? ஏன் பயத்து
வருகிறாய்?" என்று கேட்டது.

"வேடன் ஒருவன் குளக்கரையில் வை
என்னைப் பிடிக்க வந்தான். நான் ஒரு
தப்பிவந்து விட்டேன்" என்றது கொக்கு.

அணில் மிகவும் வருத்தமடைந்தது.
நண்பா, இனி நீ அந்தக் குளத்துக்
போகாதே. இங்கேயே இருந்து விடு. உ
நான் சுவையான பழங்களைப் பறித்து
தருகின்றேன்" என்றது அணில்.

ஆனால் மீனைத் தின்று பழகிய கொ
னால் பழங்களை மட்டும் தின்றுவாழ்வது க
மாக இருந்தது. மறுநாளே நண்பன் பேச்
கேட்காமல் குளக்கரைக்குச் சென்
கொக்கை எதிர்பார்த்து வேடன் அங்கே வ
விரித்திருந்தான். அதனை அறியாத கொ
வலையில் மாட்டிக் கொண்டது.

வலையிலிருந்த விடுபட முயன்ற கொ
முயற்சிகள் தோற்றுப் போயின. வலை ே
இறுகிக் கொக்கை கெட்டியாகப் பிடி
கொண்டது. செய்வதறியாது கொக்கு தி
தது.

ஆலமரத்தில் அணில் தனது நண்ப
எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. வெகு
மாகியும் கொக்கு வராததால், நண்பனு
ஏதோ ஆபத்து என்று உணர்ந்து கொண
அணில். உடனே கொக்கைத் தேடி
கரைக்கு வந்தது அணில். கொக்கு வலை
மாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டது.

அணிலைக் கண்டதும் கொக்கு "ந
நீ எவ்வளவு சொல்லியும் கேளாமல்
வலையில் மாட்டிக் கொண்டேன்" என்று
தது. அப்போது கொக்கைப் பிடிக்க வே
வேகமாக வந்து கொண்டிருந்தான். அ
சிறிதும் தாமதிக்காமல் வலையை மிக
மாக் கடித்து நண்பனை விடுவித்தது. ே
அருகில் வருவதற்கும் கொக்கு விட்டுப்
பதற்கும் நேரம் சரியாக இருந்தது.


கொக்கு தப்பினேன் என்று பறந்தது
லும் தன் நண்பனைக் காப்பாற்றி வி
மென்ற சந்தோஷத்தில் துள்ளிக் குதி

கொக்கைப் பிடிக்க வந்த வேடன் பெ
ஏமாற்றம் அடைந்தான். அணில் மீது ே
கொண்டு தன் கையிலிருந்த கம்பை அ
மீது வீசியெறிந்தான். ஆனால் சாகச
அணிலோ தாவிக் குதித்துத் தப்பி ஓடிவி
சிக்கிய கொக்கு தப்பியதோடல்லாமல்
வலையையும் பாழாக்கிவிட்டதே என்ற க
யுடன் சென்றான் வேடன்.

ஆலமரத்தை அடைந்த கொக்கும்
லும் ஒன்றையொன்று கட்டித் தழுவிக்
டன. தன் உயிரைக் காப்பாற்றிய அணி
நன்றி தெரிவித்தது கொக்கு. இரண்டும்
மையாக வாழ்ந்து வரலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியுங்கள் பிளீஸ்



அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரஹாம் லிங்கன் 1862 ஆம் ஆண்டு போரில் ஈடுபட்டிருந்த சமயம். போர் முகாம் ஒன்றில் தங்கியிருந்தார்.

அப்போது போர் குறித்த சில விஷயங்களைப் பேசுவதற்காக சில இராணுவ உயர் அதிகாரிகள் அவரது முகாமுக்குச் சென்று அவரைச் சந்தித்தனர்.

அவர்கள் சென்ற நேரத்தில் லிங்கன் ஒரு புத்தகத்தை மிகவும் சுவாரஸ்யமாக படித்துக் கொண்டிருந்தார். அடிக்கடி சிரிக்கவும் செய்தார்.

தன்னைச் சந்தித்துப் பேச இராணுவ அதிகாரிகள் வந்திருப்பது தெரிந்தும் அவர் படிப்பதை நிறுத்தவில்லை. படித்துக் கொண்டே இருந்தார்.

சிறிது நேரத்துக்குப் பின் படிப்பதை நிறுத்திவிட்டு அவர்களைப் பார்த்து "பார்த்தீர்களா! இது ஓர் அருமையான நகைச்சுவைப் புத்தகம். இதிலுள்ள நகைச்சுவைச் சம்பவங்களைப் படித்துப் படித்து வயிறு புண்ணாகிவிட்டது. ஒரு அத்தியாயத்தைப் படிக்கின்றேன். கேளுங்கள்!" என்று கூறிவிட்டு ஒரு நகைச்சுவைப் பகுதியைப் படிக்கத் தொடங்கினார்.

அவரது செயல் இராணுவ அதிகாரி ஒருவருக்குக் கோபத்தைக் கொடுத்தது.

'நாடு இருக்கிற நிலை என்ன....? அதைத் தீர்க்க வேண்டிய ஸ்தானத்தில் இருக்கும் இவர் நகைச்சுவைப் புத்தகத்தைப் படித்துச் சிரித்துக் கொண்டிருக்கிறாரே. வெட்கக்கேடு!' என்று மனதுக்குள் முனகினார்.

ஆபிரஹாம் லிங்கன் அவர்களது மன நிலையை நன்கு அறிந்தவர் என்றாலும் நகைச்சுவைப் பகுதியைத் தொடர்ந்து படித்துக் கொண்டே இருந்தார்.

சிறிது நேரத்துக்கு பின் அந்தப் பகுதியை படித்து முடித்துவிட்டு 'கட...... கட....... ' வென்று சிரித்தார்.

பிறகு எதிரே இருந்த இராணுவ அதிகாரிகளைப் பார்த்து "நீங்கள் ஏன் சிரிக்கவில்லை?" என்று கேட்டார்.

"நாடு இருக்கிற நிலையில்..." என்று இழுத்தார் அந்த அதிகாரி.

"ஏன் சிரிக்கக் கூடாதா? நாடு பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் போது, சிரிப்பது கிரிமினல் குற்றமாகி விடுமா? பாருங்கள்..... உங்களைவிட பல ஆயிரம் மடங்கு பொறுப்புக்கள் எனக்கு அதிகம். இந்தப் பாரமான சூழ்நிலையில் அவ்வப்போது நான் சிரிக்கவில்லை என்றால் எனக்கு ஒன்றில் பைத்தியம் பிடித்துவிடும். அல்லது செத்துத் போவேன். மனப் பாரத்தைக் குறைக்கும் ஒரே மருந்து இந்தச் சிரிப்புத்தான். இது உங்களுக்கும் தேவை!" என்றார் ஆபிரஹாம் லிங்கன்.

அப்படிக் கூறி முடித்துவிட்டு. அடுத்த விநாடி சீரியசான மனநிலைக்கு வந்தார்.

மேசை மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு தாளை எடுத்து இராணுவ அதிகாரிகளுக்குப் படித்துக் காட்டினார்.

அது தமாஷ் விஷயம் அல்ல!

போரின் முக்கிய குறிக்கோளான 'அடிமை விடுதலைப் பிரகடனம்'அது. கறுப்பர் என்ற நீக்கிரோக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பது ஒன்றே அந்தப் போரின் நோக்கம்.

அதைக் கேட்டு மெய் சிலிர்த்துப் போய் விட்டனர் இராணுவ அதிகாரிகள்.

"இத்தகைய அரும் செயல்களைச் செய்வதற்கு இந்த நகைச்சுவை. ஓர் ஊக்க மருந்தாக இருக்கும் விஷயம் இப்போதுதான் தெரிகிறது. இனி நாங்களும் நகைச்சுவை உணர்வுகளுடன் இருப்போம்!" என்றார் சற்று நேரத்துக்கு முன்பு டென்ஷனாக இருந்த அதிகாரி.

# தேள் மனிதன்



கொடிய விஷமுள்ள தேள்களை தலை முழுவதும் கொட்டிக் கொண்டு கொஞ்சம்கூடப் பயம் இல்லாமல் காட்சியளிக்கும், இவரது பெயர் அலிகான். மலேசிய நாட்டுக்காரர்.

'மலேசிய பாம்பு மன்னன்' என்று செல்லமாக அழைக்கப்படும் அலிகான் அண்மையில் கோலாலம்பூரில் 5 ஆயிரம் கொடிய தேள்களுடன் தனி கண்ணாடி அறையில் இருந்து சாதனை நிகழ்த்தினார்.

இந்தக் கண்ணாடி அறையில் தேள்களுடன் 20 நாள்கள் தனியாக இருந்து உலக சாதனை நிகழ்த்துவதே அலிகானின் முயற்சி.

இதற்கு முன்பு கொடிய விஷமுள்ள பாம்புகளுடன் கண்ணாடி அறையில் குடியிருந்தும் இவர் சாதனை செய்துள்ளார்.

# விலங்கினத்தை அன்பு செய்வோம்

காக்கை குருவியெங்கள் ஜாதி
கடல் மீனும் கழுகும் எங்கள் ஜாதி
காட்டிலுறையும் கரும்பாம்பொடு கரடியும்
காற்றில் பறக்கும் ஈயும் எங்கள் ஜாதி

பாடல் தருமது குயில்தான் - நல்ல
ஆடல் கலைக்குமொரு மயில்தான்
தந்திரப் புத்திக்கொரு நரிதான்
தத்திப் பாயும் அந்தக் குருவி பார்க்க நல்ல அழகு

காட்டில் இருக்கும் விலங்கு பறவை
நாட்டிலிருக்கும் பசு மாடு
எல்லாம் எமதுயிரன்றோ - அதை
கொன்று உண்பதென்ன சரியோ?


எல்லாம் இறைவன் தந்த படைப்பு
இதைக் கொன்று வதைத்தல் என்ன நீதி?
துள்ளித் திரியுமந்த உயிரை - முளையில்
கிள்ளி யெடுப்பதென்ன நீதி?

காக்கையை நன்றே பார்த்துக்கொள்
உற்றவர் உறவை பேணும் வகை கண்டுகொள்
சேற்றிலிருக்கும் மண்புழுதான் - நிலத்தை
மாற்றிப் பண்படுத்தும் நட்புக்கொள்

ஆயிரம் சாதிகள் இல்லை - விலங்கில்
சாத்திரம் சமயமும் இல்லை
ஜாதியும் மதமும் சொல்லி - மனிதர்போல்
விலங்கினம் வாழ்வதும் இல்லை.

- பண்ணாகநாரதன் -


# வழிகாட்டி உதவுங்கள்!



சிக்கலான அறை அமைப்பினுள் சிக்கித் தலை சுற்றி நிற்கும் நண்பனுக்கு இச்சிக்கலை விட்டு வெளியேற வழிகாட்டி உதவிடுங்கள். எச்சரிக்கை! உங்களுக்கு தலை சுற்றாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

## சிறுவர் சுடர்


# மறைந்திருக்கும் பறவை எது?



இந்த உருவங்களை இணைத்தால் மறைந்திருக்கும் ஒரு பறவையைக் கண்டு பிடிக்க முடியும். உங்களால் முடிகின்றதா பாருங்கள்!

(விடை XV ஆம் பக்கத்தில்)

# எந்தத் தூண்டில் மீன்?




இந்தத் மூன்று தூண்டில்களில் ஒன்றில் மட்டும் மீன் சிக்கியுள்ளது. அந்தத் தூண்டில் எது என்று கண்டு பிடியுங்கள்.

# நொடிப்பொழுது

1. ஐவருடனே பிறந்தான்: தருமனல்ல. அதில் ஒருவன் சாட்சி சொல்வான். அவன் யார்?
2. ஆயிரம் பேரைக் கரைசேர்ப்பான். ஆனாலும் ஒருவர் உதவியின்றி நடக்கமாட்டான். அவன் யார்?
3. உள்ளே இருந்தால் ஓடத்தெரியும். வெளியே வந்தால் விரைவில் மடியும். அது என்ன?
4. உயிரில்லாத பறவை. நாடுநாடாய் போய்ச் சேரும். அது என்ன?
5. இரவும் பகலும் ஓய்வதில்லை. ஓய்வும் இல்லை. உறங்கினால் எழுப்ப ஆளில்லை. அது என்ன?
6. நீருக்குள் பிறந்து நீருக்குள் இறப்பான் அவன் யார்?
7. வானத்தைப்பாத்தான். சிறகு விரித்தான். மாதம் பல டசின் முட்டை இட்டான். அவன் யார்?
8. கண்ணுக்குத் தெரியும் முட்டை. கையில் அகப்படாத முட்டை. அது என்ன?
9. வட்ட வட்டக் கிணறு. வாயில்லாக் கிணறு. அது என்ன?
10. பந்தியில் முன்நிற்கும். பாதையில் பின் நிற்கும். அது என்ன?

பா.ஹம்சினி
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)

விடைகள்

1. விரல்கள் 2. தோணி 3. மீன் 4. ஆகாயவிமானம்
5. இதயம் 6. உப்பு 7. தென்னைமரம் 8. நீர்க்குமிழி
9. இளநீர் 10. வாழை இலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| புத சந் வியா | சனி சூ | வெ | |
| | பிரமாதிவருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி புதன்கிழமை தமிழ்ப் புத்தாண்டு பிறக்கின்றது. வாக்கியப்படி காலை 9.02இல் இலக்கினம் - இடபம் திருக்கணிதப்படி -காலை 11-47இல் இலக்கினம் - மிதுனம். | | ரா |
| கே | | | |
| | | செ | |

*வியாழன்மாறும்:- 27.05.1999இல் மேடம் - இராசியில் மாறும்.
*நன்மைதரும் இராசிகள் - மிதுனம், சிங்கம். துலாம், தனுசு, கும்பம்.
*ஏனைய இராசிக்காரர்கள் தங்கள் குல தெய்வங்களை வழிபட்டு ஏழைகளுக்குத் தானதர்மம் செய்து வரவும்.

இலங்கை, இந்தியா, ஈராக், அமெரிக்கா, பிரான்ஸ், பாகிஸ்தான், பங்களாதேஷ், ரஷ்யா, பசுபிக் - அத்திலாந்திக்சமுத்திர நாடுகளில் அரசியல் நெருக்கடி தோன்றும். பிரிட்டிஷ் அரசிக்கு சோதனைக் காலம். தமிழ்நாடு அரசு கலைக்கப்படும் நிலை ஏற்படும். பசுபிக் பிராந்தியம் - மத்திய தரைக் கடல் நாடுகளில் அணு பரிசோதனை, ஆயுத அழிவுகள், தீவிரவாதிகளால் திட்டமிட்ட அழிவுகள் திடீரென ஏற்பட இடம் உண்டு. இந்திய - பாகிஸ்தான் முறுகல்நிலை மீண்டும் எதிர்பாராத விதமாகத் தோன்றும். எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

# புதுவருடத்தில் உங்கள் பலன் எப்படி?

## மேடம்

ஏழரைச்சனி தாக்கத்தால் வாடி இருந்தவர்களுக்கு கண்டோஸ் தந்த மாதிரி வியாழன் 27.05.99லிருந்து வருவதனால் கலகங்கள் - ஆயுதத்தால் நெருப்பால், குண்டால், ஆபத்துக்கள்- காயங்கள் வர இருந்தாலும் ஓரளவு தாக்கம் குறையும். குடும்பத்தில் பொருள் விஷயமாக கருத்து வேற்றுமைகள் ஏற்படும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். எதிர்ப்பாலார் வீண் பழி சொல்வார்கள். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். குலதெய்வவழிபாடு மிகமுக்கியம். ஆசிரியர், சட்டம்- மருந்து - இரும்புத் துறையினருக்கு நன்மை, தீமை கலந்த பலன்கள் கொடுக்கும்.

## இடபம்

ஓடி ஓடி உழைப்பீர்கள். ஆனால் ஊருக்குக் கொடுக்கமாட்டீர்கள். ஏழரையாக வந்த சனி வாட்டி எடுத்தாலும் ஆவணிக்குப் பின்பு ஆறு தலைத் தரும். பணம்வரும், பதவி வரும் பிரயாணம், இடமாற்றம் நாடி வரும் ஆயினும் அதிக காலம் நீடிக்காது.புத்திரரால், உடன்பிறப்புக்களால் அங்கும் இங்குமாக அலைய வேண்டி வரும்.எழுத்துத்துறை, பத்திரிகை,கூலி மேசன்,நிர்வாகம், அரசியல், கலைஞர்கள் என்போருக்கு மாற்றங்கள் கொடுக்கும். கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்கவும்.

## மிதுனம்

உங்களுக்கு அவசரம் அதிகம். கதைத்து கதைத்துக் கொண்டு நடந்து கொண்டோ, ஓடிக்கொண்டோ இருப்பீர்கள். பக்கத்து வீட்டுக்காரர் உங்கள வீட்டை கவனிப்பார்கள் என்ற தைரியமோ? புதியதிட்டத்தால் மாற்றங்கள் தேடிவரலாம். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பத்திரிகைத்துறை, குருத்தொழில், கமிஷன் வியாபாரம் போன்ற தொழில் தொடர்பானவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். வெளிநாட்டுச் செய்தியால், பணத்தால் மகிழ்ச்சி அடைவீர்கள். 15.04.1999இல் இருந்து படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும்.

## கடகம்

அடைபட்ட கூட்டிலிருந்து விடுபட்ட காலமாகும். வீடுமனையில் மாற்றம், திருத்தங்கள் ஏற்படலாம். புதிய செய்திகளால் நன்மைகள் ஏற்படுகின்றன. வியாபாரம், அரசியல், நீதித் துறையினர், சட்டத்துறையினர், விவசாயிகள், கலைஞர்கள் என்ற பலதரப்பட்டவர்களுக்கு தொழில் ரீதியிலான நன்மைகள் ஏற்படும். ஆவணிக்குப் பின்பு வாகனத்தில் கவனமாக இருங்கள். பொருள் இழப்புக்கள் திடீரெனச் சிலருக்கு ஏற்படலாம். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

## சிங்கம்

அயலவர்கள் சகோதரங்களுடன் அன்பாக, விட்டுக்கொடுத்து வாழ வேண்டும். அல்லது பகைமை வரும்.

புண்ணியஸ்தானமாள ஒன்பதாம் வீட்டில் குருவும், சனியும் இருக்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து நற்செய்திகள் புத்திரரால் - சகோதரர்களால வர இடம் உண்டு. புதிய யாத்திரைகள் ஏற்படும். பணவரவு ஏற்படும். காத்திருந்த தொழில் ஒன்றில் கனதியான பலன்களை மிகவிரைவில் எதிர்பார்க்கலாம். நேற்றுவரை சிரியாதவர்கள் தலையாட்டிச் சென்றிடுவர். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். பெரியவர்கள் பல உதவிகளைச் செய்து தருவார்கள். மருந்து, சட்டம், கல்வி, வியாபாரத் துறையிலுள்ளவர்களுக்கு பல நன்மைகள் நடக்கும்.

## கன்னி

காலையில் சூரியன், மாலையில் சந்திரன். காலத்தை எண்ணியபடி இருப்பீர்கள். அது ஏன்? சோதனையும் வேதனையும் பல ஞானத்தைத் தந்து விடும். சொந்தத்தில் வாக்குக்கலகம், வந்தவர்கள் புறுபுறுப்பு, விதிகாரகன் - பொருள்காரகனுடன் எட்டில் வருவதனால் கோடு ஏற வேண்டிவரலாம். சட்டத்திற்கு முன்பு, சமாதானம் பேசிப் பாருங்கள். அல்லது அலைச்சல்தான் மாறிமாறி வரும். மின்சாரத்துறை, சட்டத்துறை, நிர்வாகத்துறை, கலைத் துறை, எழுத்துத்துறை, கல்வி, குருத் துறையினருக்கு மாற்றங்கள் ஏற்படலாம். நன்மை, தீமை கலந்து நடக்கும். மாதாவையும் மாரி அம்மனையும் தவறாது வழிபட்டுவரவும்.

## துலாம்

வீட்டில் நிம்மதி இருந்தால்தான் நீங்கள் நாட்டிற்குச் சென்று நல்லதை வாங்கி வருவீர்கள்: உழைத்துப்பணம் கொண்டுவருவீர்கள். பொதுத்தொண்டுகளில் புகழ் வரும். எல்லோருக்கும் பொருள்கிடைக்கின்றதா? இல்லையே! சமதர்மம் நீதி என்பன பேசிக் கொண்டு இருப்பீர்கள். சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, பிரயாணத்துறை, நிர்வாகத்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் நன்மை அடைவார்கள். ஆவணிக்குப் பின்பு குடும்பத்தினருக்கு நல்ல மாற்றங்கள், சுபகருமங்கள் நடக்க வாய்ப்புக்கள் ஏற்படும்.

## விருச்சிகம்

மழைக்கு வரும் காளான்கள் போன்று சிலர் சங்கங்களையும்,சமயச் சபைகளையும் அமைத்து நயம் பெற முற்படுவார்கள். இவர்கள் மற்றவர்களுக்கு துன்பம் கொடுப்பதை விரும்ப மாட்டார்கள். நீதியை நிலை நாட்ட சட்டஅலகுவரை எதிர்பார்த்து அமைதியாக இருக்காமல் கொந்தளிப்பதனால் சில எதிர்விளைவுகளைச் சந்திப்பீர்கள். மறைமுக எதிரிகளால் பல துன்பம். கைகால் வருத்தம், உஷ்ண பீடைகளால் ஆஸ்பத்திரிவரை சென்று வருவீர்கள். நிர்வாகத்துறை, தொழில் நுட்பத்துறையினர், எழுத்து - மதத் துறையினர் நன்மைகள் அடைவார்கள். 13.05.1999க்குப்பின்பு மாற்றங்கள் அதிகரிக்க இடமுண்டு. தூர தேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். கேட்டை நட்ஷத்திரகாரர் அவதானமாக இருக்கவும்.

## தனுசு

ஐந்தில் வியாழபகவான் புண்ணிய ஸ்தானமென நம்பி வருகின்றார்.சொந்தத்தால் வந்தவேதனைக்கு வந்தனை செய்வதில் நற்பலன் வரும் என நினைக்கிறீர்களா? குரு பார்த்தால், நின்றால் ஐந்தில் நின்ற சனி தான் நினைத்ததைச் செய்யமாட்டார். கள்ளமாக கரண்ட் எடுத்த பலர் - கறுப்பு வயரைக் கண்டு கலங்கும் காலம் போல இருக்கும். புத்திரரால், சகோதரங்களால் பெருமைப்பட இடமுண்டு. பாதிவழி சென்று பாங்கொங்கில் நின்ற தம்பி - தப்பிக் கனடா வரை செல்ல வழிவகுத்து விட வியாழன் அருள்புரிவான். பலவாக்குறுதிகளைக் கொடுத்துக் கலங்காதீர்கள். ஒப்பந்தத்துறை, கெமிக்கல், மருந்துத்துறை, வாகனாதிகள், பலசரக்கு எண்ணெய் துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரம் போன்ற துறையினருக்கு இலாபம் தேடி வரும். முயற்சிகளை தொடர்ந்து செயற்படுத்திவரவும். நன்மைகள் அதிகரிக்கும்.

## மகரம்

ஒரு சிலருக்காக சிலதிடமான நியதிகளை மாற்றக்கூடாது. முகம் பார்த்து சோதிடம், வைத்தியம் செல்லவோ, செய்யவோ முடியாது. சோதனையான காலத்தில்தான் ஒருவரின் உறுதிநிலை வெளிப்படையாகும்.உங்களுக்கு வீடுமனை, பொருள், வாகனம், தொழில் போன்ற விஷயங்களில் திட்டமான முடிவுகள் எடுக்க வேண்டி வரும். மே 1999க்குப் பின்பு மாற்றமான காலமாகும். இரும்பு, தொழில் நுட்பத்துறையினர், மரம், மருந்து, கமிஷன் வியாபரிகள், உற்பத்தியாளர்கள்,எழுத்தாளர்கள், கட்டடத் தொழில் சாமான்கள் விற்பவர்கள் போன்றவர்களுக்கு அதிக நன்மைகள் கொடுக்கும். புதிய திட்டங்களால் நன்மைகள் ஏற்படும்.

## கும்பம்

இடமாற்றம் செய்யப் பலமான திட்டமொன்று உண்டு. காற்று வீசும் பக்கமெல்லாம் கருத்துக்கள் திரும்பி நிற்கும். மனஅலையுணர்வுகள் ஏற்பட்டபடி இருக்கும். பிரயாணத்தால் மன நிம்மதி ஏற்பட இடமுண்டு. புத்திரர், சகோதரர்களுக்கு மாற்றங்கள் ஏற்படலாம். முயற்சிஸ்தானமான மூன்றாமிடத்தில். குருவருவதனால் உங்கள் கருத்துக்களுக்கு குடும்பத்தில் எதிர்ப்புக்கள் ஏற்படும். ஆனிக்குப் பின்பு மாற்றங்கள் சகஜமாகும். நெஞ்சுச்சளி, கண்ணில் வருத்தங்கள் வரலாம். உறவினர், நண்பர்கள் வரவு கலகலப்பைக் கொடுக்கும். ஆராய்ச்சித்துறை, மின்சார, தொழில் நுட்பத்துறை, கல்வித்துறை, பாதுகாப்பு, மருந்துத்துறை,வியாபாரத் துறையினருக்கு புதிய செய்திகளால் நன்மைகள் ஏற்படும்.

## மீனம்

பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பார்கள். வரவும் செலவும் போட்டி போடும் காலமாகும். என்ன தத்துவம் பேசினாலும் காசில்லையென்றால் என்னதான் செய்யமுடியும் என அடிக்கடி யோசிப்பீர்கள். பணக்காரன் வியாழன் காசுஸ்தானமான இரண்டில் வந்து கண்சிமிட்டி உங்களைப் பார்க்கும் காலமாகும். மே 1999க்குப் பின்பு பண வரவு ஏற்படும். புதிய திட்டம், தொழில் சிறப்பு ஏற்படும். அயலவர்கள், உடனிருப்பவர்கள், நண்பர்களுடன் மிக அவதானமாக இருக்கவும். மருத்துவத்துறை, இரசாயனத்துறை, குருத்தொழில்துறை, சட்டத்துறை, கணிதத்துறையில் உள்ளவர்களுக்கு பல மாற்றங்கள், நன்மைகள் ஏற்படச் செய்யும். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்துவரவும். கிறிஸ்தவ அன்பர்கள் அந்தோனியர் ஆலயத்தில் விளக்கெரிக்க எண்ணெய் கொடுத்து வரவும்.

**மகாதேவா ஜோதிடம்**

## வாட்ட சாட்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாம். ஓடிப்பிடித்துக் குழைத்துச் சாப்பிடச் சுவைதான். பாத்திரம் சிறிதாக இருப்பின் போட்டது நிறைய என்ற திருப்தி பிறந்துவிடும். இந்த உளவியல் ஓரளவுக்குப் பசியைத் தேற்றும்.

சட்டிக்குள் குழைத்து தனித்திருந்து சாப்பிட்டுச் சட்டியையும் கழுவி வைத்துவிடுவது சுலபம என நினைக்க வேண்டாம். தனித்தாலும் குசினிக்குள் போய் போட்டுக்கொண்டு மேசைக்கு வந்து சாப்பிட்டு முடித்துவிட்டுப் போய் விடுங்கள். குசினிக்குள் இருந்து சாப்பிடுவதை விட்டுவிடுங்கள். இரண்டாம் முறை பரிமாறும் அவசியத்தைத் தவிர்க்கலாம்.

### வீணே வயிற்றை நிரப்பாதீர்கள்!

மிஞ்சுவதெல்லாம் வீணாகிப்போய் விடுமென்று கொட்டிக் குழைத்து வயிற்றை நிரப்ப வேண்டாம். அவை குப்பைக் கூடைக்குப் போகட்டும். அல்லது கட்டுப்பாடு அற்றவர்கள் தின்று தீர்க்கட்டும்.நீங்கள் விட்டுவிடுங்களேன்!

இறைச்சி சமைக்கின்ற அன்று அரிசி போடப் பெரிய பாத்திரம் தேடாதீர்கள். இறைச்சியில் கிடைக்கும் கலோரிக்கு அளவாக சோற்றைக் 'கட்' பண்ண வேண்டிய தேவை அல்லவா எழுகிறது? எதிர்மாறாக அல்லவா நாம் செயற்படுகிறோம்?

க்டைக்குப் போகுமுன்பே பட்டியலைத் தயாரித்து விடல் வேண்டும். கடையில் போய் அதை இதைக் கண்டதும் பட்டியலில் மாற்றம் [illegible]யக் கூடாது.

ஏதாவது விசேடம் அல்லது விருந்து வாய்த்தால் ஒரு நாளைக்கு வாட்டுவதில் பாதகமில்லை.

இத்தோடு தினசரி கொஞ்சம் உடம்புக்கு வேலை காட்டினால் போகிறது. பயிற்சி என்று உடம்பை முறித்துத்தான் வாட்ட வேண்டும் என்றில்லை. ஓடியாடித் திரிவதும், சைக்கிள் ஓட்டுவதும், நடை போடுவதும் தினசரி தொடர்ந்தால் போதும். கொஞ்சம் தண்ணீர் இறைக்கலாம். வீட்டுத்தோட்டம் செய்யலாம்.

விருப்பமில்லாமல் வில்லங்கமாகப் பயிற்சி செய்வது ஒரு வேண்டாத சுமை. ஆடிப்பாடி பயிற்சியைச் செய்யும்போது காரியத்திலும் கண்ணாயிருந்தால் சரி. கயிறடித்தல் - நடனம் போன்றவற்றை விரும்பிச் செய்தால் பயன் கிட்டும்.

அடிக்கடி தராசில் ஏறி நின்று கொள்ளலாம். ஆனால் சடாரென எடையை வெட்டிவிட நினைக்கவேண்டாம். படிப்படியாக சீராக - சாடையாக எடை இறங்கத் தொடங்கினால் அது தான் உண்மையான வெற்றி.

### மரக்கறிச் சாப்பாடு அதிக நலம் தரும

வாரத்தில் ஓரிரு நாள்களை மரக் கறிச்சாப்பாட்டுக்கு என ஒதுக்கி விடுவதும் ஓரளவுக்கு உடம்பில் கொழுப்புச் சுமை ஏறுவதை கட்டுப் படுத்தவே செய்யும். அதற்காக மரக் கறிதானே என்று வடை, பாயாசம் சகிதம் மூக்குமுட்டப் பிடித்தால் அர்த்தம் பிழைத்துப்போம்.

முழு ஆடைப்பால் மாவை கைவிட்டு ஆடை நீக்கிய பால்மா வகைகளை ருசி பார்க்காமல் பாவிக்கப் பழகுவது 40களில் (வயது) இருந்து அவசியமாகிறது.

### மிகவும் ஆறுதலாக மென்று சாப்பிடுங்கள்

சாப்பாட்டு வேளையின் போது அள்ளி அள்ளி வாயில் போட்டு அவசரமாக விழுங்குபவர்கள் உட்கொள்ளும் அளவோ மிக அதிகம். ஆறுதலாக மென்று விழுங்குபவர்களுக்கு கோப்பையில் உள்ளது மறைய முன்னமே வயிறு நிறைந்து விடுகிறது.

அதிகம் பொரித்துச் சாப்பிட ஆசைப்படாமல் அவித்துச் சாப்பிடுவது உடல் எடையைக் குறைக்க நிறையவே துணைநிற்கும். காரணம கொழுப்புத்தான் மனிதனைக் கொழுக்க வைக்கிறது.

உடற் பருமன் என்பது ஒரு பரம்பரை சார்ந்த காரணிதான் எனப் பலரும் கருதினாலும் - அதிலும்கூட மேலதிக எடையை ஏற்றத்தான் உணவுப் பழக்க வழக்கங்கள் முயல்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

நாள் முழுவதும் பம்பரமாய்ச் சுழன்று வேலை செய்பவர்களுக்கு இந்த எடை அதிகரிப்புப் பிரச்சினை எழுவது குறைவு என்றே சொல்லலாம்.

உடம்பு வாட்டமாக இருக்க உணவும் உடலுழைப்பும் உருப்படியான [illegible] வேண்டும் என்பதில் இரு கருத்துக்களுக்கு இடமேயில்லை எனலாம்.

## மணவறை கட்டும்.....

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலசிய பின் ஆணும் பறந்து போய் விடும்.

இங்ஙனம் பல தோல்விகளுக்குப் பின் ஒரு பெண்ணை தனது மணவறைக்குள் கவருவதில் ஆண் வெற்றி பெறும்.

### கண்ணினால் பெண்னை மயக்கும் முயற்சி

மேலேயுள்ள விவரணத்தைக காதலாடலுக்கு வகைக்குரியதாகக் கொள்ளலாம். ஆயினும் இதில் இனத்துக்கு இனம் சிறுசிறு வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக சற்றின் கொடிவீட்டுக்கு ஆண் பறவைக்கு (Satin Bower Birds) முடியில்லை. ஆயினும் அதன் முழு உடல் நிறமும் பிரகாசமான கருநீல நிறமுடையது. அத்துடன் ஆடலின் வேகம் அதிரிக்க அதன் கண்கள் இரத்தச் சிவப்பு நிறம் பெறும். பார்ப்பதற்குப் பெண்ணை மயக்குவதற்கு (Hypnotise) முற்படவது போலப் புலப்படும். புள்ளிக் கொடிவீட்டுப் பறவைக்கு (Spotted Brower birds) பெரிய கொடிவீட்டுப் பறவைக்கு உள்ளது போல அதே நிறமுள்ள முடி உண்டு. ஆனால் இது எப்பொழுதும் தெரியக்கூடிய வகையிலிருக்கும். நியூக்கினியாவில் சாதாரணமாக மான் குட்டி நிற மார்புடைய கொடி வீட்டுப் பறவைக்கு (Fawn-breasted Bower bird) முடியில்லை: ஆயினும் முடியிருப்பதாகப் பாவனை செய்து ஆடும்.

### வசந்தகால தம்ப மணவறைகள்

முற்றிலும் வேறுபட்ட வகையான மணவறை வேறு ஒரு கூட்ட கொடி வீட்டுப் பறவைகளினால் அமைக்கப் படும். இது வசந்தகாலத் தம்ப வகை(Maypole type)என அழைக்கப் படும். இத்தகைய மணவறைகளை அமைக்கும் பறவைகளில் ஆஸ்திரேலியாவின் வட குவின்ஸ்லாந்தின் மலையுச்சிகளுக்குரிய மழைக்காடுகளில் அருமையாகக் காணப்படும். அழகான பொன்நிற கொடி வீட்டுப் பறவையும்(Golden Bower bird)ஒன்று. இவ்வினங்களுக்குரிய பறவைகளின் ஆண்கள், அண்டிய இரு மரங்களுக்கு மேல் பாலமாக விழுந்துள்ள ஒரு கம்பத்தை தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு இன மரத்தின்(Sapling-கன்று) அடியைச்சூழ சுள்ளிகளைக் குவிக்கும். சுள்ளிக் குவியல்கள் ஈற்றில் வசந்தகாலத் தம்ப கூம்பு போன்ற வடிவத்தைப் பெறும். இவற்றை அலங்கரிப்பதற்கு இலைக்கன் (Lichen) கற்றைகளையும் ஓர்கிட்டுப் பூக்களையும் மற்றும் காட்டில் எளிதில் கிடைக்கும் மலர்களையும் பயன்படுத்தும். இங்ஙனம் தனது ஆடலுக்கென ஒரு மேடையமைக்கும்.

பற் சொண்டு கொடி வீட்டுப்பறவை (Toothbill) கொடிவீடு கட்டுவதில்லை. ஆயினும், தரையில் இரண்டு சதுர யார்கள் அளவில் நிலத்தைத் துப்பரவு செய்து, புல் பூண்டுகளை எல்லாம் அகற்றி, இலைகளைக் கொய்து வந்து அலங்கரிக்கும். இலைகளின் முதுகுப்புறம் மேலாக இருக்கும் வகையில் வைக்கும். ஏதாவது இலை புரண்டு போனால் அதைக் கவனமாகக் எடுத்து மீண்டும் முதுகுப் புறம் மேலாக வரக்கூடியதாக வைக்கும். தினமும் உலர்ந்த இலைகளை அகற்றி புதிய இலைகளைக் கொண்டு வந்து வைக்கும். ஏனைய இனங்களைப் போன்று பற் சொண்டனும் ஆடலின்போது தன் அலகில் ஒரு இலையை வைத்திருக்கும். ஏனையவற்றைப் போலில்லாமல் இது உரத்த குரலில் வேறுபட்ட அலைவரிசைகளில் (சுருதியில்)அழகாகப் பாடக்கூடியது. மணவறையின் குறைபாட்டை அதன் இனிமையாள பாடல் ஈடு செய்யும்.

இங்ஙனம் மணவறைப் பறவைகளும் பலவகை. அவற்றின் மணவறைகளும் பல வகை. காதலாடல் காட்சிக்ளும் பல வகை.

ஆயினும் அடிப்படையான ஒற்றுமைகளையும் காணலாம். இனரீதியான கட்டடக்கலை வகைகளை நோக்கும் பொழுது சேர, சோழ, பாண்டிய, பல்லவ கட்டடக்கலைப் பாணிகள் நினைவுக்கு வருகின்றன அல்லவா?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

-கோபி-

11

அது ஒரு சிறந்த துடுப்பாட்ட அணி. ஆயினும் ஸிம்பாப்வே அணிக்கெதிரான ஆட்டத்தில் வெறும் பதினேழு ஓட்டங்களுக்கு ஐந்து முன்னணித் துடுப்பாளர்களை இழந்து தடுமாறிக் கொண்டிருக்கிறது. அப்போது ஓர் இருபத்து நான்கு வயது இளைஞன் களத்தினுள் நுழைகின்றான். படபடப்பில்லாமல் நிதானமாக நிலையெடுத்துக் கொள்கின்றான். கள வியூகத்தை அவதானிக்கின்றான். ஆறுகளும் நான்குகளும் பறக்கத் தொடங்குகின்றன.

இறுதியில் அவன் ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களைப் பெற அணி வெல்கிறது. வெற்றிகள் தொடர..... போட்டித் தொடரிலும் வெற்றி!

இது நடந்து 1983இன் புருடன்ஷல் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில். இந்த இளைஞன் இந்தியாவின் கபில் தேவ்!

அரவிந்த டி சில்வா



| | |
|---|---|
| பிறப்பு | :-1965-10-17 கொழும்பில் |
| பாடசாலை | :-டி.எஸ்.சேனநாயக்க ம.வி. |
| விளையாட்டுக் கழகம் | :-என்.ஸி.ஸி. |
| ஆட்டம | :-வலதுகைத் துடுப்பாளர்,Off-break பந்தாளர், உபதலைவர், முன்னாள் அணித் தலைவர். |

### கபில் தேவ்

கபில் தேவ் - இந்தப் பெயரைத் தெரியாத துடுப்பாட்ட இரசிகர்கள் இருக்க நியாயமில்லை. 1959 பெப்ரவரி 6ஆம் திகதியன்று சண்டிகாரில் பிறந்த Kapil Dev Nikhanj 'ஹரியானா ஹரிக்கேன்' (ஹரியானா புயல்)என்று புகழப்பட்டவர். ரெஸ்ற் வரலாற்றில் அதிக இலக்குகளை வீழ்த்திய பெருமைக்குரியவர்.

1978-79 காலப்பகுதியில் Rest of India XI அணிக்கும் கர்நாடகா அணிக்குமிடையில் நடைபெற்ற ஓர் இரானிக் கிண்ணப் போட்டியில் ஒரு பின்வரிசைத் துடுப்பாளராகக் களமிறங்கிய கபில் தேவ் 60 ஓட்டங்களைக் குவித்தபோது இந்திய தெரிவுக்குழு ஒரு சிறந்த சகலதுறை வல்லுநனை இனங்கண்டு கொண்டது. அதன் விளைவாகக் கபில் பாகிஸ்தானுக்குச் செல்லத் தெரிவான இந்திய அணியில் இடம் பிடித்துக் கொண்டார்.

அன்று வீசத்தொடங்கிய ஹரியானாவின் புயல் சுமார் பதினாறு ஆண்டுகளாகத் தொடர்ந்து வீசியது. 1978-79 காலப்பகுதியில் ஆரம்பித்து 1994 நவம்பர் 2ஆம் திகதியன்று தன் ஓய்வினை அறிவிக்கும் வரை கபில் சாதித்த சாதனைகள் மிகப்பல.

### கபிலின் சாதனைகள்

கபில் தேவ் சுமார் 131 ரெஸ்ற்களில் 15 ஆட்டமிழக்காத இனிங்ஸ்கள் உட்பட 184 இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடி 5248 ஓட்டங்களை 31.05 என்ற சராசரியில் பெற்றார். இந்த ஓட்ட எண்ணிக்கையுள் எட்டுச் சதங்களும் இருபத்தேழு அரைச் சதங்களும் அடங்கியுள்ளன.

சிறந்த துடுப்பெடுத்தாடும் வல்லமை இருந்தாலும் கபில் பிரகாசித்தது என்னவோ பந்து வீச்சில்தான். இது பற்றி "கபில் தன்னை ஒரு சகலதுறை வீரனாகக் கருதாமல் பந்தாளராக மட்டும் கருதியதால்தான் ஓட்டங்களை குவித்திருக்கவேண்டிய பல சந்தர்ப்பங்களை தவறவிட்டிருக்கிறார். அவர் தன் திறமையைச் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் இன்னும் ஆயிரம் ரெஸ்ற் ஓட்டங்களை அதிகமாகப் பெற்றிருக்கலாம்" என்று கருத்துக் கூறுகிறார் சுனில் கவாஸ்கர்.

பந்து வீச்சில் ஓர் இனிங்ஸில் ஐந்து இலக்குகளை 23 தடவைகளும் ஒரு ரெஸ்ற்றில் பத்து இலக்குகளை இரு தடவைகளும் பெற்றவர் கபில். ஓர் இனிங்ஸில் அரைச்சதம் மற்றும் ஐந்து இலக்குகளை நான்கு தடவைகள் பெற்ற இவர் 64 பிடிகளையும் பிடித்திருக்கிறார்.

கபிலின் சிறந்த பந்து வீச்சு 1983-84 காலப்பகுதியில் அகமதாபாத் ரெஸ்றில் நிகழ்த்தப்பட்டது. மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக நடைபெற்ற அந்தப்போட்டியில் கபில் 83 ஓட்டங்களைக் கொடுத்து ஒன்பது இலக்குகளை வீழ்த்தினார். அனில் கும்ளே(10-74), ஜசு பாட்டில்(9-69) ஆகியோரே கபிலை விடச் சிறப்பாக ஓர் இனிங்ஸில் பந்து வீசிய இந்தியர்கள் ஆவார்கள்.

1978 ஒக்ரோபரில் பாகிஸ்தானுக்கெதிராக முதன் முதலில். ஒருநாள் போட்டியொன்றில் பங்குபற்றிய கபில் அப்போட்டியில் இம்ரான் கானை ஆட்டமிழக்கச் செய்து முதல் ஒருநாள் போட்டி இலக்கினைப் பெற்றார். அவர் மொத்தமாக 224 ஒரு நாள் போட்டிகளில் 253 இலக்குகளை 27.43 என்ற சராசரியில் பெற்றார். ஒரு போட்டியில் நான்கு இலக்குகளை நான்கு தடவைகள் பெற்ற கபிலின் சிறந்த பந்துவீச்சு 1983இல் ஆஸ்திரேலியாவிற்கு எதிராக 43 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளை வீழ்த்தியமை ஆகும்.

கபில் ஒருநாள் போட்டிகளில் சிறப்பாகவே பந்து வீசினாலும் இப்போது அதிக ஒரு நாள் போட்டி இலக்குகளை வீழ்த்திய பெருமை வசீம் அக்ரமையே சாரும். ரெஸ்ற் போட்டிகளில்தான் கபில் பெற்ற 434 இலக்குகள் என்பது இப்பொழுதும் சாதனையாக உள்ளது.

கபில் 1994 ஜனவரியில் பெங்களூரில் இலங்கையின் டொன் அனுரசிறியை ஆட்டமிழக்கச் செய்தபோது ரிச்சர்ட் ஹாட்லியின் சாதனையைச் சமன் செய்தார். அந்த ரெஸ்ற்றின் பின் மேலும் மூன்று இலக்குகளைப் பெற்றநிலையில் ஓய்வு பெற்ற கபிலின் 432 ஆவது இலக்கானவர் இலங்கையின் ஹஸன் திலகரட்ணா!

கபிலின் துடுப்பாட்ட வாழ்வின் இறுதிக்காலம் அத்தனை சிறப்பாக அமையவில்லைத்தான். எனினும் இதுவரை காலத்திலும் இந்தியா உலகினுக்குத் தந்த மிகச்சிறந்த சகலதுறை வல்லுநன் கபில் தேவ் தான் என்றால் அது மிகையாகாது.

கபில், ஹாட்லி, பொதம், இம்ரான் ஆகியோரே துடுப்பாட்ட உலகின் மாபெரும் சகலதுறை வல்லுநர்கள் எனினும் ரிச்சி பேர்ணாட்,கெரி சோபேர்ஸ், வசீம் அக்ரம் போன்றோரும் மறக்கப்பட முடியாதோரே!

இவர்களில் கெரி சோபேர்ஸ் (Garry Sobers) மிக முக்கியமானவர். ஏனெனில் துடுப்பாட்ட வரலாற்றில் மிகச் சிறந்த துடுப்பாளர் (Batsman) சேர்.டொன் பிரட்மன் என்றால் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் (Cricketer) சேர்.கெரி சோபேர்ஸ்தான்.

### சேர்.கெரி சோபேர்ஸ்

துடுப்பாட்ட உலகிற்கு [illegible] சேவைக்காக [illegible] பெற்றவர்களில் ஒருவர் மேற்கிந்தியத் தீவுகளின் கெரி சோபேர்ஸ். இவர் ஆட்டமிழக்காமல் பெற்ற 365 ஓட்டங்கள் என்ற ரெஸ்ற் சாதனை பலருக்கும் பரிச்சயமானதொன்று. ஆனால் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் துடுப்பாட்ட உலகைச் சோபேர்ஸ் கலக்கிய கலக்கு.... நம்மிற் பலருக்கு தெரியாததொன்று.

1954.03.30 இல் இங்கிலாந்திற்கெதிராகக் கிங்ஸ்ரனில் தன் முதல் ரெஸ்றில் ஆடியபோது சோபேர்ஸுக்கு வயது 17 ஆண்டுகளும் 245 நாள்களும் மட்டுந்தான். அந்த ஆட்டத்தில் மொத்தமாக நாற்பது ஓட்டங்களையும் நான்கு இலக்குகளையும் பெற்றுக் கொண்டார். அந்த முதல் ஆட்டத்திலேயே சிறந்த சகலதுறை வீரனாகப் பிரகாசித்தாலும் சோபேர்ஸ் பின்னாளில் சிறந்து விளங்கியது துடுப்பெடுத்தாடுவதில்தான்.

இருபது ஆண்டுகாலத் துடுப்பாட்ட வாழ்விலே சோபேர்ஸ் சுமார் 93 ரெஸ்ற்களின் 160 இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடி 8032 ஓட்டங்களை 57.78 என்ற சராசரியிற் பெற்றார். இந்த ஓட்ட எண்ணிக்கையுள் 26 சதங்களும் அடங்கியுள்ளன. கவாஸ்கர்(34), பிரட்மன்(29), போடர்(27) ஆகியோரே சோபேர்ஸை விட அதிக சதங்களைப் பெற்றவர்கள்.

சோபேர்ஸது ஆட்டத்தின் முக்கியத்துவம் வாய்ந்த அம்சம் அவரது ஓட்டச் சராசரிதான். அரவிந்தா, அசாருதீன், சாயிட் அன்வர் போன்றோரது சராசரிகள் ஐம்பதைவிடக் குறைவானவை. கவாஸ்கர், போடர் போன்றோரது சராசரிகள் கூட ஏறத்தாழ 51 தான். ஆனால் சோபோர்ஸின் சராசரி 57.78.

இத்தனை சிறப்பான சராசரியுடன் துடுப்பெடுத்தாடிய சோபேர்ஸ், பந்து வீச்சிலே 235 இலக்குகளையும் சாய்த்தார் என்றால்..... அவரது திறமையை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

சோபேர்ஸ் ஓர் இடக்கைத் துடுப்பாளர். இடதுகை மிதவேகப் பந்தாளர். பந்து தடுத்தலிலே 109 பிடிகளைப் பிடித்த பெருமைக்குரியவர் அவர். பாகிஸ்தானுக்கெதிராக ஆட்டமிழக்காமல் 365 ஓட்டங்களைக் குவித்த போது அவருக்கு வயது இருபத்தொன்று மட்டும்தான்.

துடுப்பெடுத்தாடலிலும் பந்து வீச்சிலும் இவ்வளவு சிறந்து விளங்கினாலும் சோபேர்ஸின் அணித்தலைமை பெரிதாகச் சோபிக்கவில்ல. சோபேர்ஸ் தலைமையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்குபற்றிய 39 ரெஸ்ற்களில் பத்துத் தோல்விகளும் ஒன்பது வெற்றிகளுமே பெற்றது.

### ஏனைய சகலதுறை வீரர் சிலர்...

சோபேர்ஸை விட அவுஸ்ரேலியாவின் ரிச்சி பேர்ணாட், பாகிஸ்தானின் வசீம் அக்ரம் போன்றோரும் சிறந்த சகலதுறை வல்லுநர்களே. ரிச்சி பேர்ணாட் 63 ரெஸ்ற்களில் பங்குபற்றி 2201 ஓட்டங்களையும் 248 இலக்குகளையும் பெற்றவர். வசீம் அக்ரம் இதுவரை இரண்டாயிரத்திற்கும் அதிக ஓட்டங்களையும் 378 இலக்குகளையும் பெற்றுள்ளார்.

மேலும் இந்தியாவின் ரவி சாஸ்திரி (3830-151), இங்கிலாந்தின் ரொனி கிறேக்(3599-141) போன்றோர் மூவாயிரம் ஓட்டங்கள் மற்றும் நூறு இலக்குகள் என்ற எண்ணிக்கையை தாண்டியவர்கள். இவர்கள் இருவரும் தற்கால இரசிகர்களுக்கும் ஓரளவு பரிச்சயமானவர்கள். ஏனெனில் இப்போது இருவருமே தொலைக்காட்சி நேரடி வர்ணனையாளர்களாகப் பணி புரிந்து வருகின்றனர்.

ரவி சாஸ்திரியும் கெரி சோபேர்ஸும்தான் முதற்தர ஆட்டமொன்றின் ஒரு பந்துப்பரிமாற்றத்தின் ஆறு பந்துகளிலும் சிக்ஸர்கள் அடித்தவர்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும்.

மிக அண்மைக் காலத்தில் துடுப்பாட்ட உலகினுள் பிரவேசித்தோரில் பாகிஸ்தானின் அஸார் மஹ்மூட், தென்னாபிரிக்காவின் கலிஸ் போன்றோர் ஓரளவு சிறப்பான சகலதுறை வல்லுநர்கள். இவர்களில் கலிஸ் மிகச்சிறப்பானதொரு துடுப்பாட்டக்காரராகப் பரிணமித்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

முன்பெல்லாம் சிறந்த துடுப்பாட்டக்காரர் யார் என்பதை முடிவு செய்வதில் இரசிகர்களுக்கும் விமர்சகர்களுக்குமிடையில் கருத்து மோதல்கள் இடம் பெற்று வந்தன. ஆனால் இப்போது சிறந்த வீரர் யார்? சிறந்த அணி எது? போன்ற கேள்விகளுக்கு விடைகளைத் தரக் கூடிய தரக்கணிப்பு முறைகள் அறிமுகமாகியுள்ளன.

இவ்வகையில் அண்மைக்காலங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக சியட் தரக்கணிப்பு முறை (CEAT)விளங்குகின்றது.

கவாஸ்கர், இயன் சேப்பல், கிளைவ் லொயிட் ஆகிய சிறந்த முன்னாள் வீரர்கள் அடங்கிய குழுவால் தீர்மானிக்கப்படுவதாலும் மிகச் சிறந்த புள்ளியிடும் திட்டத்தைக் கொண்டிருப்பதாலும் தொலைக்காட்சி வர்ணனைகளில் பயன்படுவதாலும் சியட் தரக்கணிப்பு முறை மிகப் பிரபலமடைந்துள்ளது. (சியட் தரங்கணிக்கும் முறை பற்றிய விவரம் அட்டவணையில்)


1997-98ஆம் ஆண்டுக்கான சியட் தரக் கணிப்பில் ஆஸ்திரேலியா சிறந்த அணியென்றும் ஜெயசூரியா சிறந்த வீரரென்றும் அறிவிக்கப்பட்டது. 1998-99ற்கான தரக்கணிப்பில் இப்போது தென்னாபிரிக்கா சிறந்த அணியாகவும் கலிஸ் சிறந்த வீரராகவும் முன்னிலையில் இருக்கின்றனர்.

கலிஸ் சியட் தரக் கணிப்பில் முன்னிலை வகிக்கக் காரணம் அவரது சகலதுறை வல்மைதான். துடுப்பாட்ட வரலாற்றில் சகலதுறை வல்லமைகள் சரியாகப் பயன்படாது போன சந்தர்ப்பங்களும் உள்ளன. இலங்கையின் அரவிந்தா, ரணதுங்கா போன்றோர் ஆரம்ப காலத்தில் ஒரு நாள் போட்டிகளில் சிறப்பாகவே பந்து வீசினாலும் இப்போது அவர்கள் பந்து வீசுவதைப் பார்ப்பது அரிதாகவே உள்ளது.

எது எவ்வாறெனினும் இவர்களிருவரும் துடுப்பெடுத்தாடுவதில் சிறந்து விளங்கி வருவதை மறுப்பதற்கில்லை. அரவிந்தா அண்மையில் (30-03-99) இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் பூனேயில் நடைபெற்ற போட்டியில் 55 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் ஒரு நாள் போட்டிகளில் 8000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்த மூன்றாவது வீரரானார். ( விவரம் அட்டவணையில்)

அரவிந்தாவும் அசாருதீனும் ஒரு நாள் போட்டிகளில் 8000 ஓட்டங்களைத் தாண்டியுள்ள போதிலும் அவர்கள் ரெஸ்ற்களில் முறையே 5000, 6000 ஓட்டங்களை மட்டுமே பெற்றுள்ளனர். ஒரு நாள் போட்டிகளை விட ரெஸ்ற் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெறுதலே பெருமைமிகு சாதனையாக மதிக்கப்படுகின்றது.

அவ்வகையில் இந்தியாவின் கவாஸ்கர், ஆஸ்திரேலியாவின் போடர் ஆகியோர் பத்தாயிரத்திற்கும் அதிக ரெஸ்ற் ஓட்டங்களைக் குவித்துச் சாதனை படைத்தனர். அவர்கள் சாதித்த சாதனைகள் பற்றிய விவரங்களை இனிவரும் வாரங்களில் பார்ப்போம்.



கபில்

### 03-04-99இல் முன்னணி ஒரு நாள் துடுப்பாளர்கள்

| அணி | வீரர் | போட்டிகள் | ஓட்டங்கள் | சராசரி |
|---|---|---|---|---|
| இந்தியா | அசாருதீன் | 312 | 8873 | 37.60 |
| மே.இ.தீவுகள் | ஹெயின்ஸ் | 238 | 8648 | 41.37 |
| இலங்கை | அரவிந்தா | 254 | 8021 | 36.13 |
| இந்தியா | டெண்டுல்கர் | 211 | 7801 | 42.40 |
| பாகிஸ்தான் | மியன்டாட் | 233 | 7381 | 41.70 |
| இலங்கை | ரணதுங்கா | 264 | 7322 | 36.06 |
| பாகிஸ்தான் | சலீம் மலிக் | 276 | 7055 | 32.93 |
| மே.இ.தீவுகள் | ரிச்சட்ஸ் | 187 | 6721 | 47.00 |
| ஆஸ்திரேலியா | போடர் | 273 | 6524 | 30.62 |
| மே.இ.தீவுகள் | ரிச்சட்சன் | 224 | 6248 | 33.41 |

### சியட் தரக்கணிப்பு முறை

ஆட்டக்காரருக்கு

**1) துடுப்பெடுத்தாடுதல்**

ஓர் இனிங்ஸில்

* முதல் ஐம்பது ஓட்டங்களுக்கு ஒரு புள்ளி.
* பின்னர் ஒவ்வொரு 25 ஓட்டங்களுக்கும் ஒரு புள்ளி.
* சதம் பெற்றால் மேலதிகமாக மூன்று புள்ளிகள்.
* இரட்டைச் சதத்திற்கு மேலதிகமாக ஆறு புள்ளிகள்.

**2) பந்து வீசுதல்**

ஓர் இனிங்ஸில்

* முதலிரு இலக்குகளுக்கு ஒரு புள்ளி.
* பின்னர் ஒவ்வொரு இலக்கிற்கும் ஒரு புள்ளி.
* 5 இலக்குகள் பெற்றால் மேலதிகமாக மூன்று புள்ளிகள்.

*ஒரு ரெஸ்ற்றில் -*

* பத்து இலக்குகள் பெற்றால் மேலதிகமாக ஆறு புள்ளிகள்.

**3) களப்பணி**

* ஒரு பிடிக்கு ஒரு புள்ளி.
* 5 பிடிகள் பெற்றால் மேலதிக மூன்று புள்ளிகள்.

**4) இலக்குக் காப்பு**

* இருவரை 'ஸ்ரம்ப்' செய்தால் ஒரு புள்ளி.
* பின் ஒவ்வொரு ஆட்டமிழக்கச் செய்யதலுக்கும் ஒரு புள்ளி.
* ஐவரை ஆட்டமிழக்கச் செய்தால் மேலதிகமாக 3 புள்ளிகள்.


அணிகளுக்கு

**1) ரெஸ்ற்களில்**

* தாயகத்தில் பெறும் வெற்றிக்கு ஆறு புள்ளிகள்.
* பிறநாட்டில் பெறும் வெற்றிக்கு ஒன்பது புள்ளிகள்.
* வெற்றி தோல்வியின்றேல் மூன்று புள்ளிகள்.
* ரெஸ்ற் தொடர் வெற்றிக்கு மேலதிக இரு புள்ளிகள்.

**2) ஒரு நாள் போட்டிகளில்**

* வெற்றிக்கு 2 புள்ளிகள்.
* வெற்றி தோல்வியின்றி முடிந்தால் ஒரு புள்ளி.
* போட்டித் தொடர் வெற்றிக்குத் தொடரில் பங்கு கொண்ட அணிகளின் எண்ணிக்கையான புள்ளிகள்.



* "மரத்திலே விறுவிறுவென்று வேகமாக ஏறக்கூடிய கிரிக்கெட் வீரர் யாரென்று தெரியுமா உமக்கு?"
* "தெரியாது! யார் அது?"
* "வேற யார்? 'அணில்' கும்ளேதான்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சூ வி புத | சனி | வெ | |
| | இராசிச்சக்கரம் | | ரா |
| சந் கே | | | |
| | | செவ் | |

*மாற்றம்:- உத்தராடம் 4ஆம் பாதம் - மகரம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*வடக்கும் தெற்கும் அபிப்பிராயப் பேதப்படும். சமாதானம் வருமா என மக்கள் கேட்டபடி இருப்பார்கள். தேர்தல் திசைதிருப்பம் மாறி மாறி நடக்கும். அரசியலில் அரசியல்வாதிகள் மாறுபட்டு கருத்துக் கணை தொடுத்தபடி இருப்பார்கள். இந்தியாவில் பாகிஸ்தானுடன் சமாதான நோக்கம். அதனால் சில விளைவுகளை அரசு எதிர்நோக்கும். எதிர்க்கட்சிகள் கண்டனக் குரல் எழுப்பும். வடக்கும் தெற்கும் இழுபறி, கருத்துத் தடுமாற்றம் ஏற்பட்டாலும் மத்திய அரசு அசைந்து, அசைந்து சென்றுகொண்டிருக்கும். வடக்கு - தெற்குக்கு இயற்கை, செயற்கைத் தாக்கங்கள் ஏற்பட்டபடி இருக்கும். யுத்த மேகம் அத்திலாந்திச் சமுத்திர நாடுகளில், மத்திய கிழக்கு நாடுகளில் திடீர் திடீரென ஏற்படும். ஜனாதிபதி கிளின்ரனின் தந்திரப் போக்கு, மக்களின் மன திசைத்திருப்பம் என்பன ஏற்படும். வல்லரசுகள் மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ந்தும் பொருளாதார அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

# இந்த வார இராசி பலன்

**10-04-1999 இல் இருந்து 16-04-1999 வரை**

## மேடம்

தீயவருடன் சேர்ந்தால் தீமைகள் தான் நடக்கும். வடிவழகி வெள்ளி வாக்குத்தானத்திலிருந்தால் வார்த்தைகளில் தடுமாற்றம் வராது என நம்ப முடியுமா? கொடுத்த வாக்குறுதிகளை மீறியதால் நல்லவர்களை நம்ப வைக்கக முடியவில்லையே என்ற ஏக்கமா? நீதி நியாயத்தை தவறவிடுபவர்களுக்கு தண்டனை வராமல் விடுமா? தொழில் ஸ்தானத்தில் பகைமை ஏற்படலாம். நிதானமாக நடந்து கொள்ளவும். வயிற்றுப் பொருமல், நாரிநோ, கைகால் உளைவு, சளித்தொல்லை, தலைப் பாரம், உஷ்ணபீடைகள்,வாய்வுத்தொல்லை, யோசனை, பயம் என்பன கொடுக்கும் காலமாகும். அடிகாயங்கள் சிலருக்கு வரலாம். பொருள்கள், கொடுக்கல் வாங்கல்களில் நிதானமாக இருக்கவும் அல்லது விசாரணைகள் வரலாம்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

## இடபம்

கயல்விழியாள் - கலியாணக்காரி- வெள்ளி உதயத்திலிருந்து சிரித்து விளையாடும் காலம். இருண்டவர் கண்ணுக்கு தெரிவதெல்லாம் மாய வித்தைகள் மாதிரியல்லவோ இருக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் கௌரவப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். பொருள் விஷயத்தில் கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் வரலாம். எதிர்ப்பாலாரால் கிசுகிசுப் பேச்சுக்கள் பரவ இடம் உண்டு. நெஞ்சுநோ, சல வருத்தம், வாதவாய்வுத் தொல்லை என்பன ஏற்பட இடம் உண்டு. மனப் போராட்டம் அடிக்கடி தலைதூக்கும். பானவகைகளை அதிகம் பருகி வரவும். மதி நுட்பமும், நிர்வாகத் திறனும் கொண்ட உங்கள் திறமையான செயற்பாடுகளால் எதையும் சமாளித்துக்கொள்ள உங்களால் முடியும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன் (மத்தியானம்) வரையும.*

## மிதுனம்

இருப்பதுதான் செல்வம். ஊரெல்லாம் தென்னைமரம் இருந்தாலும் எங்கள் வீட்டுக்கறிக்கு பாதித் தேங்காய்கூட இல்லையே என்ற ஏக்கம் போலும். எடுத்ததெல்லாம் தோல்வி - தொடுத்த வேலையில் திருப்தியில்லை. இதுவரைகாலமும் கண்டவுடன் தலையாட்டி வந்த நாலுபேர் தப்பினால் போதும் என்று கண்டும் காணாமல் செல்வது எதனால்? தொழில் ஸ்தானத்தில் எதையும் சட்டெனப் புரிந்து பட்டெனச் செய்து விடுவீர்கள். குடும்பத்தில் ஒருவர் பற்றி கவலைப்பட இடமுண்டு. விதியின் வேலையென எண்ணுகிறீர்களா? தெய்வ வழிபாடு திசைமாற்றச் செய்ய இடமுண்டு. தலைவலி,வாய்வு வாத உளைவுகள், கைகால் தாக்கம்,சளி, மலச்சிக்கல், பித்தத்தால் தலைசுற்றல், அதிக களைப்பு என்பன ஏற்படச் செய்யும் காலமாகும். வெளிநாட்டிலிருந்து நற்செய்திகள் வரலாம். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன் (மத்தியானம்) வரையும*

## கடகம்

உலகில் நமக்குப் பிடித்தவர்கள் தான் உதவிசெய்ய வேண்டுமா? உதவி செய்பவர்கள் எல்லோரையும் எமக்குப் பிடித்து விடுகிறதா? சொல்வதைக் கேட்காமல் விட்டால் நல்லவர்கள் நம்மைவிட்டு விலகிவிட மாட்டார்கள் என நாம் நம்பமுடியுமா? பிடிவாதத்தை குறைத்துக் கொள்ளுங்கள். அயலவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படும். உலகத்திற்காகப் பேசும் உங்களை அயலவர்கள் அல்லல் படுத்தும் காலமாகும். அடிக்கடி பயம், உடல்நோ, உஷ்ணபீடைகள், நெஞ்சுப் படபடப்பு, சிரசு வருத்தங்கள், அதிககளைப்பு, கைகால்நோ, பிடிப்பு என்பன அடிக்கடி கொடுக்கும். தெய்வழிபாட்டிற்கு எந்தவித இடாம் பீகச் செலவுகளும் தேவையில்லை.

*அதிர்ஷ்டநாள்:-புதன், வியாழன் (மத்தியானம் வரையும்)*

## சிங்கம்

பூர்வீகத் தொடர்பானவர்களைக் காணும் காலமாகும். செய்தொழிலில் மாற்றமொன்று ஏற்றத்துடன் வருகிறதென்று கனவு காண்பீர்கள். விதி ஏற்படுத்துகின்ற நியதிகளுக்கு மனிதர்கள் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். தொழில் ஸ்தானத்தில் வரவேற்பும் - அனுதாபமும் ஏற்பட்டபடி இருக்கும் காலமாகும். நெஞ்சு வருத்தம், மனக்கவலை, முதுகுவலி, நாரிநோ, கைகால்உளைவு, கண்எரிச்சல் என்பன கொடுக்கும். நல்லவர்களுக்கு சோதனையும், வேதனையும் அதிகமாகும். விதி, மதி, சதி சுழல்சக்கர வாழ்க்கை. பாசவிளிம்பில் மனம் பதியும் காலமாகும். தெய்வ வழிபாடு அமைதி தரும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன் (மத்தியானம் வரையும்).*

## கன்னி

சட்டத்தை மீறி நடந்தால் ஒரு வட்டத்திற்குள் வந்து விடுவீர்கள். எட்டில் சனி நின்றால் எட்டி, எட்டிப் பார்ப்பார்கள் உங்கள் பகைவர்கள். தொழில் ஸ்தானத்தில் சிலர் தொந்தரவு தந்திடுவார்கள். எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. மாதமொரு திங்களுக்குள் மாற்றம் ஒன்று ஏற்படும். புதிய வருஷத்தின் பின்பு புதுக்காற்று, புதுக்கருத்து தேடி ஓடிவரும். விதியால் விழுந்தாலும், சதிகாரர் செய்த சூழ்ச்சியால் உங்களை அகப்படுத்த முடியாமல் முழிப்பார்கள். நரம்புச்சோர்வு, நாரிநோ, சளி, வாதவாய்வுத் தொல்லைகள், இருக்கச் செய்யும். நாரிமுறியத் தேடியதை வாரி இறைத்துச் செலவு செய்ய விரும்ப மாட்டீர்கள். வெளிநாடு என வீண் காசுச் செலவை செய்ய மாட்டீர்கள். ஜேர்மனி வீடுகட்டி ஏன் தருகிறது? அகதிகளை இங்கு அனுப்ப அரசாங்கத்தை கேட்கப்போகிறது என்று எண்ணாமல் இருக்கமாட்டீர்கள்.அதிக கற்பனை, அறிவுச் செயற்பாடுகளை வருங்காலத்தில் உங்களுக்கு தரும் காலமாகும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

## துலாம்

அவரவர் செய்யும் தீமைகளுக்கு அவரவர்கள்தான் தண்டனையைப் பெறவேண்டும். எதிர்ப்பாலாரால் அடிக்கடி அலைச்சல் ஏற்படும். பொறுமைக்கும் எல்லை உண்டு என சண்டை பிடிப்பதால் பிரச்சினைகள் முடிந்து விடாது. சகோதரங்களால் சில கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டபடி இருக்கத்தான் செய்யும். குடும்பப்பாசம், சமாதானத் தூது, நண்பர்களை நம்புதல், தெய்வ வழிபாடு, உண்மைக்காகப் போராடுவது என்பன உங்களுக்கு மிகப் பிடிக்கும். கைகால்தடிப்பு, குடல்வருத்தம், நாரிநோ, வயிற்றுக்கோளாறு, சலவருத்தங்கள் என்பன அடிக்கடி கொடுக்கும். இடமாற்றங்கள் அல்லது பிரயாணங்கள் மனஆறுதலைத்தரும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

## விருச்சிகம்

மான்விழியாள் வெள்ளியால் அடிக்கடி தேன்மொழிகளை அள்ளி வீசுவீர்கள். அரசாட்சி மன்னர்கள், ஜனாதிபதிகள், மாமுனிவர்கள் எனப் பலதரப்பட்ட உயர்பீடங்களை அலங்கரித்தவர்கள் எதிர்ப்பாலாரின் கடைக்கண் வீச்சில் தடம்புரண்டுள்ளார்கள். உதயத்தைப் பார்க்கும் வெள்ளி அதிகாலைவேளை நித்திரை மயக்கத்தில் பல கனவுகளைத் தந்திடுவாள். தொழில் ஸ்தானத்தில் சிறுதவறு பெரும் பாதிப்பைத் தரலாம். புதிய பொறுப்புக்கள் வரலாம். மற்றவர்களைப்பற்றி அதிகம் சிந்திக்காத நீங்கள் அடிக்கடி மனக்கவலைப்படுவது ஏனோ? ஆராய்ச்சி, இசை, ஆழ்ந்த சிந்தனை, அடிக்கடி ஆள்கொள்ளும். விதியின் கைப்பாவை நீங்கள். மூலவருத்தம், கைகால் உளைவு, உடலெரிவு, காயம், வாத விறைப்பு, உணர்ச்சி வருத்தம் என்பன கொடுக்கலாம்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன.*

## தனுசு

ஒருவரின் இறப்பால் முடிவு வந்து விடாது. போராடிப் போராடித்தான் எந்த விஷயத்திலும் வெற்றி காண வேண்டும். மனிதஉரிமை, காணிபூமியின் ஆட்சியை எவருக்கும் உயிர் மூச்சு இருக்கும் வரையும் விட்டுக் கொடுக்க முடியாது - கூடாது - அதற்காக பயந்து ஓடிவிடவும் முடியாது. இலட்சியம் நிறைவேற வேண்டுமாயின் தொடர்ந்து ஒருவர் விடாமுயற்சியால் போராடி வெற்றிகாண வேண்டும். தொழில் ஸ்தானத்தில் இடைக்கிடை போராட்டங்கள் வரத்தான் செய்யும். மேலதிகாரிகள், நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். மனந்திறந்து கருத்துக்களை வெளிவிடுவீர்கள். நாரிநோ, வாதவாய்வுத் தொல்லை, மூட்டுநோ, வயிற்றுவலி, அதிக களைப்பு, மனம் உடல் சோர்வு என்பன கொடுக்கும். ஆலயங்களுக்குச்சென்று வாருங்கள்.அல்லது மருந்திற்கு மருந்துச் சாலைகளில் நடந்து வருவீர்கள். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள், புதன்.*

## மகரம்

பொறாமையால் சிலர் - பலரைக் கீழ்மைப்படுத்த முனைவர். அதனால் தாமே தாழ்ந்து போவார்கள். இதை நீங்கள் அறியாதவரல்லர். உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் பல பிரச்சினைகள் தேடி ஓடிவரும் ஆயினும் பொறுமையாகச் சமாளித்துக் கொள்ளல் வேண்டும். இடமாற்றங்களைக் கண்டபடி செய்ய வேண்டாம். ஆடி அசைந்து மெல்லக் காற்று வீசினாலும் - வெற்றிடங்கள் என ஓரிடத்தையும் விடுவதில்லையே. அது போன்று நீங்களும் எங்கும் மெல்ல மெல்லச் சென்று நோட்டமிட்டபடி இருப்பீர்கள். வயிற்றுநோ, அடிக்கடி யோசனை, மூட்டு வலிகள், கைகால் பிடிப்புக்கள், வலிகள், தலைவலி உஷ்ணபீடைகள், வாய்வு வருத்தங்கள் என்பன கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு,திங்கள்.*

## கும்பம்

தந்தைசொல்லை மீறும் மகன். - தாயின் பாசத்தை காதல் வேகத்தில் துறக்கும் மகள். இவர்களுக்கு நடுவே உறவுமுறையில் பஞ்சில் நெருப்பு வைத்து புகைத்துக் கருகவைக்கும் பலர். இதற்கு நடுவே பாசவெள்ளத்தால் நாதியற்ற நடுக்கடல் படகு போன்று துடித்து துடித்துத் வேதனைப்படும் நெஞ்சங்கள் போன்று மனப்போராட்ட உணர்வு உங்களைத் தூண்டியபடி இருக்கும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் அடைபட்டிருக்கும் ஒரு நிலை உங்களை அடிக்கடி வாட்டும். நண்பர்கள் உதவி செய்வார்கள். நரம்புச் சோர்வு, கைகால் பிடிப்பு, வாத வாய்வு, உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள.*

## மீனம்

கடந்தகால இடம்பெயர்வைச் சாட்டாக வைத்து கண்ணியமானவர்கள் எனக் கணிக்கப்பட்ட சிலரின் கண்ணியமற்ற செயல்களால் பலர் காணி பூமிகளின் உரிமைகளைக்கூட இழக்கின்ற நிலை ஏற்படுகின்றதை அறியவில்லையா? உங்கள் சொத்துக்களில் மிகக்கவனமாக இருங்கள். இனிக்கப் பேசி இழப்புக்களைத் தரும் பலர் எம் மத்தியில் உள்ளார்கள். தொழில் ஸ்தானத்தில் பாதிவழி சென்று பரிதவிக்கும் நிலை ஏற்படலாம். பாடுபட்டு தேடியதை பறித்தெடுக்கும் ஒரு சிலரின் செயலால் அவதியுற நேரிடலாம். பெரியவர்களின் உதவிகளால் பல நன்மைகள் ஏற்படும். வாகனச்செலவு அல்லது இழப்பு சிலருக்கு வரலாம். உங்களைச் சிந்தித்து சரிப்படுத்துங்கள். உலகத்தைத் திருத்த முற்பட்டு குறை கேட்காதீர்கள். சளி, வாத வாய்வு, குடல்வருத்தங்கள், காய்ச்சல், உஷ்ணபீடைகள், மனயோசனை, நரம்பு உளைவு என்பன கொடுக்கும.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்.*

**மகாதேவா ஜோதிடம்**

**ஜோதிட சஞ்சீவி**

# ஒட்டியுள்ள உற ..........

(VI ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லு"

"அம்மா எனக்கொரு உடன்பிறவாத் தங்கை கிடைத்திருக்கிறாள். என்ர வகுப்புத்தான்.ஆனால் என்னைவிட மூன்று மாதம் இளமை. புங்குடுதீவிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவள்."

"இனி உனக்கென்ன குறை?" என்று உற்சாகப்படுத்தினேன்.

"அவளம்மா போன கிழமைதான் வந்து சேர்ந்தவள். எனக்குப் பக்கத்தில் இருக்கிறவள். அவளின்ர பெயர் சிவானி. அவளுக்கு கொஞ்சம் கஷ்டம். நான் கொண்டு போறதில அவளுக்கும் கொடுப்பேன். அவள் என்னோடதான் திரிவாள்."

"பரவாயில்லை. இனிமேல் நான் அவளுக்கும் சேர்த்துக் கட்டித்தாரன்"

"தாங்கியூ அம்மா", என்றபடியே சந்தோசத்தில் துள்ளிக்கொண்டு ஓடினாள்.

இப்பொழுது எந்த நாளும் பள்ளிக்கூடத்தால் வந்தால் சிவானியைப் பற்றிய கதையேதான். ஒரே மகிழ்ச்சியாக இருந்தாள்.

வாசற்பக்கம் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். தூரிதான் ஓடி வந்தவள், புத்தகப்பையை எறிந்து விட்டு என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கோவென்று அழத்தொடங்கிவிட்டாள்.

கண்ணைத் துடைத்தபடி "என்ன தூரி! அழாதை. அழாமல் என்னன்று சொல்லு!!"

"அம்மா....அம்மா.....போனகிழமைய்ம்மா"

"ம் , சொல்லு"

"சிவானியின் மச்சாள் ஊரிலிருந்து எங்களுடைய பள்ளிக்கூடத்திற்கு வந்து சேர்ந்தாள். அதுக்குப்பிறகு........" விம்மல்.

"அழாமல் விசயத்தைச் சொல்லு"

"அதுக்குப்பிறகு....... சிவானி என்னோட சேர்வதில்லை. நான் கொடுக்கிறதையும் வேண்டிறதில்லை. மச்சாளோடதான் திரிவாள். அவளின்ர மச்சாள் நல்ல வசதியாம்"

"நீ சிவானியோட கதைச்சுப் பார்த் தனியே?"

"நான் அவளிடம் என்ர தங்கையாக உம்மை நினைச்சிருக்கிறேன். ஆனால் இப்ப நீர் ஏன் என்னோட சேர்றதில்லை? என்று கேட்டன்"

"அதுக்கு அவள் என்ன சொன்னாள்?"

"அவளம்மா... அவளம்மா.....?" விம்மலோடு தொடர்ந்தாள்.

"நீர் எப்படி என்ர தங்கையாக இருக்கமுடியும்? நீர் என்ன என்ர உடன்பிறப்பா? அல்லது எங்கட இரத்த உறவா? நீர் யாரோ - நான் யாரோ. எனக்கும் உமக்கும் ஒரு சொந்தமுமில்லை, பந்தமுமில்லை. ஆனால் தாரணி என்ர சொந்த மச்சாள். மாமான்ர மகள். எண்டு சொன்னாள்". சொல்லிக்கொண்டே அழத் தொடங்கினாள்.

அவளின் கண்களைத் துடைத்து சமாதானப்படுத்தியபடி "வா வீட்டிற்குள்ளேபோவம்" என்று அழைத்தேன். வீட்டுப்படியால் ஏறி திண்ணையில் கால் வைத்தவள் காலில் ஒட்டிய மண்ணைத் திண்ணையில் தேய்த்துத் தேய்த்து தட்டினாள். தட்டினாலும் காலில் அப்பிய மண் அப்படியே இருந்தது.

"இந்த மண் என்னம்மா! காலில் ஒட்டிக்கொண்டு காலைவிட்டுப் போகுதில்லையே. இது இப்படித்தான் காலிலை ஒட்டினால் காலைலவிட்டுப் போகாது."

"பார்த்தியே! நீ தனிய எண்டாய். காலம் காலமாக நாங்கள் சீவிச்ச இந்த மண் நீ தனிய இல்லை. உன்னோட தானும் இருக்கிறன் எண்டு சொல்லாமல் சொல்லுது." என்றேன்.

அப்பொழுது நல்லூர் கோயில் மணியின் 'ஓம்' என்ற நாத வடிவம் காதிற்குள் புகுந்து மெய்சிலிர்க்க வைத்தது.

"பிள்ளை! நல்லூர் முருகன் கூட நான் நாதவடிவில் உன்னோட இருக்கிறேன் எண்டு சொல்லுறான்" என்றேன்.

அப்பொழுது வள்ளியும் தூரி தன்னிடம் வரவில்லை என்ற ஆதங்கத்தில் எங்களைப் பார்த்துத் தலையை ஆட்டி ஆட்டிக் கூப்பிட்டது.

"அங்க பார் உன்ர வள்ளியை. அது உன்னைக் கூப்பிடுது. வள்ளி ஆடு என்றாலும் அதுக்கு உன்னில எவ்வளவு பாசம். ஒரு நேரம் உன்னைக் காணாவிட்டால் சாப்பிடாது. முந்தியொருக்கா நீகாய்ச்சலாக இருந்தபோது வள்ளியும் சாப்பிடேல்லை தெரியுமா?"

"உண்மையாகவா அம்மா?"

"ஓம் தூரி. இனி எட்டிப் போன உறவுகளை எண்ணி ஏங்காமல், உன்னோட ஒட்டியுள்ள உறவுகளைப் பற்றிச் சிந்தி. ஓடிப்போய் வள்ளிக்குச் சொல்லிப் போட்டு முகம் கழுவி வா சாப்பிட" என்றேன்.

அவள் ஏதோ விளங்கின மாதிரி துள்ளிக் கொண்டு ஓடினாள்.

(யாவும் கற்பனை)

# புளிக்கஞ்சி



துறவிக்கு பணிவிடை செய்வதற்கு ஓர் இளைஞன் வந்தான். நீர் அள்ளுதல், சமைத்தல், குடில் மெழுகுதல், பசுக்காத்தல் முதலாம் வேலைகளைத் தான் செய்வதாகவும், தனக்கு ஞானத்தைச் சொல்லித்தரவேண்டும் என்றும் இளைஞன் பணிவுடன் கேட்டுக்கொண்டான்.

'இன்றைய உணவுக்குப் புளிக்கஞ்சி காய்ச்சு' என்று துறவி இளைஞனுக்கு கூறினார். கொல்லையிலே உள்ள புளியமரத்தில் ஒரு பழத்தை மாத்திரம் பிடுங்கி எடுத்து தினையரிசியுடன் சேர்த்துப் புளிக்கஞ்சி காய்ச்சும்படி துறவி சொன்னார்.

**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

நீண்ட தியானத்தை முடித்துவிட்டு வந்து துறவியும் இளைஞனும் புளிக்கஞ்சி குடித்தார்கள். கஞ்சிக்குப் புளி போதாது போல இளைஞனுக்குத் தெரிந்தது. ஆனால் அவன் அதைத் துறவிக்குச் சொல்லவில்லை.

மறுநாளும் புளிக்கஞ்சி காய்ச்சும்படி துறவி இளைஞனுக்குக் கூறினார். ஆனால் ஒரேயொரு புளியம் பழத்தை மாத்திரம் பிடுங்க வேண்டும் என்றும் துறவி கூறினார்.

துறவிக்குத் தெரியாமல் இளைஞன் இரண்டு புளியம்பழங்களைப் பிடுங்கி கஞ்சி காய்ச்சினான். நீராடிவிட்டுக் கஞ்சி குடிப்பதற்குத் துறவி வந்தார்.

புளிக்கஞ்சியின் மணம் வித்தியாசமாக இருந்தது. "எத்தனை புளியம் பழங்கள் போடப்பட்டன?" என்று துறவி கேட்டார். இளைஞன் இரண்டு புளியம்பழங்கள் போடப்பட்டதை ஒப்புக்கொண்டான். "சொல்லுத்தட்டியதால் உனது வலக்கையினும் பார்க்க இடக்கை ஆற்றல் குறைந்திருக்கும்" என்று துறவி சாபம் போட்டார்.

-தொகுப்பு:- கலாநிதி. சபா ஜெயராசா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செங்கை ஆழியான்

## முன்நிகழ்வு

சோணாவாரியாக மாரி மழை காலந்தப்பிப் பொழிந்து கொண்டிருக்கிறது. வானமே பொத்தல் விழுந்ததுபோல நீர்த்தாரைகள் மண்ணில் இறங்கிக் கொண்டிருக்கின்றன. வாங்கில் நீட்டி நிமிர்த்தி துரையப்பர் வளர்த்தப்பட்டிருக்கிறார். உடல் ஒட்டி வதங்கியிருக்கிறது. கரங்கள் இருபக்கங்களிலும் சோர்ந்து கிடக்கின்றன. விழிகள் ஆழமாக மூடிக் கிடக்கின்றன. மார்புக்கூடு ஏறியிறங்குவதிலிருந்து அவர் இன்னமும் இவ்வுலகின் பந்தங்களுடன் தன் உறவினை அறுத்துக் கொள்ளவில்லையெனத் தெரிகிறது.

"தையல்.." அந்த வயோதிபரின் நெஞ்சக்கூட்டில் வாத்சல்யமான அப்பெயர் எதிரொலித்தபடியிருக்கின்றது. 'என்னுடன் அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து முடித்தவள். என் வாழ்விலும் தாழ்விலும் கூடவே பயணம் செய்தவள். தையல், உன் மரணத்திற்கு நான் காரணமாக அமைந்துவிட்டேனா?'

அவர் உதடுகள் துடிக்கின்றன.

"அப்பு, ஏதோ சொல்ல விரும்புறார்" என்கிறாள் துயரத்துடன் மூத்தவள் யோகம். அவரைச்சுற்றி எல்லாரும் சூழ்ந்து நிற்கிறார்கள்.

"அப்பு, அப்பு, எங்களை ஒருக்காப் பார் அப்பு" என்று பேரப்பிள்ளைகள் விம்முகிறார்கள். அவர் அவ்வாறான பாசப்பொழிவுடன்தான் அனைவரையும் வளர்த்து ஆளாக்கியவர். உயிர் ஒடுங்கிக்கொண்டிருக்கும் துரையப்பரின் படுக்கையைச் சுற்றி நிற்கும் அவர் உதிரத்தின் பங்காளிகள் உண்மையில் இதயம் குமுறித்தான் கலங்குகின்றார்கள்.

"ராகுலா..." அவர் உதடுகள் துடிக்கின்றன. 'பேரா, என் பேரா, உன்னை இனி எங்க காணப் போறன்? எத்தனை கனவுகளோடு என்னுடன் அளவளாவினாய்?'

"அப்புவுக்கு ராகுலனின் நினைவுதான்." என்றபடி பவளம் விம்முகிறாள்.

வெளியே வெள்ளம் முற்றத்தில் தேங்கத் தொடங்குகின்றது. மழை ஓயும் அறிகுறியில்லை. வீட்டின் கூரையில் விழும் துளிகள் ஒவ்வொன்றும் கனமான சத்தத்தினை ஏற்படுத்துகின்றன. 'முற்றத்து இலுப்பை மரத்தில் வெளவால்கள் விழுகின்றனவா? இலுப்பைப் பழங்கள் பிடிகழன்று கூரையில் விழுகின்றனவா? என்ன சத்தம்? லூசியா.. லூசியா?'

யாரோ முற்றத்து வெள்ளத்தில் நடந்துவரும் சளசள சத்தம். 'யார் வருகிறார்கள்? ராகுலனா? அவன் தான் இல்லையே?'

வேறு யார்? நாய் துயரத்துடன் நடக்கின்றதோ?

சிவபுத்திரன் வந்து படிகளில் ஏறுகிறான்.

"அம்மா, மச்சான் மாணிக்கராசாவும் சிவபாலனும் கொழும்புக்கு வந்திட்டினமாம். ரெலிபோனில் பேசினன். எம்.ஓ.டி.கிளியறன்ஸ் நாளைக்குக் கிடைக்குமாம். ஐசிஆர்சி மூலம் அப்புவுக்கு கடுமையெண்டு அனுப்பிய செய்தி கிடைச்சதாம். வந்திடுவினம்."

துரையப்பருக்கு அவை கேட்கின்றன. முகத்தில் திடீரெனப் பிரகாசம் பரவுகிறது. 'எல்லாரும் வருகிறார்கள். என்னுடைய எல்லாப் பேரப்பிள்ளைகளும் நெய்ப்பந்தம் பிடிக்கப்போகிறார்கள். ராகுலா, நீ இருந்தால் தலைமாட்டில் நெய்ப்பந்தத்துடன் நிற்பாயே? தையல், நீ தான் எவருமில்லாமல் அனாதையாகச் செத்துப்போனாய். சுடலைக்குக் கூடத் தூக்கிச்செல்ல வக்கற்று பக்கத்துக் காணியில் போட்டு சிதை மூட்டினேன். பாரடி தையல், எனக்கு எல்லாரும் வருகினம்.'

அவருக்குத் தன்நிலை புரிகிறது. அவர் நிறை வாழ்வு வாழ்ந்து முடித்தவர். அவர் சாவதற்கு முன்னர் சில காரியங்கள் நடந்தாக வேண்டும். மழை ஏன் இப்படிப் பெய்கிறது?

அவர் நெஞ்சு சற்று ஏறியிறங்குகிறது.

உதடுகள் துடிக்கின்றன. வலக்கரத்தினை நகர்த்த முயல்கிறார். முடியவில்லை.

'நான் இப்பொழுது சாக மாட்டேன்.'

வானம் பிளவுபட்டது போல இடிஇடிக்கிறது. மின்னல் கிளை பரப்பித் தாவுகிறது. அக்கணத்தில் முற்றம் ஒளிபெறுகிறது. கண்களைக் கூசச்செய்யும் ஒளி.

ஏன் வெளியில் இயற்கை இப்படி அட்டகாசம் செய்கிறது?

'எழுந்த பெருஞ்சத்தத்திற்குக் காரணம் இடியா? அல்லது எங்காவது உயிர்களைக் காவு கொள்ளும் குண்டுகள் வெடித்தனவா? இந்த மண்ணில் கௌரவத்துடனும் சுதந்திரத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்கின்ற நிலை என் பிள்ளைகளுக்கு வரவேண்டும்.'

'அவர்கள் இந்த வாழ்வில் எவ்வளவற்றினை இழந்துவிட்டார்கள். கழிந்த கால இனிமைகள் திரும்பி வரப்போவதில்லை. எதிர்காலமாவது நம்பிக்கையுடன் மலர வேண்டும்.'

"அப்பு....அப்பு"

அவருக்கு அழைப்பொலி கேட்கின்றது. வார்த்தைகள் நெஞ்சுக் குழிக்குள் சிக்கித் தவிக்கின்றன. வெளியே மழை பொழிந்து கொண்டிருக்கின்றது.

## 1 புறாப் பிடிக்கும் வயது

இருள் இன்னமும் முற்றாக நீங்கிவிடவில்லை. கிழக்கு வானம் வெளுப்பதற்கு இன்னமும் இரண்டு மணி நேரமாவது இருக்கின்ற விடிசாமற் பொழுதின் அமைதியைக் கீறிக் குலைத்தபடி வானத்தில் சீறிக் கொண்டு எறிகணைகள் பாய்ந்து செல்கின்ற இரைச்சலும் அதனைத் தொடர்ந்து அவை எங்கோ விழுந்து வெடிக்கின்ற சத்தமும் எழுந்தபடி இருக்கின்றன. துப்பாக்கிச் சன்னங்கள் 'பட் பட் டுப்' என ஓயாது வெடித்தபடி இருக்கின்றன. காற்றில் மிதந்து வரும் யுத்த அரக்கனின் காவு கொள்ளும் ஒலி எனக்கு வெறுப்பைத் தருகின்றது.

பத்தாண்டுகளுக்கு மேலாக துப்பாக்கி வெடிச்சத்தத்துடன்தான் யாழ்ப்பாணம் விழித்துக் கொள்கின்றது. பனிக்குளிர் இருளினுடாக யுத்த அரக்கனின் குருதி தோய்ந்த கர அரவங்கள் எங்கும் துளாவித்திரிவதாக எனக்குப்படுகிறது. சந்தியில், வீதியில், ஒழுங்கையில், வீட்டில், இருளில், பகலில் எங்கும் மரணம் வரும் என்பதற்கு இந்த மண்ணில் நியதியில்லை. சுகம் விசாரித்துவிட்டுப் படலையைத் திறந்தபடி வீதியில் ஏறுபவன் கால்களை நகர்த்துவதற்கிடையில் எங்கிருந்தோ காற்றில் வரும் சன்னம் மார்பைத் துளைத்த சம்பவங்கள் நிறையவுள்ளன.

எங்கள் வாழ்க்கையின் கடந்த கால இனிமைகள் பற்றிய கவலைகள் எனக்கில்லை.ஆனால் வாழ்ந்து முடிக்காத நிகழ்காலத்தைப்பற்றியும் அதனால் சோக வடுக்களுடன் எதிர் கொள்ளப்படவிருக்கும் எதிர்காலத்தைப்பற்றியும் அடிக்கடி கவலைப் படுகிறேன். எமது பிள்ளைகள் எவ்வளவு இனிமைகளை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

வாங்கினை விட்டு எழுந்திருக்காது, முற்றத்து இருளை வெறித்துப் பார்த்தபடி அப்படியே படுத்திருக்கிறேன். முற்றத்தில் முடங்கிக் கிடந்த நாய் எழுந்து தன்னளவில் மெதுவாக உறுமி அழுதுவிட்டுப் படுத்துக்கொள்கிறது. அதற்கும் இச்சத்தங்கள் பழகிவிட்டன.

வெகுதூரத்தில் சேவல் ஒன்று கூவுவது சன்னமாகக் கேட்கிறது. அதனைத் தொடர்ந்து இன்னொன்று குரல் தந்தது. விடியற்பொழுதில் திக்கிற்கொன்றாகக் குரல் தரும் சேவல்களின் அமைதியைக் கீறும் சத்தம் எனக்கு மிகவும் பிடித்தமானது.

அதிகாலை விடியலின் இனிமையை அனுபவிக்காது என்னால் படுக்கையில் உறங்க முடிவதில்லை. விடியலுக்கு முன்னரே எழுந்து பழகிவிட்ட நான் தலைவாசலில் இடப்பட்டிருந்த ஈசிச்செயரில் சாய்ந்து கொள்கிறேன். குண்டுகள் வெடிக்கின்ற சத்தம் தொடர்ந்து விட்டுவிட்டுக் கேட்டபடி இருக்கிறது. எங்காவது சண்டை தொடங்கி விட்டதோ?

முற்றம் வெளுக்கத் தொடங்கியது.

அடுக்களைக்குள் மூத்தவள் யோகம் கேத்திலில் தண்ணீர் ஏந்தி அடுப்பில் வைத்து எரிமூட்டுவது தெரிகிறது.

"எந்தப் பக்கத்தில் சத்தம் கேட்குது, யோகம்?"

அவள் நிமிர்ந்து பார்த்தாள். குசினியின் நேர்க் கதவு, தலைவாசலில் ஈசிச்செயரில் சாய்ந்து அமர்ந்திருந்த என்னை அடையாளம் காட்டியது. வலக்கரத்தில் பற்றிப் பிடித்திருந்த சுருட்டுக் காங்யின் ஒளி வாயில் வைத்து இழுக்கும் போது முகத்தினைப் பிரகாசிக்க வைத்திருக்கும். எனக்கு எண்பத்திமூன்று வயதென்றால் யாராவது நம்புவினமே?

"பலாலிப் பக்கமாக்கும், ஐயா."

நான் சற்று மௌனமாக இருக்கிறேன். சத்தம் வரும் பக்கத்தை அனுமானிப்பது ஒன்றும் சிரமமில்லை. நிச்சயமாக எனக்கு எத்திக்கிலிருந்து குண்டுச்சத்தங்கள் வருகின்றனவென்பது தெரியும். ஊர் உலகம் அடிபட்டவன். நான் போகாத ஊரே இல்லை. இப்பொழுது ஓய்வூதியமும் பெரிய விதானையார் என்ற பட்டமும் எஞ்சியிருக்கின்றன.

"பலாலிப் பக்கமே, ஐயா?" என்று மீண்டும் யோகம் கேட்கிறாள்.

"சாய்...அப்படித் தெரியவில்லை.. சங்கானை, சண்டிலிப்பாய்ப் பக்கமாகத்தான் கேட்குது..." என்றேன் கவலையோடு. என் குரலில் கலந்திருந்த கவலைக்கான காரணம யோகத்திற்குத் தெரியாமலில்லை. அவள் நெஞ்சு ஒருகணம் திக்கிட்டிருக்கும்.

ஈசிச்செயரை விட்டு நான் எழுந்திருக்கிறேன்.

"பிள்ளை, நான் பிள்ளையார் கோயிலடிக்குப் போயிட்டு வாறன். தேத்தண்ணி ஊத்திவை. ஆச்சி எழும்பவில்லையே? கிழவிக்கு விடிய வெள்ளென எழும்பிப் பழக்கமில்லை."

"அம்மா கிழவியெண்டால் நீங்கள்...?" என்று யோகம் சிரிக்கிறாள்.

பிள்ளையார் கோயில் பக்கமாக நடக்கும் போது என் மனதில் யோகம் நிறைந்திருக்கிறாள். மூத்த மகள். எவ்வளவு பெருந்துயரத்தைத் தன்னுள் புதைத்துக்கொண்டு நடமாடுகிறாள்? நினைக்கும்போது நெஞ்சம் ஒருகணம் நின்றுவிடும் போல உணர்வு.

இரண்டு சம்பவங்கள் அவள் வாழ்வினைக் கருக்கிவிட்டன. எனக்குஅந்த நாள் நன்றாக நினைவிருக்கின்றது. யோகத்தையும் பிள்ளைகளையும் பார்ப்பதற்காக நான் கம்பர்மலைக்குச் சென்றிருந்தேன். அந்த நாள்...திகதி... நினைவு வருகின்றது.

24, மே மாதம் 1987.

இரவு. பி.பி.சி.வானொலி ஒலிபரப்பில் கொழும்பு நிருபர் ஜோன் ரெற்றி அனுப்பிய செய்தியை எல்லாரும் கேட்டுக்கொண்டிருந்தோம்.

"..இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது திடீர் தாக்குதல் ஒன்றிற்குத் தயாராகவுள்ளது. இத்தாக்குதல் யாழ்ப்பாணக்குடாநாட்டை அரசு தன்வசப்படுத்தும் ஓர் அதிரடி நடவடிக்கையாக அமையலாம். இன்று, நாளை என்று அறிவித்து, தமிழ்ப் போராளிகளிடையே குழப்பத்தை ஏற்படுத்தி, எதிர்பாராத விதமாகவே இத்தாக்குதலை மேற்கொள்ள அரச படைகள் திட்டமிட்டுள்ளதை அறிய முடிகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அனுப்பப்பட்ட அரச துருப்புக்கள் திடீர்த்தாக்குதலிற்குப் பூரண ஆயத்த நிலையில் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன...."

"பெரியதொரு சண்டை வரும் போல...?" என்று கவலையோடு யோகம் கேட்டாள். "இந்தக் குஞ்சு குருமான்களை வைத்துக்கொண்டு நாங்க என்ன செய்யப்போறமோ?"

"அப்படியொண்டும் வராது. கவலைப்படாதை..."என்று என்னால் ஆறுதல் கூற முடிந்தாலும் மனதிற்குள் நாட்டில் நித்தம் நடந்தேறிக் கொண்டிருக்கும் சம்பவங்கள் நிம்மதியாகப் பெருமூச்சினைக்கூட விடுவதற்கு அனுமதிக்கவில்லை. மரணங்கள் கூடக் கௌரவமாக நிகழாத பூமி இது. சிதறிப்போகும் உடல்களைக் கூட்டி அள்ளி மயானத்திற்குக் கொண்டு செல்லும் நிலைவரங்கள்.

"தம்பி, ரேடியோவை நிற்பாட்டு.." என்றபடி யோகம் எழுந்திருந்தாள். வானொலியை நிறுத்தியபோது வானத்தில் இரைச்சலுடன் வட்டமிடும் விமானம் ஒன்றின் சத்தம் கேட்டது. அச்சத்தத்திற்கு அனைவரினதும் உடல்களைச் சில்லிடவைத்து நடுங்க வைக்கும் சக்தியிருந்தது.

"பொம்பர்..." என்று யோகம் வீரிட்டாள். பொம்பரின் இரைச்சலில் படுத்திருந்த பிள்ளைகள் திடுக்கிட்டு எழுந்து ஓடிவந்து தாயுடன் ஒட்டிக் கொண்டன. பருந்தினைக் கண்ட கோழிக்குஞ்சுகள் போல அவர்களின் உடல்கள் நடுங்கின.

பொம்பர் குத்தியெழுந்து ஆர்ப்பாட்டம் செய்தது. வானம் கிழிபட்டுப் பூமி நடுங்கியது. "அப்பு அவங்கள் இந்தப்பக்கம்தான் வாறாங்கள்." என்று மூத்தபேரன் சிவபுத்திரன் கத்தினான்.



"எல்லோரும் பங்கருக்கு ஓடுங்கோ..." என்றபடி நான் முற்றத்தில் இறங்கினேன். என்னைத் தொடர்ந்து அவர்கள் எல்லாரும் முற்றத்திற்கு ஓடி வந்தார்கள். நல்ல நிலவு. முற்றம் பால்போலத் தெளிவாகத் தெரிந்தது. வானத்தில் விமானத்தின் இரைச்சல்.

"மணிவண்ணா, லதா ஓடுங்கோ... ஓடுங்கோ பங்கருக்கு..." என்றபடி அறைக்குள் படுத்திருந்த ராகுலனை எழுப்ப யோகம் ஓடினாள். மணிவண்ணனும் லதாவும் முற்றத்தில் இறங்கி பதுங்கு குழிக்குள் இறங்க ஓடாது, பதற்றப்பட்டு வீட்டிற்குப் பின்னால் ஓடிச் சுவருடன் பதுங்கிக் கொண்டனர்.

அதேவேளை பொம்பரிலிருந்து விடுபட்ட குண்டொன்று நாலைந்து வீடுகள் தள்ளிப் பாய்வதைக் கண்டேன். பொம்பரின் பதிவும் குண்டு வீச்சும் அப்பிரதேசம் எங்கும் பெரும் பயங்கரத்தை விளைவித்தன. விண்ணில் கிளம்பிய பொம்பர் மீண்டும் குத்தெனத் தாழப்பதிந்தது. அந்த வீடே ஒருகணம் நடுங்கியது. விமானம் குத்தி எழுந்தபோது பேரிரைச்சல் காதுச்சவ்வுகளை வெடிக்க வைக்குமாப் போல... நான் தலையை உயர்த்திப் பார்த்தபோது வீடிருந்தவிடத்தில் ஒரே புகை... தூசிப்படலம்....

"ஐயோ..."

"அம்மா, மணிவண்ணனும் லதாவும் எங்கே?" என்றான் ராகுலன் பதற்றத்துடன். பதுங்கு குழிக்குள் அவர்கள் இல்லையென்பது அப்பொழுது தான் அனைவருக்கும் தெரிந்தது.

"ஐயோ..." எனப் பெருங்குரலில் யோகம் கத்தினாள். "என்ர பிள்ளையள்... என்ர பிள்ளையள்..."

பிள்ளைகளின் உடற் பகுதிகள் கூடக் கிடைக்கவில்லை. மணிவண்ணன் அணிந்திருந்த காற்சட்டையின் ஓர் சிறுபகுதியும் லதாவின் வெள்ளிக் காற்சரம் ஒன்றும் தாம் அவர்கள் இல்லையென்பதற்குச் சாட்சியங்களாகின.

இன்று நினைத்தாலும் என் சர்வாங்கமும் நடுங்குகின்றது.

வீதியில் நடக்கும் போது நெஞ்சம் கலங்கி அழுகின்றது. இந்த யுத்தம் தொடங்கியதிலிருந்து இந்த மண்ணில் எத்தனை மணிவண்ணன்கள், லதாக்கள் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டார்கள்? யுத்த அரக்கனின் சர்ப்பக்கரங்கள் அப்பாவிகள் எத்தனை பேரினைத் தழுவி அழித்துவிட்டன? இந்தப் பூமி மானிடன் வாழ்வதற்காகத்தான் படைக்கப்பட்டதென்பதில் எனக்கு இரண்டு கருத்தில்லை. ஆனால் அரசியல் அயோக்கியர்களின் விசக்காற்றுப்பட்டு பூமியே கருகிவருகின்றது. பிள்ளையார் கோயில் பக்கமாக நடக்கும்போது என் மனவெளியில் யோகம் நிறைந்திருந்தாள். அவள் எவ்வளவு பெருந்துயரத்தைத் தன்னுள் புதைத்துக் கொண்டு நடமாடுகிறாள்?

பிள்ளையார்கோயில் கோபுரத்தில் புறாக்கள் சிறகடித்துத் தமக்குள் புறுபுறுத்துக்கொள்கின்றன. கோபுரத்துப் பொம்மைகளில் தாவித் தாவிப் பறந்தமர்கின்றன. கரங்கூப்பி வணங்கிவிட்டுத் தலையை உயர்த்திக் கோபுரத்தைப் பார்க்கும் போது ஐந்தடுக்குக் கோபுரமும் அதன் ஒரு பக்கத்தில் வளர்ந்திருக்கும் அரசமரத்துளிர்களும் தெரிகின்றன. அடிக்கடி கவனமாகக் கோபுரத்தில் ஏறி வளர்ந்திருக்கும் அரசமரச்செடியை பிடுங்கி எறிவார்கள். பயனில்லை. அவை கோபுர இடுக்கில் ஆழமாக வேரூன்றி விட்டதால் மீண்டும் துளிர்த்து விடுகின்றன.

கோயில் வெளி மண்டபத்தில் அமர்ந்துகொண்டேன். அதிகாலையின் பனிக்குளிரும் புறாக்களின் அகவல்களும் தூரத்தில் கேட்கும் வெடிச்சத்தங்களில் அமுங்கிப்போயின. கோயிலின் முன் வீதியில் ஓரிருவர் நடந்து செல்வது தெரிகின்றது. மங்கிய ஒளியில் அவர்களை என்னால் இனங்காண முடிந்தது. சாராயக்கடை வேலுப்பிள்ளையும் தரகியர் செல்லையாவும் பேசிக்கொண்டு செல்கிறார்கள். விடிந்ததும் விடியாததுமாக வேலுப்பிள்ளையருக்குக் கடையைத் திறந்துவிட வேண்டும். தேனீர்க்கடையென்று பெயர். தரகியர் செல்லையாவுக்கு விடிந்ததும் விடியாததுமாக 'தேனீர்' அருந்திவிட வேண்டும்.

நகரத்துக்கு ஒதுக்குப் புறமாகக் கடற்கரையை அண்டி அமைந்திருக்கும் கிராமம். வடக்கே கிறிஸ்தவர்களும் தெற்கே சைவக்காரரும் நான் அறியத்தக்கதாக ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். குடும்பங்கள் இயல்பாகப் பெருகிவிட்டதாலும் நகர்ப் புறத்தில் தொழில் பார்க்கும் தொழிலாளர்கள் இங்குவந்து குடியேறிவிட்டதாலும் கண்ணாப்பற்றைகளுடன் விரிந்துகிடந்த கடற்கரையோரம் குடிசைகளால் இன்று நிரம்பிவிட்டது. பெயருக்குக் கூடக் கண்ணாமரங்களைக் காணமுடியாதளவிற்கு சன நெருக்கம்.

கோயில் வாசலில் படுத்துக்கிடக்கும் மாடுகள் அசைபோடுகின்றன.

கோபுரத்தில் புறாக்கள் புறு புறுக்கின்ற சத்தம் எழுந்தது.

கோபுரத்தில் ஏறிப் புறாப்பிடிப்பதில் நான் வலு திறமைசாலி. அப்பொழுது எனக்குப் பன்னிரண்டு வயதிருக்

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தலில் அரசுக்குப் பெருவீழ்ச்சி: தமிழர் விவகாரத்தில் திசை மாறிச் செல்ல உந்துமா?

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக வகுக்கப்பட்ட நிர்வாக முறையே மாகாணசபை. ஆனால் தமிழர் பிரதேசமான வடக்கு- கிழக்கில் உள்ள மாகாணசபை இயங்கவில்லை. அதற்குத் தேர்தலும் இல்லை. அரசியல் நிர்வாகமும் இல்லை என்றாகிவிட்டது. மத்திய அரசாங்கம் - கொழும்பு அரசு - நினைத்தவாறு வடக்கு- கிழக்கு மாகாணசபை இயங்குகின்றது.

ஜனாதிபதியின் பிரதிநிதியாக ஆளுநர் செயற்படுகிறார். தாம் எவரது பிரதிநிதியும் அல்லர் என்ற தோரணையில் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் உயர் அதிகாரிகளில் பலரும் தமது விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப நிர்வாகம் நடத்துகிறார்கள். தனிக்காட்டு ராஜாக்களாக தர்பார் நடத்துகிறார்கள். நேரடியாக தட்டிக் கேட்க, உத்தரவு போட மக்கள் நலனில் அக்கறை உள்ள எவரும் இல்லை என்ற சுதந்திரத்தோடு அவர்கள் செயற்படுகிறார்கள்.

வடக்கு-கிழக்கில் தோல்வி அடைந்து போயுள்ள, செயலற்றுப் போயுள்ள மாகாண சபைத்திட்டம் தென்னிலங்கையில் - தேவையற்ற - ஒன்றாகச் செயற்பட்டு வருகிறது. ஒரு சிலருக்குப் பதவிகளும் வசதிகளும் தந்து பணத்தை விரயமாக்கும் ஓர் அமைப்பாகவே விளங்குகின்றது. உண்மையில் அது ஒரு வெள்ளை யானைதான்! யானை கட்டித் தீனி போடும் பெரும் கஷ்டத்தை மக்களுக்குக் கொடுத்துள்ளன மாகாண சபைகள். மக்களின் வரிப்பணம் பெரிய அளவில் வீணாகிறது. எதிர்பார்த்த அளவில் அதிகாரப் பரவலாக்கம் மக்கள் கைக்குப் போய்ச் சேரவில்லை. அபிவிருத்திகளும் அதன் வழி பெரிதாகத் தேறவில்லை.

### தேடி வந்த அதிர்ஷ்டம்

எப்படியோ கடந்த செவ்வாய்க்கிழமை ஐந்து மாகாண சபைகளுக்கும் நடைபெற்ற தேர்தல் நாட்டின் அரசியலில் சமிக்ஞை காட்டும் தேர்தலாக அமையும் எனக் கருதப்பட்டது உண்மையே. அதாவது 1994 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களின் பின்னர் - தென்னிலங்கையில் மக்களது அரசியல் நிலைப்பாட்டை - அவர்களின் ஆதரவு எந்தக் கட்சிக்கு அதிகம் உண்டு எனக் காட்டும் அளவு மானியாக - செவ்வாய்க்கிழமைத் தேர்தல் அமைந்தது.

இந்தத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டே அரசாங்கம் புதிய பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல்களை நடத்தும் காலத்தை நிர்ணயிக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. மொத்தத்தில் நாட்டின் கவனத்தைத் தன்பால் ஈர்க்கும் முக்கிய தேர்தல், குட்டித் தேர்தல் என்ற அதிர்ஷ்டம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை நாடி வந்தது எனலாம்.

### மக்கள் ஆதரவு ஆட்டம் காண்கின்றது

தேர்தலுக்கு அதிர்ஷ்டம் அடித்து அது முக்கியத்துவம் பெற்றதாயினும் அரசாங்கத்துக்கு பெரும் துரதிர்ஷ்டத்தைத் தேடிக் கொடுத்துவிட்டது. ஆளும் கட்சி, மக்கள் ஆதரவைப் பொறுத்த வரையில் ஆட்டம் காணும் நிலைக்கு வந்து விட்டதையே தேர்தல் பெறுபேறுகள் மிக வெளிச்சமாக எடுத்துக்காட்டுகின்றன.

ஐந்து மாகாண சபைகளிலும் தனிக்கட்சியாக, ஆளும் கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே முதலிடம் பெற்றிருக்கிறது. அதற்கே அதிக எண்ணிக்கையான ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன.

ஆனால் வட மத்திய மாகாணத்தில் மட்டுமே தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய பலத்தை அது பெற்றுள்ளது. ( மொத்தமுள்ள 32 ஆசனங்களில் 17 ஆசனங்கள் ஆளும் கட்சிக்குக் கிடைக்குள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் முறையே 12 ஆசனங்களும் 2 ஆசனங்களும் கிடைத்துள்ளன.)

### உள்ளும் புறமும்

குறுமுனி

ஏனைய நான்கு மாகாண சபைகளிலும் - மேல் மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் ஆகியவற்றில் - ஆளும் கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தாலும் ஆட்சி அமைக்கக் கூடிய அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை: தனிப்பலம் இல்லை. வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தே ஆட்சி அமைக்கலாம்.

தேர்தல் கணக்கைச் சற்று நோக்குவோமானால் ஐந்து மாகாணசபைகளிலும் மக்கள் அளித்த மொத்த வாக்குகள் 46 லட்சத்து 52 ஆயிரத்து 004 ஆகும். அவற்றில் 21 லட்சத்து 03 ஆயிரத்து 546 வாக்குகளே ஆளும் கட்சியான பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்துள்ளது. மொத்த வாக்குகளில் 45.2வீதமே அக்கட்சிக்குச் சேர்ந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஐந்து மாகாணங்களிலும் கிடைத்த மொத்த வாக்குகள் 19 லட்சத்து 79 ஆயிரத்து 546 ஆகும். 42.5 சதவீதமான வாக்காளர்கள் அக்கட்சியை ஆதரித்துள்ளனர்.

மூன்றாவது அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ள ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு மொத்தம் 2 லட்சத்து 48 ஆயிரத்து 799 வாக்குகள் கிடைத்துள்ளன. அதாவது 5.3 வீதமான வாக்காளர்கள் ஜனதா விமுக்தி பெரமுனையை ஆதரித்துள்ளனர்.

1994இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 48சத வீதமான வாக்குகளையும், ஜனாதிபதித் தேர்தலில் 62.8 சதவீத வாக்குகளையும் பெற்று ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்து மத்திய அரசைக் கைப்பற்றிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாலரை வருடத்தின் பின்னர் நடைபெற்ற குட்டித் தேர்தலில் 45சதவீத வாக்குகளைப் பெற்றிருப்பதும், மாகாண சபைகளில் தனியாக ஆட்சி அமைக்க முடியாமல் திண்டாடுவதும் பெரும் வீழ்ச்சியே. ஆளும் தரப்பாருக்கு மக்கள் ஆதரவு குன்றி விட்டது என்பதனையே செவ்வாய்க்கிழமைத் தேர்தல் மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

ஆளும் கட்சிக்கு அது எதிர்பார்த்தது போல் அல்லாமல் மக்கள் ஆதரவு குறைந்துள்ளது என்பதனைப் பின்வரும் முடிவுகளும் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவின் கம்பஹாத் தொகுதியில் பொதுத் தேர்தலின் போது 43,392 வாக்குகள் ஆளும் கட்சிக்குக் கிடைத்தன. ஆனால் இம்முறை அது 36,453 ஆக வீழ்ச்சி கண்டிருக்கிக்கிறது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மகநுவர (கண்டி) தொகுதியில் பொதுத் தேர்தலின் போது பொ.ஐ.முன்னணிக்கு 29,601 வாக்குகள் கிடைத்தன. ஆனால் இம்முறை கிடைத்த வாக்குகள் 7,988 மட்டுமே. அது மட்டுமன்றி அந்தக் கட்சி அங்கு தோல்வியும் அடைந்தது.

மேலும் ஆளும் கட்சியின் மூத்த அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சி.வி. குணரத்தனா ஆகியோரின் சொந்தத் தொகுதியில் ஆளும்கட்சி தோல்வி கண்டுள்ளது. இவ்வாறு பல வகைகளில் மக்கள் ஆதரவை இழந்துள்ள ஆளும் கட்சி தனது உத்தேச தேர்தல் அட்டவணைகளை மாற்றிக் கொள்ளும் என்று முழு அளவில் நம்பலாம் - எதிர்பார்க்கலாம்.

### அபாய அறிவிப்பு

மாகாணசபைத் தேர்தல் அரசுக்கு மக்கள் ஆதரவு உண்டு என்று சமிக்ஞை -"சிக்னல்" - காட்டுமானால் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களை உரிய காலத்துக்கு முந்தி இந்த வருடத்திலேயே நடத்துவதற்கு அரசு உத்தேசமாகத் திட்டமிட்டிருந்தது. ஆனால் செவ்வாய்க்கிழமைத் தேர்தல் அபாய அறிவிப்புச் செய்து விட்டதால் உரிய கிரமப் பிரகாரம் அடுத்த வருடம் பொதுத் தேர்தலையும் 2001 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலையும் நடத்த வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

அரசங்கத்தின் பலதுறை, பல் வகைச் செயற்பாடுகளிலும் மக்கள் வெறுப்புக் கொண்டுள்ளனர்: நம்பிக்கை இழந்துள்ளனர் என்பதனையே தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கின்றன. எனவே முதலில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னர் - சுமார் 15 மாதங்களில் - அரசாங்கம் சிங்கள மக்களின் மனங்களை வெல்வதற்கான செயற்பாடுகளில் துரிதமாகச் ஈடுபட வேண்டியிருக்கும். அதே வேளை தனது இன்றைய போக்கில் பல மாற்றங்களைக் கொண்டு வரவேண்டிய தேவையும் உண்டாகும்.

தமிழ் மக்களின் மனங்களை - குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் இதயங்களை - வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி அடிக்கடி வாயளவில் கூறி வந்தார். ஆனால் செயலளவில் அது எதிர் மறையாக அமைந்திருந்தது.

எதிர்வரும் பதினைந்து மாதங்களில் சிங்கள மக்களின் மனங்களைக் கவர்ந்திழுக்கக் கடினமாக உழைக்க நேர்ந்துள்ளது. அரசியல் என்பது வெறும் வாய்ப்பந்தல் அல்ல. மக்கள் விருப்பத்துக்கு ஏற்பச் செயற்பட்டு அதன் பயன்கள் அவர்கள் கைகளைச் சென்றடைவதைப் பார்த்துக் கொள்வதிலேயே அரசியில் வெற்றி தங்கியுள்ளது என்பதனை, தேர்தல் முடிவுகள் சந்திரிக்காவுக்குப் புகட்டியிருக்கும்!

ஜனாதிபதியினதும் அவரது தளபதியான அனுருத்த ரத்வத்தையினதும் தொகுதிகளிலும் ஏனைய மூத்த அமைச்சர்களினது தொகுதிகளிலும் கிடைத்த தோல்வி அரசுக்கு ஒன்றை உணர்த்தி இருக்கிறது என்று அர்த்தம் கொள்ளலாம்.

### கலையும் யுத்த கோஷம்

சமாதானத்துக்கான போர் என்ற அர்த்தமற்ற, ஏமாற்றுக் கோஷத்துடன், வடக்குக் கிழக்கில் நடத்தப்படும் போரைமுடிவுக்குக் கொண்டு வந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் - என்ற நிலைப்பாட்டையே ஜனாதிபதி உட்பட அரசாங்கத் தரப்பினர் மாகாணசபைத் தேர்தல் பேச்சுக்களின் போது முன்வைத்தனர்.

அந்த நிலைப்பாட்டை தென்னிலங்கை மக்கள் நிராகரித்துள்ளனர் எனத் தேர்தல் முடிவுகளுக்கு அர்த்தம் கொடுக்கலாம். தமிழ் மக்கள் மட்டுமன்றிச் சிங்கள மக்களும் போரினால் பலவற்றை இழந்துள்ளனர். நாடு சீரழிந்து போகின்றது. இனி அது வேண்டாம். - என்று சொல்வது போல அமைந்திருக்கிறது மாகாணசபைத் தேர்தல் பெறுபேறுகள்.

மாகாண சபைத் தேர்தலுக்கென, வாக்குச் சேர்க்கவென வன்னியில் அரசாங்கம் எழுப்பிய போர்கோஷம் பயனற்றதாகிவிட்டது. அத்தோடு யுத்த கோஷத்தை மட்டுமன்றி போரையே நிறுத்தி அழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதையும் சிங்கள மக்கள் அரசுக்கு எதிரான வாக்குகள் மூலம் இடித்துரைத்துள்ளனர்.

இதனைக் கருத்தில் கொள்ளாமல் தேர்தல் முடிவுகளுக்கு [illegible] வேறு வகை அர்த்தங்கள் கொடுத்து அரசு போரைத் தொடருமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

போரை மக்களில் பெரும்பாலானோர் வெறுக்கிறார்கள். போரினால் பணம் தேடும், நன்மை பெறும் மிகக் குறைந்த வீதத்தினரே அதனைத் தூண்டுகின்றார்கள் என்பதனை அரசு உணர வேண்டும். அரசியல் அட்டவணைகளை வைத்துக்கொண்டு அவற்றை போரினூடு நிறைவேற்றுவதால் வாக்கு நட்டமே அன்றி லாபம் கிடைக்காது என்பதனை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மூலமாவது புரிந்திருக்க வேண்டும்.

அவ்வாறு புரிந்து கொள்ள மறுத்தால் சந்திரிகா அரசியலில் மண் கௌவுவது தவிர்க்க முடியாததாகிவிடும். அவ்வாறு இன்றித் தவிர்ப்பாரானால் ஜே.ஆர். வழியில் தானும் பயணிக்க சந்திரிகா சிந்தை கொண்டுள்ளார் என்பதே கருத்து.

* * *



யாழ்ப்பாண நகரின் நடுவே உள்ள துரையப்பா விளையாட்டரங்கின் மேற்குப் பக்கமாக மலசலக் குழிக்கென நிலம் வெட்டப்பட்ட போது

## விளையாட்டரங்கு புதை குழியில் மேலும் பல எலும்புக் கூடுகள் வெளிப்படுமா?

மனித எலும்புத் துண்டுகளும் எச்சங்களும் காணப்பட்டது குறித்து இப்பத்தியில் கடந்த வாரம் எழுதியிருந்தோம்.

அதன் பின்னர் இந்த வாரத்தில் கடந்த புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் அகழ்வு வேலைகள் நடைபெற்றன. வெள்ளிக் கிளமை பிற்பகல் வரை மொத்தம் பதினேழு சடலங்களுக்குரியன என்று கருதப்படும் எலும்புகளும் எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

திகதிவாரியாக, வரிசைக்கிரமமாக புதைகுழி அகழ்வுப் பணியினைப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

துரையப்பா விளையாட்டு அரங்குக்கு மேற்குப் பக்கமாக மலசல கூடம் அமைக்கும் பொருட்டு குழி வெட்டும் பணிகள் தொடங்கப்பட்டிருந்தன. மார்ச் மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிமை குழியைத் தோண்டும் போது மாநகர சபைத் தொழிலாளர்கள் உடைந்திருந்த சிறிய எலும்புகளைக் கண்டனர். அவை அங்கே புதைக்கப்பட்ட மிருகங்களின் எச்சங்களாக இருக்கலாம் என ஊகித்து அவர்கள் அதனை பொருப்படுத்தவில்லை.

இந்தத் தகவல் உதயன் - சஞ்சீவி ஆசிரியர் பீட பிரதிநி ஒருவருக்குக் கிடைத்து. கண்டெடுக்கப்பட்டவை மிருகங்களின் எலும்புகள்தானா அல்லது மனித மர்மம் ஏதாவது அடங்கியிருக்குமோ என்ற சந்தேகத்துடன் அவர் அடுத்த நாள் காலையிலேயே (26ஆம் திகதி) குழி தோண்டும் இடத்துக்குச் சென்றார். தொடர்ந்து குழியைத் தொழிலாளர்கள் வெட்டியபோது கிடைத்தவை மனித எலும்புகள் என்பது ஓரளவு நிச்சயமாகின. மண்டைஓடு ஒன்று வெளியே எடுக்கப்பட்ட போது மலசல கூடக் குழி மனிதப் புதைகுழி என்பது ஊர்ஜிதமாயிற்று. செய்தி பரவியதும் பொது சனங்களும் பத்திரிகையாளர்களும் பெரும் எண்ணிக்கையில் அங்கு திரண்டு சென்று பார்த்தனர்.

இதனைத் தொடர்ந்து மலசல கூடக் குழியை வெட்டும் வேலைகள் அன்று முற்பகலோடு நிறுத்தப்பட்டன.

அடுத்தநாள் 27ஆம் திகதி யாழ்.மேலதிக நீதிவான் புதைகுழி அமைந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

நீதிவானின் பணிப்பின்பேரில் குழியிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புகள் மற்றும் மனித எச்சங்கள் மூன்று பெட்டிகளில் பொதிசெய்யப்பட்டன. அவை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பப்படுவதற்காக வைக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 6ஆம் திகதி மீண்டும் புதைகுழிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்த நீதிவானும் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீ ராஜேஸ்வரனும் குறிப்பிட்ட குழியைத் தொடர்ந்தும் தோண்டுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்வித்தனர்.

### மீண்டும் அகழ்வு

செவ்வாய்க் கிழமை இரவு யாழ்.நகரில் கனத்த மழைபெய்ததால் அடுத்த நாள் புதன்கிழமை காலை புதைகுழி தோண்டப்படுமா என்று சந்தேக நிலை தோன்றியது. எனினும் மப்பு மந்தாரத்திற்கு மத்தியில் அன்று காலை எட்டு மணிக்கு துரையப்பா விளையாட்டரங்குப் புதைகுழி தோண்டப்பட்டது.

மலசலகூடக்குழி 10 அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்டதாக இருந்தது. அந்தக் குழியிலிருந்து தெற்குப் பக்கமாக 6 அடி நீளத்திற்கும் மேற்குப் பக்கமாக 3 அடி நீளத்திற்கும் 2 அல்லது 3 அடி ஆழத்திற்கும் குழி (விஸ்தரித்து) அகழப்பட்டது.

புதன்கிழமை காலை எட்டு மணி தொடக்கம் 12.30 மணிவரையும், பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.30 மணிவரையும் அகழ்வு வேலைகள் நடைபெற்றன. காலையில் அகழத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே முழு மனித எலும்புக்கூடு ஒன்று உள்ளே காணப்பட்டது. (அதனையே இங்குள்ள படத்தில் காண்கின்றீர்கள்.)

இந்த எலும்புக்கூடு ஒரு பெண்ணினுடையதாக இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. அன்று மொத்தம் மூன்று சடலங்களின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. மேலும் மூன்று சடலங்களுக்கு உரியவை என்று கருதப்படும் எலும்புகளும் ஏனைய எச்சங்களும் காணப்பட்டன.

அடுத்தநாள் (8ஆம் திகதி) வியாழக் கிழமையும் அகழ்வுப் பணிகள் காலை, பிற்பகல் என்று இரு தடவைகள் மேற்கொள்ளப்பட்டன. அன்று நண்பகல் வரை 2 தாடை எலும்புகளும், 2 மண்டை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. பிற்பகலில் இரண்டு மண்டைஓடுகளும் அவற்றுக்குரிய எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டன. இந்த மண்டை ஓடுகளில் ஒன்று 12 முதல் 14 வயதுக்கிடைப்பட்டவரினுடையதாக இருக்கும் என நம்பப்படுகின்றது. அகழ்வு வேலைகள் நேற்றுவரை தொடர்ந்தன. இன்றும் நாளையும் விடுமுறை தினங்கள். மீண்டும் அகழ்வுப்பணி திங்களன்று தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக்கூடு, மண்டை ஓடுகள், எலும்புகள், ஏனைய எச்சங்கள் பொலித்தீன் சாக்குகளில் பொதி செய்யப்பட்டு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவிருந்தன. இவ்வாறு கொண்டு செல்லும்போது அவை நொறுங்கிப் பொடியாகக் கூடிய சாதகம் உண்டெனக் கருதப்படுகிறது.

இந்த அகழ்வுப் பணிக்கு உதவ மண்ணியல் நிபுணர்களை கொழும்பிலிருந்து அழைத்து வருவது குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

இந்த அகழ்வு வேலையின் போது ஐக்கிய நாடுகள்சபை போன்ற சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளை கலந்துகொள்ளச் செய்தால் நல்லது என்ற அபிப்பிராயம் நிலவுகிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகப் பிரதிநிதிகள் அகழ்வு வேலைகளின்போது உடனிருப்பது குறிப்பிடத்தக்கது.

பரிசோதனைகள் மூலம் கொலைகள் எந்தக் காலப்பகுதியில் நடைபெற்றன என்பதனை நிர்ணயிக்க முடிந்தாலும், குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிப்பது கடினமானதாகவே இருக்கும்.

### வாக்கு நோக்கு

| கட்சி | கிடைத்தவாக்குகள் | வீதம் |
|---|---|---|
| பொ.ஐ.மு. | 21,03,546 | 45.2 |
| ஐ.தே.க. | 19,79,547 | 42.5 |
| ஜே.வி.பி | 2,48,799 | 5.3 |
| தொ.தே.ச. | 1,45.350 | 3.1 |
| ம.ஐ.மு. | 79,465 | 1.7 |
| பு.இ.மு. | 38,005 | 0.8 |
| ம.ம.மு. | 25,369 | 0.5 |
| ஸ்ரீ.மு.கா. | 7,230 | 0.1 |
| சுயேச்சை | 4,555 | - |
| சுயேச்சை 1 | 0563 | - |
| சுயேச்சை 11 | 2,304 | - |
| சுயேச்சை 111 | 238 | - |
| ஸ்ரீ.மு.முன்னணி | 2,435 | - |
| லிபரல் | 3,663 | - |
| பூமிபுத்திர | 1,141 | - |
| மு.ஐ.வி.மு. | - 7,799 | - |

ஐந்து மாகாணங்களிலும் பதிவு செய்யப்பட்ட வாக்குகள்- - 71,27,457

அளிக்கப்பட்ட வாக்குகள் 50,00,139

வாக்களிப்பு வீதம் 70.1%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

நன்றி மறந்த மனிதர்களே! உதவி பெறும் போது பரம இரகசியமாய் பெற்றுவிடுவீர்கள். காதோடு காது வைத்து கதைத்துப் பேசிவிடுகிறீர்கள். விடயம் வெளியே கசியவிடமாட்டீர்கள்.

நன்றியைப் பறைசாற்றித் திரியமாட்டீர்கள். பிணக்கு பெருக்கும்போதுதான் கடன்பட்டது ஊருக்குத் தெரியவரும். அதுவும்கூட கடன் கொடுத்தவர் வாதம் கோட்டுக்குப் போய் அடிபட்டும் போய்விடும்.

அதே நன்றி செய்தவர் ஒரு துரும்பளவு கொடுமை புரிந்திட்டால் - அல்லது சற்றுப் பிடிக்காத வகைத்து ஏறுமாறாக நடந்து விட்டால் - ஊரையே கூட்டி ஓலமிடுவீர்கள். இந்த ரகம்தான் நீங்கள் என்றால் சற்றுப் பின்வாங்கி விடுங்கள். சிந்தித்து உங்களை மாற்ற முயலுங்கள்.

நன்மை தீமை நிரம்பிய உலகமிது. நன்மை பெற்று நலமாய் வாழும் போது - உள்ளுணர்வு நன்றி செலுத்திக்கொண்டே இருக்கும்போது - ஒரு தீமை செய்தார் என்றால் - பிடித்தம் இல்லாத வகைத்து நடந்து கொண்டார் என்றால் - அதைப் பொருட்டாக எடுப்பது பண்பாகாது.

முன் செய்த நன்றி இத்தீமையைக் கொன்றுவிடும்: கெடுத்துவிடும். செய்தநன்றி மிகச் சிறிதாகக்கூட இருக்கலாம். இப்போது கொல்வது போல (கொன்றன்ன) பாரிய கொடுமையை அவர் புரிய முனையலாம்.

எனினும் இக் கொடுமை - இன்னா செய்தல் - பழைய நன்றியை நினைக்க(உள்ள) கெட்டுப்போம் - செயலற்றுப்போம். நினைவில் நிலைக்காமற் போய்விடும்.

*கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த*
*ஒன்றுநன் றுள்ளக் கெடும்.* - 0109

- செய்ந்நன்றியறிதல் -

- அம்பிகைபாகன்

## போரே நீ போ....!

(XIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும். என் வயதொத்த ஐந்தாறு சிறுவர்களுடன் நான் அந்தக் கிராமத்தில் செய்யாத திருக்கூத்துக்கள் இல்லை. சொக்கர் கனகசபை வீட்டில் மாங்காய் பிடுங்குவது, பிராந்துக் கிழவியின் வளவில் 'விளாத்திக்குக் கல்லெறிந்து விளாங்காய்களை விழுத்துவது எல்லாவற்றிற்கும் நானே தலைமை வகிப்பேன். விதானையார் ஐயம்பிள்ளையின் மகன் என்ற பாதுகாப்பு எனக்கு அக்கிராமத்திலிருந்தது. கையும் களவுமாகப் பிடிபட்டாலும், "உது விதானையாற்ற பொடி" என்று விட்டுவிடுவார்கள். பிடுங்கிய கனிகளையும் கையில்கொடுத்து அனுப்பி விடுவார்கள்.

ஒரு முறை என் தந்தையாரிடம் சிக்கிக்கொள்ள நேர்ந்தது.

புறாக்களைப் பிடிப்பதற்காக நான் பிள்ளையார் கோயில் கோபுரத்தின் மீது ஏறிக்கொண்டிருக்கும் போது, அப்பு கோயிலிற்கு வந்துவிட்டார். கீழே நின்றிருந்த தோழர்கள் திக்கிற்கொருவராகச் சிதறி ஓடி விட்டனர்.

"டேய், மயிலு, கந்தா...குஞ்சு பொரிச்சு இருக்குடா..." என்றேன் நான் கோபுரத்தில் நின்றபடி. குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்த அப்பு திகைத்து நின்று விட்டார். கோபுரத்தில் கால் பதித்து ஏறி எத்தகைய அபச்சாரத்தை மகன் செய்துவிட்டான்?

கோயில் குருக்கள் சாம்பசிவம் வெளியில் வந்தார்.

"சொல்கிறனெண்டு குறை நினைக்கவேண்டாம், விதானையார். உங்கட மோன் இப்படித்தான். எவ்வளவு சொல்லியும் கேட்கிறானில்லை. கும்பாவிசேஷம் செய்யப்பட்ட கோபுரம். இப்படி ஏறி அபச்சாரம் செய்யலாமோ? ஓணான் மாதிரி தாவிவிடுகிறான்."

அப்புவின் விழிகள் சிவந்தன. வரும் வழியில் இரண்டு பிலாப் பனங்கள்ளும் அருந்தியிருந்தார். கண் முன்னால் மகன் கோபுரத்தில் ஏறி நிற்கிறான். குருக்கள் மகனின் செயலைக் கண்டித்து முறைப்பாடு செய்கிறார்.

"டேய்...துரை..." என்று பெருங்குரலில் அதட்டி அழைத்தார்.

அவரின் குரல் கோபுரத்தில் நின்றிருந்த என் காதுகளில் விழுந்த போது வெலவெலத்துப் போனேன். பற்றிப் பிடித்த கரங்கள் பிடி கழன்று விடுவன போல.. கால்கள் நடுங்கின. கீழே பார்த்தபோது அப்புவும் குருக்களும் நிற்பது தெரிந்தது.

"அப்பு...."என்று பயத்துடன் அழைக்கத்தான் முடிந்தது.

"ஏன்ரா...ஏறினனி?"

உண்மை சொன்னால் என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியும். விதானையார் என்ற உத்தியோக ரீதியாகக் கைது செய்து வருபவர்களை வீட்டு முற்றத்துச் சீமைக்கிளுவை மரத்துடன் அப்பு கட்டிப் போட்டுவிடுவார். ஒரு நாள் முழுவதும் அன்னம், தண்ணீர் இன்றி கட்டுப்பட்டுக் கிடந்தவர்கள் என் நினைவுக்கு வந்தார்கள்.

அந்தக்கால விதானைமாரின் அதிகாரம் மிகப்பரந்தது. பொலீஸ், நீதிபதி ஆகியோரின் கடமைகளும் அவர்களுக்கு வெள்ளைக்காரனால் வழங்கப்பட்டிருந்தன. ஒருதடவை கிளுவை மரத்துடன் கட்டிப்போட்டிருந்த ஒருவனுக்கு முதுகு கிழிந்து குருதி கொப்பளிக்கத்தக்கதாக துவரம் கம்பால் அடித்தும் இருக்கிறார்.

"ஏன் ஆச்சி...அப்பு இப்படிச்செய்கிறார்?"

"அவன் கூடாதவன். ஒரு சின்னப் பிள்ளையைக் கெடுத்துப்போட்டான்." என்று ஆச்சி மெதுவாகக் கூறினாள்.

"அப்ப அவருக்கு வேணுந்தான்..."

நான் என் குடும்பத்தில் நான்காவது பிள்ளை. மூத்தவர் மூன்றும் அக்காமார். கடுஞ் செல்லமாக வளர்த்து விட்டனர். வீட்டில் அப்புவோ ஆச்சியோ ஒரு சிறு கம்பெடுத்து உறுக்குவதையே அக்காமார் விரும்பமாட்டார்கள். வந்து தடுத்து விடுவார்கள். இப்பொழுது நான் அகப்பட்டிருப்பது வீட்டில் அல்ல. பிள்ளையர் கோயில் கோபுரம். அதுவும் கையும் மெய்யுமாக.....

"பிள்ளையாரே...என்னைக் காப்பாற்று. இனி ஒருக்காலும் கோபுரத்தில் ஏறவும் மாட்டன். புறாப்பிடிக்கவும் மாட்டன்." என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டேன்.

"இறங்கடா..."

காற்றில் அசைந்த கோபுரத்து அரச மரத்துளிர் என் கண்களிற்பட்டது.

"அப்பு...நான் அந்த அரசங் கொப்பைப் பிடுங்கி விடத்தான் ஏறினனான். கோபுரம் பழுதாப் போகும்... வெடிச்சுப் பொகும்."

அப்பு கவலையோடு குருக்களைப் பார்த்தார்.

அரசங்கிளைகளை வேரோடு இழுத்து அறுத்துக் கீழே எறிந்து விட்டு இறங்கி வந்தேன். வந்து தகப்பன் முன் தலைகுனிந்தபடி நின்றேன்.

"பொடியனை ஒண்டும் செய்யாதீங்கோ..." என்றார் குருக்கள்.

"...ம்..."என்றபடி என்னைக் கரத்தில் பிடித்தபடி வீட்டிற்கு இழுத்து வந்தார். வரும்வழியில் கிளுவை மரமும் கைகளைக் கட்டும் வடக்கயிறும் நினைவில் வந்து பயமுறுத்தின. கூரையில் செருகியிருக்கும் துவரங்கம்பும் நினைவுக்கு வந்தது. சுந்தரம் வண்டில் மாடுகளுக்குத் துவரங் கம்பால் ஓங்கி அடிக்கும் போது அவை முதுகை வளைத்துத் துடிப்பதும் நினைவு வந்தது.

"அப்பு இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன்.." என் விழிகள் கலங்கின.

அப்புவின் கரப்பற்றுதல் நழுவியது. என்னைத் திரும்பிப் பார்த்தார். "இஞ்சை பாரடா, துரை...நாளைக்கு எனக்குப் பிறகு இந்தக் கிராமத்தில விதானையாக வரப்போறவன் நீ. மறந்திடாதை. இப்படி நட்டாமுட்டித்தனமாக நடந்தால் ஊராக்கள் உனக்கு கட்டுப்படமாட்டார்கள். நீ சொல்கிறவற்றைக் கேட்டு நடக்க மாட்டார்கள். மற்றவைக்கு நாம் முன் மாதிரியாக இருக்க வேண்டும்.இனிக் கோபுரத்தில ஏறினதாகக் கேள்விப்பட்டன் மகன் என்றும் பார்க்கமாட்டன். போடா..போய்ச் சாப்பிடு...."

படலையைத் திறந்து கொண்டு வீட்டிற்குள் ஓடிப்போனேன்.

பிள்ளையார் கோயில் கோபுரத்தில் புறாக்கள் இன்றும் அகவுகின்றன. ஏறிப்பிடிக்கத்தான் இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குத் துணிவில்லை. துணிவில்லையா? 'இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு துணிவில்லையா?'

புறாப் பிடிக்க வேண்டிய வயதில் துப்பாக்கி ஏந்தி எல்லைப்புறங்களில் காவல் நிற்கின்ற சிறுவர்கள் மனதில் தெரிகின்றனர். அவர்களில் ஒருவனாக என்பேரன் ராகுலன் தெரிகிறான்.

ராகுலனுக்குப் பதினெட்டு வயதிருக்குமா?

தூரத்தில் மீண்டும் குண்டுகள் வெடிக்கும் சத்தம். இருந்தாற்போல மண்டைதீவுப் பக்கமிருந்தும் துப்பாக்கிச் சன்னங்கள் 'டப் டப் டுப் டுப்' எனச் சில கணங்கள் இடைவிடாது சடசடத்தன. யாராவது மீன் பிடிக்கக் கடலுக்குள் இறங்கியிருப்பார்களோ? அல்லது வலிகாமம் மேற்கில் நடக்கும் சண்டையின் எதிரொலியோ?

ராகுலன் ஏன் அவர்கள் எல்லோரையும் தவிக்க விட்டு விட்டு இயக்கத்திற்கு ஓடிப்போனான்?

மனதில் ஏராளமான காரணங்கள் தொடர்ச்சியாகக் காட்சிப்படுகின்றன. கண்களின் முன்னால் அவமாகச் சரிந்து விழுகின்ற சடலங்கள், நித்தம் சந்திக்கின்ற அவமானங்கள், அவலங்கள் எல்லாம் இளம் சந்ததியின் இதயங்களில் மாறாத வடுக்களைத் தோற்றுவித்துவிட்டன. மனங்களில் வன்மத்தின் திரட்சி சூல் கொண்டு விட்டது.

என் மனம் அசைபோடுகின்றது.

(தொடரும்)

## இன்பம் இனிக்கும் இடம் நான்கு

மனிதன் இன்பத்தைத் தேடி எங்கெங்கோ அலைகின்றான். அந்த இன்பம் எளிதில் கிடைத்துவிடுவதில்லை. இன்பத்தைச் சிற்றின்பம், பேரின்பம் என்றெல்லாம் பகுத்துக் காட்டுகின்றார்கள். ஒருவனும் ஒருத்தியும் கூடி அறத்திறம் அகலாது வாழும் வாழ்க்கையைச் சிற்றின்பம் என்கிறார்கள். அவ்வாழ்க்கை அவர்களைப் பேரின்ப வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் என்றும் கூறுகிறார்கள். சரி, சரி.

தேன்கூடு

எங்கள் புலவர் விளம்பி நாகனார் நண்பர்கள் இடையே இருந்து - அதாவது, சிரிப்பதற்காகவன்றி, வேண்டாத செய்கை உளதாய வழி முற்பட்டு இடித்துரைக்கும் பொருட்டு நண்பு பூண்டார்களின், இடையில் இருந்து முகமலர்ந்து பேசி மகிழும் போது இன்பம் உண்டாகும் என்கிறார்.

எல்லோரும் முயன்று அரும்பொருளை ஈட்டுகின்றோமே - ஈட்டிய பொருளின் அளவைக் காண்கின்றோமே - அப்பொழுதெல்லாம் இன்பமில்லையாம். மற்று அதனை ஏழைகளுக்கு அளிக்கின்றோமே அப்போது உண்டாகும் இன்பந்தான் உண்மை இன்பமென்கிறார், பொய்யா மொழியார். 'உலகோர் அறியார் கொல்; என்று வினவுகின்றார். வறியார் உவப்பத்தானும் உவக்க வேண்டுமாம்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

மேலும் வகை உடைய பெண், அதாவது நினைவு, சொல், செயல் நல்லனவாக அமைந்த பெண் கணவனை, உண்டி முதலியன கொடுத்து அவன் கருத்தறிந்து அதன்வழி நிற்றல் இன்பம் பயக்கும் என்கிறார்.

மேலும், ஒரு பாடலைப் பொருளறிந்து பாடும்வழி இன்பம் உண்டாம் என்கின்றார். இனி பாடலைப் படிப்போம்.

நகைஇனிது நட்டார் நடுவண் பொருளிர்
தொகைஇனிது தொட்டுவழங்கின் - வகையுடைப்
பெண்இனிது பேணி வழிபடின், பண்ணினிது
பாடல் உணர்வார் அகத்து.

நல்ல நண்பருடன் பழகியும், இரப்போர்க் கிரந்தும், மாண்புடை மனைவியைப் பெற்றும் பொருளறிந்து பாடியும் இன்பம் காண்மின்.

(தொடரும்)

-சிகண்டியார்-


## விடை

IX ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் 'மறைந்திருக்கும் பறவை' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள புதிருக்கான விடை இதுதான்.



## சொற்சிலம்பம்

### புதிர்ப் போட்டி இல.97




**சொற்சிலம்பம் இல 97**
சஞ்சீவி,
361,கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................................
விலாசம்: ..................................................
..................................................

......................இங்கே வெட்டுக......................

முடிவு திகதி: 16-04-1999

### இடமிருந்து வலம்

1. பந்தோபஸ்து அளித்தல். 6. அரசியலைக் குழப்புவது இது. 7. சிங்கம் கடைசி இரண்டும் இழந்தது. 8. ஒரு திசையின் சுருக்கம். 9. விடுதலை. 11. தான் செய்த பாவ - புண்ணியம். 13. பாத்திரத்தை இப்படியும் அழைப்பர். 14. மரக்கலம். 15. பத்து நாள். 17. மந்தி. 19. சித்திரம். 20. மகவு. 21. தலை. 22. எந்நேரமும்.

### மேலிருந்து கீழ்

1. பதினெண் புராணங்களுள் ஒன்று. 2. கேடு செய்பவன். 3. பாவம் தொலைக்கும் திருத்தலம். 4. தாவரப் பகுதி. 5. ஓர் இசைக்கருவி. 7. இராணுவத்தில் அனேகமானோர். 9. செய்த பாவம். 10. விட்டு விடலாமா என்று கேட்பது இப்படி. 12. வேளாண்மை. 14. நாங்கள். 15. விலத்தி. 16. ஆங்கிலத்தில் வரும்படி அழைத்தல். 18. பயனாகக் கிடைப்பது. 19. இலவசமாகக் கிடைப்பதை இப்படிக் கூறுவர். 20. தந்தை.

**சொற்சிலம்பம் 95இன் விடைகள்**

### இடமிருந்து வலம்

1. சுகப்பிரசவம். 7. பாண். 8. ரவிக்கை. 9. வடிவம். 12. சமதளம். 13. சாமான். 15. அறுகு. 16. மதியூகி. 18. தரகு. 20. கல். 21 காதல் கடிதம்.

### மேலிருந்து கீழ்

1. சுபாவம். 2. கண்டி. 3. பிரம்மன். 4. ரவி. 5. சக்களத்தி. 6. வகை. 10. வசமாகுதல். 13. சாறு. 14. துகில். 15. அக்கா. 16 மகுடி. 17. யூகம். 19. ரக.

பலநூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

முதற்பரிசு: சி.பானுராஜா, நெல்லியடி ம.ம.வி, கரவெட்டி.

இரண்டாம்பரிசு: சி.காண்டீபன், சேச் லேன், தாவடி தெற்கு, கொக்குவில்.

மூன்றாம்பரிசு: திருமதி இ.சாம்பசிவம், எஸ்.எல்.கே.மாளிகை, சங்கானை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடிதஉறையில் இடதுபக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன். நேரில்வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | | |
|---|---|---|
| முதற் | பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் | பரிசு. | ரூபா 100.00 |
| மூன்றாம் | பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 96 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் அதிகம் இழிவுபடுத்தப்படுவது 'ராகிங்'கின் போதா? வித்துவான் பதிலிலா?

## உங்கள் உள்ளத்திலிருந்து

20-03-99 சஞ்சீவியில் உங்கள் உள்ளத்திலிருந்து பகுதியில் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 'இவன்' என்பவர் இலட்சியப் போராட்டம், நாம் வித்துவானிடம் எதிர்பார்க்கும் பதில்கள் என்பவற்றை ஒப்பீடு செய்து என்னையும் சகோதரி கார்த்திகாவையும் சாடி இருந்தார்.

வாசகரே! உங்கள் பல்கலைக்கழகத்தில் நடக்கும் கொடிய பகிடிவதையையும், இலட்சியப் போராட்டத்தையும் ஒப்பீடு செய்வது உமது முதல் கடமை. உமது நண்பர்கள் பகிடிவதையில் ஈடுபடும்போது அதனைத் துணிச்சலுடன் நீர் தட்டிக் கேட்டீரா என்பது பற்றி சிந்தியும். அல்லது நீரும் பகிடிவதை செய்தீரா என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

இன்றைய போராட்டம் முக்கியமானதுதான். அதற்காக எம்மை புன்னகை சிந்த வேண்டாம் என்கிறீரா? வித்துவான் பதிலால் எமது கலாச்சாரம் சீரழியப்போவதில்லை. உள்ளதை உள்ளவாறே எழுதுகிறார் வித்துவான். அவரின் பதிலை இரட்டை அர்த்தம் என்று சொல்லுகின்றீர். ஏன் வாசகரே நீங்கள் இரண்டு அர்த்தத்தில் அதனை நோக்குவதால்தானே!

நீங்கள் உங்களை கெடுத்துக்கொண்டு வித்துவானிலும் பழியைப் போடுகின்றீர்கள். அவர் கூறும் பதிலை மட்டும் எடுங்களேன். ஏன் மற்றைய அர்த்தத்தை யோசிக்கின்றீர்கள்? உங்கள் மனதில் உள்ள தீய எண்ணங்களை வைத்துக்கொண்டு, வித்துவானின் பதிலுக்கு ஒப்பீடு செய்து எழுதுகின்றீர்கள்.

உங்கள் பல்கலைக்கழகத்தில் பெண்களை இழிவுபடுத்துவதை விடவா வித்துவான் இழிவுபடுத்துகின்றார்? பெண்கள் தமது பெற்ற தாய்க்கும் சொல்லமுடியாத அந்தரங்க இரகசியங்களை பல ஆண்கள் முன்னிலையில் கூறும்படி வற்புறுத்தி அதனை கேட்டு நீங்கள் புன்னகை சிந்துவதைவிட நாம் வித்துவானின் பதிலால் புன்னகை சிந்துவது நாகரீகம்.

'உன்னை முதலில் திருத்து. சமூகம் தானாகவே திருந்தும்.'

நீங்கள் எவ்வளவு தூரத்திற்கு நல்லவர்கள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

போராட்டம் நடக்கின்றது என்பதற்காக நாம் இருட்டு அறைக்குள் இருப்போமேயானால் நாளை எமது சந்ததி இருண்டதாகவே ஆகிவிடும் என்பதை ஒருவரும் மறக்க வேண்டாம். இப்படித்தான் வாழவேண்டும் என்று மக்களின் சுதந்திர உணர்வுக்கு எல்லை போட்டால் அந்த எல்லையைப் போட்டவர்கள் மக்களால் ஒதுக்கப்படுவது, ஒதுக்கப்பட்டது வரலாற்று உண்மை. நாம் எதிர்பார்க்கும் வித்துவானின் பதிலையும் போராட்டத்தையும் ஒப்பீடு செய்வது நல்லதல்ல.

*நல்லூர்.* *யே.என்.ஆனந்த்.*

### தவறுகளை நியாயப் படுத்தாதீர்!

'தாகத்தாற் பாடுகிறேன்' என்னும் தலைப்புடன் சஞ்சீவியில் வெளிவந்த கவிதை குறித்து மீருசுவில் வாசகர் ஒருவர் வரைந்த கண்டன மடலுக்கு ஆசிரியர் அடிக்குறிப்பு வரைந்துள்ளமை கண்டு அதிசயித்தேன்: ஆத்திரமும் கூட அடைந்தேன்.

ஏனையா அந்த மாபெருந் தவறை நியாயப்படுத்த முனைந்தீர்கள்? தங்கள் அடிக்குறிப்பு சஞ்சீவியை எங்கே கொண்டுபோய் விடப் போகின்றதோ என எண்ண வேதனையாக இருக்கின்றது. இனிமேல் பிரபல கவிஞர்களுடைய கவிதைகளையெல்லாம் நகலெடுத்து - அவற்றின் பின்னடிகளை மாற்றி - அறிந்து, தெரிந்து, கண்டு, கேட்டு என்ற பாதுகாப்பு அடைமொழிகளிட்டுக் கவிதைகள் வரப்போகின்றன. அவற்றையெல்லாம் பிரசுரித்து சஞ்சீவியை தரந் தாழ்த்தப் போகிறீர்களா?

'சோற்றுக் கலைகின்ற நாயைப் பிடித்ததைச் சொர்க்கத்தில் வைத்தாலும்' என்ற முதற் பாடலோடு பிரச்சினைக்கு முடிவு கட்டி விட்டீர்கள். ஆனால் அதிலுள்ள அத்தனை கவிதைகளுமே (பின்னிரு அடிகளைத் தவிர) கண்ணதாசனின் கவிதைகளே!

நண்பர்கள் காலை வாரிவிட்ட சோகத்தில், விரக்தி நிலையில் கண்ணதாசன் எழுதிய அந்தக் கவிதை - இன்றைய இளந்தலைமுறைக்கு வழிகாட்டக்கூடிய ஒன்று. முடிவுக் கவிதையில்தான் கவிஞனின் இலக்கே கிடக்கிறது. தலையை விட்டுவிட்டு - வாலைமட்டும் பிடித்துக்கொண்டு - தாகத்தாற் பாடிச் சோகப்படுவோருக்கு - எங்கள் ஆசிரிய பீடம் ஏன் முண்டு கொடுக்க முனைந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தக் கவிதையின் முடிவுரை இதுதான்.

“நண்பரிலே பனை தென்னை வாழையென்று
நல்ல விதங்களுண்டு - அவர்
நன்மையிலும் செய்யும் நன்றியிலும் இந்த
மூன்று விதங்களுண்டு.
நான்கண்ட நண்பர்கள் மூன்று வகையல்ல
நாலாம் வகையடியொ - அவர்
வாங்கிக்கொள்வார் பின்பு தூற்றிச் செல்வார்
இது வாழும் முறையடியோ?
இப்படிப்பட்டவர் நாட்டிற் பிறந்தது
என்ன குலமுறையோ - இவர்
நட்பினில் நான் செய்த
பாவம்தொலைவது எந்தத் தலைமுறையோ?

(மூலப் பிரதி இல்லாமல் - சுமார் பதினைந்து ஆண்டுகளின் முன் மனனஞ்செய்த ஞாபகத்தில் இவ்வடிகளை எழுதுகின்றேன். ஏதாவது சிறு தவறுகள் இருந்தால் வாசகர்கள் மன்னிப்பார்களாக.)

எழுதிய கவிஞரை மன்னிப்போம்: தவறை மறப்போம். ஆனால் இதன் தாக்கம் எத்தகையது என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கின்றேன்.

நானொரு தமிழாசிரியன். எனது வகுப்புக்களில் வாரந்தோறும் சஞ்சீவியை வாங்கி, வாசித்துப் பத்திரப்படுத்துங்கள் என்று மாணவருக்கு அறிவுரை வழங்கியுள்ளேன். காரணம் வாரவிமர்சனம், இலக்கியக் கட்டுரைகள், சிறுவர் பக்கம், சிறந்த கவிதைகள், குறள்வெள்ளம் என்பவற்றை மாணவர் வாசித்து அதை அறிவதோடு - பயன்படுத்தவும் வேண்டும் என்பதற்காக.

அதேசமயம் கண்ணதாசன், பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை, வாலி, வைரமுத்து போன்ற கவிஞர்களுடைய தத்துவ உயிரோட்டக் கவிதைகளை கொப்பிகளில் எழுதவைத்து - அவற்றை மாணவர்கள் பாடமாக்கும்படி செய்வதும் என் வழக்கம்.

அப்படி மாணவர்கள் பாடமாக்கி வைத்த கவிதைகளில் ஒன்றுதான் “சோற்றுக்கலைகின்ற...” என்ற கவியரசின் கவிதையும்.

சஞ்சீவியில் - தாம் பாடமாக்கி வைத்திருந்த அந்தக் கவிதையைக் கண்டதும், அந்த ஆண்டு 10 மாணவர்கள் திங்கட்கிழமை பத்திரிகையோடு பாடசாலை வந்தார்கள். “சேர் இந்தக்கவிதை - கண்ணதாசன் கவிதையா.... அல்லது.... (சஞ்சீவி பிரசுரித்த பெயரைச்சொல்லி) அவருடைய கவிதையா...?” என்று இழுத்தார்கள். இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்பது எனக்குத் தெரியவில்லை. அந்தப் பதினைந்து வயதுப் பிள்ளைகளுக்கு சஞ்சீவி ஆசியர்தான் என்ன சமாதானம் சொல்லப் போகிறாரோ...? அறிந்து, கண்டு, என்ற ஒற்றைச் சொற்களை வைத்து நுட்பத்தைக் கண்டு பிடிக்கக்கூடிய - அதுவும் கவிதையிற் கண்டுபிடிக்கக்கூடிய - வயதா அவர்களுக்கு.....?

இப்படியே தொடர்ந்தும் போகுமானால் - பழைய, சிறந்த கவிஞர்களின் பெயரையே இல்லாமல் ஆக்கி விடுவார்கள் இன்றைய கவிஞர்கள். எந்தக் கவிதை, எவர் பாடியதென்ற விவரமே இல்லாமற் போய்விடும். இது சஞ்சீவியின் வளர்ச்சிக்கும் - ஆரோக்கியமான கவிதை இலக்கிய வளர்ச்சிக்கும் - உகந்தது தானா?

தவிர, பிறகவிதைகளின் மெட்டுகளை அடியொற்றி எழுதும் ஒரு புதிய போக்கும் ஆளைப் பார்த்து ஆள்... என்ற கோதாவில் இன்று சஞ்சீவியில் ஆரம்பமாகி இருக்கிறது.

“சகலகலாவல்லி மாலை” மெட்டுக்கண்டு நாவற்குழி சி.ஜெயகணேசன் ஆசிரியர் வரைந்த மடல் கண்ட பின்பாவது ஆசிரியபீடம் விழித்திருக்க வேண்டும். குறள்கள், சகலகலாவல்லி மாலை, சினிமாப் பாடல்கள் என வளர்ந்த இந்தச் செயற்பாடு விடுதலைப் பாடல்களில் போய் நிற்கிறது. எதையெதை மாற்றிப் பாடுவதென்ற விவஸ்தையே இல்லாத இந்தக் கவிஞர்கள் சஞ்சீவிக்கு வில்லங்களை விலை கொடுத்து வாங்கித்தர முனைகிறார்களா என நினைக்கும்போது இரத்தம் சூடேறுகிறது.

கவிஞர்களே! உங்களுக்கு ஒன்று. இரவற் கவிதைகளைச் சொற்கள் மாற்றுவதன் மூலம் சொந்தங் கொண்டாட முனையாதீர்கள். தேசம் உங்களைத் தூக்கி எறிந்து விடும். சஞ்சீவி வாசகர்கள் கற்றுக்குட்டிகள் அல்லர். பல்லாயிரம் அறிவு ஜீவிகளும் அதில் அடங்குகிறார்கள். அவதானமாக எழுதுங்கள். சிறுகுழந்தைகள், மாணவர்கள், யுவதிகள், தாய்மார்கள் எனப் பலபேரும் அடங்குகிறார்கள். தயவுசெய்து அடக்கி வாசியுங்கள் - அவர்கள் வாசிக்கக் கூடியவற்றை - வழிகாட்டக் கூடியவற்றை எழுதுங்கள்.

சீறிவரும் சிராமங்களுக்கு மத்தியில் - இலட்சியந் தவறாமல் சஞ்சீவியை நெறிப்படுத்தும் ஆசிரிய பீடமே! தணிக்கைக் கத்தரிக்கோலுக்கு தங்கள் அலுவலகத்திற் தட்டுப்பாடா....? வேண்டாத இடங்களில் அதைக் கொஞ்சம் பாவித்து வெட்டிக்கொட்ட ஏன் தயங்குகின்றீர்கள்? குடாநாட்டு மக்களுக்கு, இன்றுள்ள ஒரேயொரு நியாய வெளிச்சம் உதயன் - சஞ்சீவிதான். அதற்கும் கரிபூச முனைந்தால் - முனைபவர்களை நாங்கள் மன்னிக்கப் போவதில்லை. எனவே பலபேரினதும் விமர்சனத்துக்குள்ளாகும் பகுதிகளில் கொஞ்சம் கவனஞ் செலுத்துங்கள்.

நிறைவாக - வித்துவான் ஐயாவுக்கும் ஒரு வேண்டுகோள். குயுக்தியார், மகுடியார் என்றெல்லாம் சந்தித்த நாங்கள் - அதுபோலவே தங்களையும் காண ஆசைப்படுகின்றோம். அரைத்தமாவை திரும்பத் திரும்ப அரைப்பதுபோல் - ஏன் ... இதழில் ... இடங்களில் வித்துவாட்டியை இழுக்கிறீர்கள்? அதைவாசிக்க உங்களுக்கே அலுப்பும், வெட்கமும் தட்டும். திருப்பி வாசித்துப் பாருங்கள். முட்டாள்தரமான - விவரங்கெட்ட - கேள்விகளுக்கு ஏன் பதிலெழுதுகிறீர்கள்? அவற்றைத் திருப்பி அனுப்புங்கள் அல்லது குப்பைக் கூடைக்கும் பஞ்சமா? அடுத்துவரும் இதழ்களில் தங்கள் பக்கங்கண்டு வாழ்த்தவேண்டும் என்ற ஆசையுடன் இந்த நீண்ட மடலை - நிறைவு செய்கிறேன். நன்றி.

*சாவகச்சேரி.* *த.தமிழ்மணாளன்.*

### சில தவறுகள்

'சஞ்சீவி'யின் ஏனைய பகுதிகள் பெரியவர்கள், சிறியவர்கள் எல்லோரினதும் கவனத்தை ஈர்க்குமளவிற்கு, உலகஉலா, மறுபக்கம், உள்ளும்புறமும் மற்றும் 'உதயன்' ஆசிரியத் தலையங்கங்கள் போன்றவை கவராதது ஒன்றும் வியப்புக்குரியதல்ல.

கடந்தவாரம் 'உலகஉலாவில்' சோவியத் யூனியனின் உடைவுடன் வார்ஸோ ஒப்பந்தமும் அர்த்தமற்றுப்போக, நேட்டோவுக்கும் அவசியமில்லாது போன பின், நேட்டோ ஒரு சர்வதேச பொலீஸ்படையாக நினைத்து செயல்படுவதை என்.பி.சீலன் நன்கு எடுத்துக்காட்டியிருந்தார். அக்கட்டுரையில் 'START II' ஒப்பந்தம் என்பது 'SALT II' என்றிருக்க வேண்டுமென நினைக்கிறேன். (STRATEGIC ARMS LIMITATION TREATY -தந்திரோபாய (அணு) ஆயுதங்களை மட்டுப்ப்படுத்தும் ஒப்பந்தம் இதற்கு முன் SALT.I என ஒன்று உண்டென்பதால், இதுII)

'மறுபக்கம்' பகுதியிலும் U.A.V. விமானம் சிங்களத்தில் கேலியாகக் கூறப்படும் வியாக்கியானம் ('உடட அவித்தின் வட்டினாவ') பற்றிய மொழிபெயர்ப்பு 'மேலே வந்தால் விழும்' என்றிருக்க வேண்டும்.

கதை, கட்டுரை, ஓவியம், சிறுவர்பகுதி போன்றவற்றில் புதியவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்பது உண்மையே. எனினும், கண்டிப்பாக, தரமும் ORIGINALITY யும் பேணப்படுவதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

கடந்த 27.03.1999 இதழின் 'மௌனமொழி - 27' ஓவியம் ரஷ்யாவிலுள்ள - ஆயுதப் பரிகரணத்தைக் குறிக்கும் - ஒரு சிலையினுடையதாகும்.

மேலும் எடுத்ததற்கெல்லாம் விளம்பரம் என்ற ஒரு விளம்பரக் கலாசாரத்தை உதயன் - சஞ்சீவி குடாநாட்டு மக்களிடையே வளர்ப்பதும் ஆரோக்கியமாகப்படவில்லை.

*சுதுமலை.* *சாந்தன்.*

**வாசகரே!**

**SALT-II எனப்படும் தந்திரோபாய அனு ஆயுதங்களை மட்டுப்படுத்தும் ஒப்பந்தம் (Strategic Arms Limitation Talk-II) அமெரிக்க - சோவியத் தலைவர்களினால் 1979இல் கைச்சாத்திடப்பட்டது. அமெரிக்காவிடமும் சோவியத் யூனியனிடமும் உள்ள அனு ஆயுத ஏவுகணைத் தளங்களைக் குறைப்பதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கம். எனினும் 1979இல் ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற சோவியத் இராணுவத் தலையீடு காரணமாக இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்க அமெரிக்க செனேட் மறுத்துவிட்டது.**

**START -II என்பது தந்திரோபாய அனு ஆயுதக்குறைப்பு ஒப்பந்தம் (Strategic Arms Reduction Treaty-II).**

**அங்கீகாரம் பெறத் தவறிய ஏனைய ஒப்பந்தங்களையும் உள்ளடக்கி இரு நாடுகளிடமும் உள்ள அனு ஆயுதங்களில் மூன்றில் இரண்டு பங்கை அழிப்பதற்கு வழிவகுக்கும். START -II ஒப்பந்தம் 1993இல் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் - ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்ஸின் ஆகியோரால் கைச்சாத்திடப் பட்டது.** (ஆ-ர்)

### இளவரசன் தமிழகத்தவரா?

கடந்தவார சஞ்சீவியில் சஞ்சிகை முழுவதும் கணனி முறையில் 'ஓவ்-செட்' அச்சில் பிரசுரமானது கண்டு வாசகர்களாகிய நாம் பேருவகையடைகிறோம். குடாநாட்டின் முதல் கணனிப் பதிப்பு வார இதழ் என்ற பெருமை சஞ்சீவிக்கு. சஞ்சீவியின் செய்திப் பகுதியையும் முற்றாக கணனிப் பதிப்பில் வெளியிட முடியாதா?

கணனிப் பதிப்பில் சஞ்சிகை கனதியாக இருந்தது. அச்சுத்தெளிவு, ஆழமான கட்டுரைகள், சிந்திக்க வைக்கும் விடயங்கள் என்று அனைத்தும் சிறப்பு.

யார் இந்த இளவரசன்? உண்மையில் அவர் எழுத்துத் துறையில் ஓர் இளவரசன்தான். கொட்டும் முடியின் கதையும், 'படையப்பா' படம் ஏற்படுத்தப்போகும் அரசியல் தாக்கங்கள் பற்றிய ஆய்வும் இளவரசன் விரைவில் எழுத்துத் துறையில் முடிசூடா சக்கரவர்த்தியாகப் போவதற்கு கட்டியம் கூறுகின்றன.

இளவரசனின் எழுத்தில் இந்தியத் தமிழ் 'பூந்து' விளையாடுகின்றது. அவர் எழுதிய இரு கட்டுரைகளும் தமிழகம் தொடர்புடையவை. ... தமிழகப் பத்திரிகைகளின் 'வெட்டு நறுக்கு' (CUTTINGS) பகுதியை அப்படியே மறுபிரசுரம் செய்துவிட்டீர்களோ என்ற சந்தேகம் எழுகின்றது. ஆகவே இளவரசன் தமிழகத்தவரா? அல்லது இலங்கையரா? என தெளிவுபடுத்துவது நல்லது. இக்கட்டுரைகள் பிரத்தியேகமாக 'சஞ்சீவி'க்கு வரையப்பட்டவைதானா?

அடுத்து கடந்தவார சஞ்சீவியில் பலரையும் கவர்ந்த மற்றையதோர் அம்சம் 'குரங்குமடை'. இது போன்ற சிறு சிறு தகவல்கள் மூலம் பல விடயங்களை வாசகர்களின் அறிவு விருத்திக்கு கொடுக்க முடியும்.

சிறுவர் சுடரில் 'பிராணிகள் உலகம்' நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. அதைப் படைக்கும் குகனுக்குப் பாராட்டுக்கள்.

*கொக்குவில்.* *ரி.வாசவன்.*

**வாசகரே!**

**உதயன்-சஞ்சீவியின் பிராந்தியச் செய்தியாளர் ஒருவரே 'இளவரசன்' என்ற புனைப்பெயரில் கட்டுரைகள் வரைகின்றார். சஞ்சீவிக்காக பிரத்தியேகமாக வரையப்பட்ட கட்டுரைகள் இவை.** (ஆ-ர்)

### ரஜினி ரசிகர்களுக்கு பயந்து சினிமாக் கட்டுரை பிரசுரம்?

'சினிமா'க் கட்டுரைகள் பிரசுரிப்பதில்லை என்கிறீர்கள். ஆனால் ரஜினியின் 'படையப்பா' சினிமா குறித்து ஒரு பக்க கட்டுரைக்கே இடம் கொடுத்துள்ளீர்களே! உங்கள் கொள்கையை மாற்றும் அளவுக்கு ரஜினி ரசிகர்களிடம் உங்களுக்கு அவ்வளவு பயமா?

*அரியாலை.* *ஆர்.ராஜு*

**வாசகரே!**

**ரஜினியின் 'படையப்பா' சினிமாப்படம் தமிழக அரசியலில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்கள், விளைவுகள், எதிர்பார்ப்புக்கள் ஆகியவை குறித்தே அக்கட்டுரை ஆராய்கின்றது. அது வெறும் சினிமாக் கட்டுரை அல்ல என்பது ஊன்றிப் படித்தவர்களுக்கு நன்கு புரியும் என நினைக்கிறோம்.** (ஆ-ர்)

### நம் மண்ணில் நமது வீரர்களுடன் மியண்டாட் விளையாடினாரா?

இப்பவெல்லாம் வாராவாரம் சஞ்சீவியைப் பார்த்து அழவேண்டியிருக்கிறது. உருக்கமாக, உணர்ச்சிகரமாக ஏதோ விஷயம் சஞ்சீவியில் இருப்பதாக நினைத்து 'கொலரை' தூக்கி விட்டுக்கொள்ளாதீர்கள். இந்த வித்துவான் இருக்கின்றாரல்லவா, தான் வாசகர்களை சிரிக்க வைப்பதாக நினைத்துக்கொண்டு வித்துவாட்டி தன்னை அடிக்கிறார், உதைக்கிறார் என்று ஒரே ஓலம் வைக்கிறார். இந்த ஓலத்தைக் கேட்டு எத்தனை நாளைக்குத்தான் சிரிப்பது? அதுதான் இப்பொழுது அழுகை வருகிறது. அட! நகைச்சுவைக்கு நாட்டில் எத்தனை விடயங்கள் இருக்கின்றன. இவர் ஒரே விஷயத்தை உடும்புப்பிடியாக பிடித்து வைத்திருக்கிறாரே! இந்த ஓலம் வைக்கிற 'ஸ்டைல்' காணும் ஐயா. வாசகர்கள் எல்லோரும் கட்டிப் பிடித்து ஒப்பாரி வைத்து அழுமுன் இப்படி ஒரே ராகம் பாடுவதை வித்துவான் நிறுத்த வேண்டும். பல ராகங்கள் கலந்து ராகமாலிகையாக இழுத்து விட்டால் நாங்கள் அதை ரசிப்போமே!

வாராவாரம் வரும் கோபியின் கிரிக்கெட் கட்டுரை மிக நன்றாக உள்ளது! நமது யாழ். மண்ணில், நமது வீரர்களுடன் மியாண்டாட் விளையாடியது தெரியாமல் இருக்கிறோமே என்று எம்மை வெட்கப்பட வைத்த டையனை பாராட்டாமல் இருக்க முடியுமா?

*அரியாலை.* *பிரசன்னா.*

### கவர்ச்சி காட்டுவதற்கு தயங்குவது ஏனோ?

உதயத்தில் வந்துதிக்கும் உதயன்-சஞ்சீவியே! அஸ்தமனம் நாடாது நாளும் இங்கு உதித்திட எம் வாழ்த்துக்கள்.

கணனிப் பதிப்பில் காலடிவைத்தும் இன்னும் ஏன் கவர்ச்சிகளை காட்டத் தயங்குகிறாய்? அறிவியலுக்கு கவர்ச்சியும் தேவைதானா என நீ நினைக்கலாம். ஆனால் அதுவல்ல. யாவருக்கும் ஏற்றபடி வெளியாகும் சஞ்சீவியே உனக்கு ஓர் அழகு வேண்டாமா? அதுதான்! வகை வகையான வடிவங்களில் கணனியிலே - கலர் கலராக எழுத்துக்கள், படங்கள் அனைத்தையும் பதிப்புச் செய்யலாமே! மேலும் பொது அறிவு மற்றும் நுண்ணறிவு விடயங்களை தற்போதைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு வெளியிட ஏன் தயங்குகின்றாய்?

கணனி யுகத்திலே கணனிப்பதிப்பில் வெளிவரும் நீ ஏன் இதுவரை யாவரும் அறியத் துடிக்கும் கணனிகள் பற்றிய விடயங்களை வெளியிடவில்லை? கணனி பற்றிய அறிவை மாணவர்களிடையே வளர்ப்பதற்காக அதற்கு ஒரு பக்கம் ஒதுக்கலாம்தானே?

மேலும் வித்துவான் பதில்கள் தொடரட்டும். ஆனாலும் சூசகமாய் பதில் கொடுக்கும் சூக்குமங்கள் குறையட்டும்.

*அச்சுவேலி.* *எஸ்.ரி.மதி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org